www.padippakam.com

# புதிய கோடாங்கி

ஏப்ரல் 2006

விலை ரூ.15.00



படிப்பகம்

www.padippakam.com

# தீட்டுச்சொல்

● பூவிழியன்

●

ஊருக்கெல்லாம் பறையடிச்சி
தினம் ஒத்த ரூவா சேத்துவச்சேன்

அந்த ரூவா காசுலதான்
என்னோட
ஒரு பயலயும் படிக்கவச்சேன்

பறையடிக்கும் நேரத்துல
பக்கத்தில அவனிருந்தா
பாதி மனசொடிஞ்சு
பாழா போயிடுவான்னு

யாருக்கும் தெரியாம
ஊருக்கு அனுப்பிவச்சேன்

●

பறையடிக்க மறுத்ததிற்கு
பாண்டியனை சுட்ட சாதி

பறையனுங்க படிச்சாக்க
ஒத்துக்காது அவுங்க சாமி
அதனால
செத்த மாடு தூக்கி
சேத்து வச்ச காசுல தான்

வெளியூரு அனுப்பி வச்சு
வேலை கிடைக்க
படிக்க வச்சேன்

●

பிணம் எரிக்கப் போகும் போதும்
எழவுசேதி சொன்னபோதும்

கிடைச்ச காச அப்படியே
உடைக்காம அனுப்பி வச்சேன்

உசுரோட இருக்கும் போதே
அவன் உசர ஆசப்பட்டேன்

●

மீசை வளர்த்தாலே
பொசுக்குற சாதியில

மீச வச்ச ஆபிசரா
என்மகன் வர கனவு கண்டேன்

கட்டிப் போட்டு அடிச்ச சாதி
அவன் முன்னாடி கைக்கட்ட
முன்னூறு நாளுமே
முழிச்சுருந்து நெனச்சுக்கிட்டேன்

●

ஒருநாள்
கலெக்டரா ஆயி வந்தான்
கண்ணீர வரவழச்சான்

ஆனா
உசுரே போனதடா
ஊரே சொன்னபோது

"என்ன பாவம் பன்னுனமோ
நமக்கு பறையன் கலெக்டரா
வந்திருக்கான்"

www.padippakam.com


புதிய கோடாங்கி

மலர் 5 - இதழ் 10
ஏப்ரல் 2006

*ஆசிரியர்*
ஆட்ரி ஜேனட் ஜோசப்

முகப்பு ஓவியம்
யாக்கன்

*சந்தா*
ஆண்டுக் கட்டணம்
- ரூ. 150/-
வாழ்நாள் கட்டணம்
- ரூ. 1,000/-

அயல் நாட்டினருக்கு
தனி இதழ்: **US $ 2**

ஆண்டுக் கட்டணம்
**US $ 20**

*விளம்பரம்*
அரைப்பக்கம்
ரூ. 10,000/-

முழுப்பக்கம்
ரூ. 20,000/-

பின்/உள் அட்டை
ரூ. 50,000/-



*தொடர்பு முகவரி*

பு.எண் 1/2 ப. எண் 53A
முதல் மாடி
முதல் பிரதான சாலை
சாஸ்திரி நகர்
சென்னை 600020
கைபேசி: 93800-63597
**puthiakodangi@yahoo.co.in**


மார்ச் 13ல் தமிழகத்தின் 68 தாலுக்காக்களில் தலித் நிலவுரிமை இயக்கத்தின் ஆர்ப்பாட்டமும் கோரிக்கைப் பேரணியும் நடைபெற்றது. சுமார் இரண்டரை லட்சம் மக்கள் கலந்து கொண்டனர்.

கரூர் மாவட்டத்தில் அரவக்குறிச்சி, கரூர், கிருஷ்ணராயபுரம் மற்றும் குளித்தலை ஆகிய நான்கு வட்டங்களில் மட்டும் 20000 பேர் கலந்து கொண்டுள்ளனர். ஸ்வாதி பெண்கள் அமைப்பினர் பெருமளவில் கலந்து கொண்டனர்.

அதே போல் திருவண்ணாமலை மாவட்டம், வேலூர் (அரக்கோணம்), திண்டுக்கல் (வேடசந்தூர்) திருவள்ளூர் (பள்ளிப்பட்டு, திருத்தணி, பென்னேரி) கோயம்புத்தூர் (பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை) மதுரை, விருதுநகர் மாவட்டங்கள் சிவகங்கை, ராமநாதபுரம்,பெரம்பலூர், ஈரோடு, தர்மபுரி கிருஷ்ணகிரி ஆகிய மாவட் டங்களிலும் சிறப்பான பங்கேற்பு இருநதது. பங்கேற்ற வட்டங்களும், வட்ட அளவில் தலைமையேற்றவர்களின் பெயர்களும் தனியாக வெளியிடப் பட்டுள்ளன. புகைப்படங்களில் சில இவ்விதழில் வெளிவந்துள்ளன. சில அடுத்த இதழிலும் வெளியிடப்படும்.

தலித் நிலஉரிமை இயக்கத்தின் டிசம்பர் 12-2005 மற்றும் மார்ச் 13-2006ல் நடந்த மாவட்ட, வட்ட அளவிலான கோரிக்கைப் பேரணிகள் மக்களிடையே பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளன. மக்கள் மேலும் ஆர்வமாக விபரங்களை தெரிந்து கொள்ள விரும்புகின்றனர்.

தலித் அரசியல் அமைப்புகளும் தலித்நிலஉரிமைஇயக்கத்தின் செயல்பாடுகள் காரணமாக பத்து வருடங்களில் இல்லாத அளவு, பஞ்சமி நில மீட்பை மட்டுமாவது கருத்தில் கொண்டு மாநாடுகள் நடத்தியுள்ளனர். சிறிதும் பெரிதுமான இயக்கங்கள் யாவுமே இது குறித்து பேசும்படி நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர் என்பது தலித் நில உரிமை இயக்கத்திற்கு வெற்றி.

மதுரை வழக்கறிஞர் ரஜினி சமீபகாலமாக பஞ்சமி நிலம் குறித்து அநேக வழக்குகள் வருவதாகக் குறிப்பிட்டார்.

மேலும் பஞ்சமி நிலத்தை வைத்திருப்பவர்கள் அதை விற்க முடியாமலும் வாங்குபவர்கள் தயங்கும் சூழலும் உண்டாகியுள்ளது.

நில உச்சவரம்பு சட்டம் மறு பரிசீலனைக்கு உட்படுத்தப்படுமா என்ற அச்சம் பெரிய நில உடைமையாளர்களுக்கும் எழுந்துள்ளது.

இந்நிலையில் அடுத்த கட்டமாக தலித் நில உரிமை இயக்கம் வெவ்வேறு திட்டங்களையும் வழிகளையும் கையாண்டு நிலத்தைப் பெற்றே தீருவது என்று உறுதியுடன் நிற்பது பாராட்டுக்குரியது

உளவுத்துறையினரின் அறிக்கைகள் அரசின் கவனத்திற்கு இவற்றைக் கொண்டு சேர்த்திருப்பினும் தலித்துகளுக்கு நிலம் வாழ்வாதாரம், அதை வழங்கிட முயற்சிப்போம் என்ற எண்ணத்திற்கு பதிலாக யார் மக்களைத் தூண்டி விடுவது அவர்களை எப்படியெல்லாம் ஒடுக்கலாம் என்று அதிகாரத்தில் உள்ளவர்கள் ஆலோசனை செய்து கொண்டிருக்கலாம். அரசியல் கட்சியினரின் தேர்தல் அறிக்கைகள் தலித் மக்களின் ஆதங்கத்தை எதிர்ப்பார்ப்பைப் பூர்த்தி செய்யுமா என்பது இவ்விதழ் வெளிவரும் சமயத்தில் தெரிந்திருக்கும்.

www.padippakam.com

இடையில் தலித் ஆதார மய்யம், தலித் நிலஉரிமை இயக்கத்தின் செயல்பாடுகளை ஆதரிக்கும் வண்ணம் மாபெரும் கலைவிழா நடத்தியது. அதில் தலித் நில உரிமையை மய்யப் பொருளாக்கி விவாதித்து ஊக்கம் அளித்திருப்பது பாராட்டுக்குரியது. மென்மேலும் பல நிறுவனங்களும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இயன்ற வழிகளில் ஊக்கமளித்தால் கோரிக்கைகள் நிறைவேறும் வாய்ப்புள்ளது.

டிவி ரேடியோவை அடமானம் வைத்து நோட்டீஸ் அச்சடித்துள்ளர் திண்டுக்கல் மாவட்டத்தைச்சேர்ந்த தலித் சிவா (இவர் இதயநோயால் பாதிக்கப்பட்டவர்)விருதுநகரில் பாக்கியராஜ் தன் வயலில் விளைந்த எட்டுமூட்டை நெல்லை விற்று ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளார் மாவட்டம் முழுதும். திருவண்ணாமலை சிவக்குமார் கடனாளியாய் நின்று ஆர்ப்பாட்டத்தைச் சந்தித்தார். சிவகங்கை வெரோணிக்காவின் மீது காவல் துறையின் அச்சுறுத்தல் தொடர்ந்த வண்ணமுள்ளது. சந்தனமேரி சாதி ஆதிக்கம் மிகுந்த திருவாடானையில் 500க்கும் மேற்பட்டோரைத் திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளார். உடுமையில் சுகந்தி சிறுபெண்ணாய் இப்போராட்டத்தில் பங்கேற்றுள்ளார். பொள்ளாச்சியில் காந்தி ஆசிரமத்தின் ரங்கநாதனும் ஜெகதீசனும் தீவிரமாகப் பணியாற்றியுள்ளனர். பெரம்பலூரில் கங்கா குறுகிய காலத்தில் தீவிர களப்பணி யாற்றியுள்ளார். பாஸ்கரன், கிறிஸ்டி, சாமி, லலிதா, ராதா, பரதன், கரியமால், கருப்பன், கிறித்துதாஸ் காந்தி, சாந்தி என உயர்மட்டக்குழு மிகுந்த ஈடுபாட்டுடன் செயல் பட்டுள்ளது. கரூர் மணிவேல் பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று பிரச்சாரத்தில் ஈடுபட்டார். விழுப்புரம் மாவட்டத்திலும் கடலூர் மாவட்டத்திலும் பழங்குடி இருளர்களை திரட்டி எட்டு தாலுக்காக்களில் நில்உரிமை இயக்கத்தை பங்கு பெறச் செய்தார் பேரா.கல்விமணி அவர்கள். திருநெல்வேலியில் இலோசியஸ் தூத்துக்குடியில் பேச்சிமுத்து ஆகியோர்களும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். புதுகோட்டையில் கருப்பையா சந்திரகலா, இருதய மேரி, மீரா, கலைமகள் பாண்டி ஆகியோர் கடின உழைப்பு செய்திருக்கின்றனர். தருமபுரியில் புத்தமணி எனும் இளம் பெண் தலைமையில் போராட்டம் நடந்தது.

சன்னா, குடியரசன்., சிவகாமி, கோபு, நிகழ், ரவிக்குமார் போன்றோர் கருத்துத்தளத்தில் பெரும்பங்காற்றியுள்ளனர்.

இவ்வாறு வறுமையிலும் கொடுமையிலும் வாழும் மக்கள் பலவகையில் கிளர்ந்தெழுந்து, அஞ்சாது, துணிவுடன் தங்கள் உரிமைக்காக ஜனநாயக வழிகளை மேற்கொண்டு நடத்திய ஆர்ப்பாட்டத்தை விரைவில் ஒரு கோடி மக்கள் இயக்கமாக மாற்றுவதே தலித் நிலஉரிமை இயக்கத்தின் லட்சியம்.

முதற்கட்டமாக ஊராட்சி பெண் தலைவர்கள் (தலித்தல்லாதாரும் + தலித்துகளும்) இணைந்து பஞ்சமி நில மீட்புக்காக கோரிக்கைகள் ஏந்தி ஊர்வலமாகச் சென்றனர். ஆஸி. பெர்னான்டஸ் அவர்களின் கடின உழைப்பு இதன் பின்னணியில் உள்ளது.

தொடர்ந்து பல்வேறு அமைப்புகளும் ஆதரவு தெரிவிக்கக் கோருகிறோம்.

தலித் நிலஉரிமை இயக்கத்திற்கு உதவி செய்ய விரும்புவர்கள் புதிய கோடாங்கி முகவரியில் செல்வநாயகம் அவர்களை தொடர்பு கொள்ளலாம்.

**பா. செல்வநாயகம்**

தொடர்பு எண் : 93800 63597

www.padippakam.com

# உள்ளே...


| | | |
|---|---|---|
| சைக்கிள் - சிறுகதை | கோவேத சுவாமிநாதன் | 4 |
| இந்துத்துவாவின் தேசிய ஒருமைப்பாடு யாத்திரை | நிகழ் அய்க்கண் | 9 |
| மார்ச் 2006 புதிய கோடாங்கி பதிவுகள் | | 12 |
| புதியவர்கள்: 2. கருவிகள் | சிவகாமி | 19 |
| மகிளிர் தினம்-பெண்ணின் பெருமை | சிவகாமி | 23 |
| தலித் நிலவுரிமை இயக்கம்-அரசியல் கட்சிகளின் கவனத்திற்கு | | 26 |
| நூல் மதிப்புரை - தொப்புள் கொடி | விழி. பா. இதயவேந்தன் | 29 |
| தப்பாட்டம் | ப்ரதிபா ஜெயச்சந்திரன் | 31 |
| நரபலி தெய்வங்கள்-திருவிழாக்கள் | ப்ரதிபா ஜெயச்சந்திரன் | 33 |
| வரலாற்றை மொழிதல் | ஸ்டாலின் ராஜாங்கம் | 34 |
| புரட்சியாளர் ரோசா மாக்கியலே | தொகுப்பு : தலித் ராமதாஸ் | 38 |
| புதிய ஆரம்பங்கள் -சிறுகதை | புதிய மாதவி | 41 |
| தமிழ் சினிமாவும் தலித்துகளும் | கோபு | 46 |
| தமிழ்க் கவிதையில் சூழலியல் பதிவுகள் | அன்பாதவன் | 49 |
| கேள்வி பதில் | முனிமா | 57 |
| தலித் நிலவுரிமை இயக்க் கோரிக்கை பேரணி | | 59 |

www.padippakam.com

# சைக்கிள்

● கோவேத சுவாமிநாதன்

சிறுவாச்சி மதுரை மாவட்டத்தின் வடக்கே இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சிதறிக் கிடக்கும் சிறு மலைக் குன்றுகளுக்கு இடையே தென்புறப் பள்ளத் தாக்கில் அமைந்துள்ள ஒரு சிற்றூர். அதனைச் சுற்றிலும் சுமார் பத்துக் பதினைந்து கிலோமீட்டர் தொலைவிற்குள் இருபதிற்கும் மேற்பட்ட சிற்றூர்கள் உண்டு. அவற்றில் பெரும் பாலானவற்றை சிற்றூர்கள் என்று சொல் வதைவிட குடியிருப்புகள் என்று சொல்வது தான் பொருத்தமாக இருக்கும். ஒத்த வீடு என்ற பெயரில் பத்து வீடுகள், வலயன் தூக்கு என்ற பெயரில் ஐந்து குடிசைகள் கும்மப் புளிய மரம் என்ற பெயரில் இருபத்திஐந்து தகர வீடுகள் முத்தன் தாவு என்ற பெயரில் இருபது குடிசைகள் மேட்டுக்கடவு என்று அழைக்கப்படும் இரண்டு கூரைவீடுகள் இப்படியே சொல்லிக் கொண்டு போகலாம். அந்தச் சிற்றூர்களுக்கும் குடியிருப்புகளுக்கும் இல் லாத பேரூராட்சி என்னும் தகுதி சிறு வாச்சிக்கு மட்டுமே இருந்தது. நாலாபுறங்களில் இருந்தும் தார்ச் சாலைகளும் வண்டித் தடங்களும் ஒற்றையடிப் பாதைகளும் புறப்பட்டு வந்து அதைத் தொட்டுக் கொண்டிருந்தன. இப்படி ஊர்களுக்கெல்லாம் மையத்தில் அமைந்திருந்ததால் அரசு அங்கே ஒரு மேல் நிலைப் பள்ளியை ஏற்படுத்திக்கொடுத்திருந்தது. முப்பது ஆசிரியர்கள், ஆறு முதல் பனிரெண்டு வகுப்புகள் சுமார் ஆயிரத்து இரு நூறு மாணவர்கள் என்னும் தகுதியுடன் சிறு வாச்சிக்கு அடையாளமாகவும், அலங்காரமாகவும் இயங்கியது அந்தப் பள்ளி.

ஊர்களைச் சுற்றிலும் மலைகளும் குன்றுகளும் இருக்கத்தான் செய்தன. ஆனாலும் அவற்றால் ஊர்களுக்கு நிலையான பயன் எதுவுமில்லை. மழையை நம்பித்தான் அந்த வட்டாரத்தில் விவசாயம் நடந்தது. பெரும்பாலும் கம்பு, சோளம், மொச்சை தட்டான், காணம் என்று வறட்சியைத் தாங்கி வளரும் காட்டுப் பயிர்கள் தான் அதிகம். வருடமெல்லாம் வல்லாங் காட்டைக் கட்டி அழுது கால்முளைவற்றிச் சாவதை விடவும் சும்மா இருப்பது மேல் என்று எண்ணினர் சிலர். சிலரோ கலப் பையையும் மேழியையும் வெட்டி விறகுக்குப் போட்டுவிட்டு தத்தம் காடுகளில் மாங்கன்றுகளை நட்டுத் தோப்பாக்கினர். ஓரிருவர் செம்மறிக்கிடாய்களை இழுத்துக் கொண்டு திரிந்தனர் .ஒரு சிலர் கிணறுகள் அகழ்ந்து மின்சார இயந்திரம் பொருத்தி நீர் இறைத்துப் பார்த்தனர். எது எப்படி இருந்தாலும் அந்த வட்டாரத்து மக்கள் வாழ்க்கை விருத்தியாக இல்லை. தோட்டந்துரவுகள் என்றும் தோப்புகள் என்றும் வைத்திருக்கும் வசதியானவர்களையும் வறுமை ஒரு ஆட்டு ஆட்டிப் பார்த்துவிடும். ஆனால் அவர்கள் இங்கே அங்கே விழுந்து புரண்டு எப்படியோ எழுந்து நின்று விடுவார்கள்.

கூலி வேலைக்குப் போகிறவர்கள் பாடுதான் பெருந்திண்டாட்டம். வயிறு கடிக்கக் கடிக்க அவர்கள் கரடுகளில் போய்க் காரைமோட்டுக்களையும் பொத்தக் கள்ளி மரங்களையும் வேர்ப்பறியாய்ப் பறித்தெடுத்து இருக்கப்பட்டவர் வீடுகளில் அடுப்பெரிக்க கொண்டுபோய் போடுவர். சோளக் குருணையையோ, கம்புப்புல்லையோ பயறு பச்சைகளையோ விலையாகப் பெற்றுக்கொள்வர் அப்படிக் கிடைக்கும் காணத்தையும் தட்டாணையும் மொச்சையும் அவித்துத் தின்று வயிறு முட்டப் பச்சைத் தண்ணியைக் குடித்துப் பொழுதைக் கழிப்பர். வேலிகளிலும் ஓடைப் போக்குகளிலும் விளைந்திருக்கும் சுண்டக்காய்களைப் பறித்து தலைச் சுமையாக மதுரைக்குக் கொண்டுபோய் தெருத் தெருவாகக் கூவி விற்று வருவோரும் விற்க முடியாத நிலையில் கொடுப்பதைக் கொடுங்கள என்று வலியப் போட்டுவிட்டு வருவோருமாய் பெண்கள் அவதிப்பட்டனர். கண்கள் குழிவிழுந்து, காதெல்லாம் பஞ்சடைந்து குறிஞ்சிக் குச்சியாய் ஒற்றையடிப் பாதைகளில் அவர்கள் நடந்து போவதைப் பார்த்தால், கல்லும் கண்ணீர்விடும். இளைஞர்களும் கிழவர்களும் நாய்களைப் பிடித்துக் கொண்டு மலை யடிவாரத்திற்கு போய்க் குழிமுயல், நரி, பூனை கீரி, எலி போன்றவற்றை வேட்டையாடி ஓடைகளில் போட்டுச் சுட்டுத்தின்பர். வேட்டைக்கறி மிச்சம் விழுந்தால் வீட்டிற்குக்கொண்டு வருவர். அதற்கும் போதிய மசால் பொருட்கள் இல்லாத நிலையில் உப்பு மிளகாய் வெங்காயம் போன்றவற்றை மட்டும் அம்மியில் வைத்து ஒன்றிரண்டாய்த் தட்டிப்போட்டுக் கறியைச் சுண்ட வைத்துச் சாப்பிடுவர் அப்படியே மரப் பொந்துகளுக்குள். அப்பிக் கொண்டிருக்கும் கம்பளிப் பூச்சிகளைப் போல் குடிசை களுக்குள் நுடக்கிப் படுத்துக் கொள்வர்.

இப்படிச் சிறுவாச்சி வட்டாரச் சிற்றூர்களில் வாழும் மக்களை வறுமை விதவிதமாக தாக்கி தகர்த்துப் போட்டிருந்தாலும் ஆடைக்கும் கோடைக்கும் செழிப்பாக வளரும் சீமைக் கருவேலா மரம்போல் சாதிப்பித்தும் தீண்டாமையும் அவர்களின் சிந்தையிலும் சொல்லிலும் செயலிலும் சோங்காக வளர்ந்து கொண்டிருந்தன. கோவணத்துணியைக் கசக்கிக் கட்டாமலும் கம்புக்கூட்டு முடியை மழிக்காமலும் ஆடுகளை இழுத்துக்கொண்டு காடென்றும் மேடென்றும் பாராமல் அலைந்து கஞ்சிக்குச் செத்து குடலெடுத்த கோழிபோல் காட்சியளிப்பவனும் புகையிலைக் கட்டையை பத்துப் பைசாக் கொடுத்து வாங்கிக் கடைவாயில் திணித்துக் கொள்ளத் துப்பில்லாதவனும்

ஏ... பறக்கழுதைகளா திமிரு புடிச்சு திரியிறைகளா... நீங்க எங்க இருக்கனுமோ அங்க இருக்கனும், இல்லே, குடிசையோட வச்சுக் கொளுத்திப்



படிப்பகம்

www.padippakam.com

போடுவோம். என்று முகமென்றும் பாராது இறங்கும் ஈரையும் பேனையும் சுத்தப்படுத்தும் வகைதெரியாமலும் நுரைத்துப் போய் கிடக்கும் தலையில் தேய்க்க ஒரு சொட்டு எண்ணெய் வாங்க வக்கில்லாத பெண்களும் கூட ஏ... பள்ள நாயே ... தள்ளிப் போ நாயே என்று தண்ணீர் பிடிக்கவிடாமல் அடித்து விரட்டுவர். கூச்ச நாச்சமில்லாமல் கொச்சை வார்த்தைகளைப் பேசுவர் இவர்கள் எல்லாம் சிறுவாச்சி வட்டாரத்தில் தங்களை உயர்ந்த சாதிக்காரர்கள் என்று பவுசு பண்ணிக் கொண்டிருப்பார்கள். படிப்பறிவற்ற தற்குறிகள் தான் இப்படி என்றால் படித்த பாமரர்களாய் கொண்டை களையும் குனுக்குகளையும் சங்கிலிகளையும் வளையல்களையும் வண்ண வண்ணச் சேலைகளையும் அணிந்து அழகு காட்டித் திரியும் டீச்சர்களும் வாங்கு கிற சம்பளத்திற்காவது வேலையைப் பார்க்க வேண்டு மென்ற மனசாட்சியோ உத்தியோ ஒழுக்கமோ சிறிது மில்லாமல் பள்ளிக் கூடத்துக்குள் நுழைந்து விட்டால் தன் சாதி காரர்களைச் சேர்த்துக் கொண்டு சதா அரசி யல் பண்ணிக் கொண்டு திரியும் சார்களும் தங்கள் சிந்தை யில் ஏதேனும் ஒரு வகையில் சாதித் துவேசத்தை வைத் துக் கொண்டுதான் இருந்தார்கள்.

மணி அடித்தாகி விட்டது. பஸ்ஸைப் பிடிக்க தயாரான கனகவல்லி டீச்சர் மேஜை மேல் இருந்த சாப்பாடு டப்பாவை எடுத்து தோள் பையில் திணித்தபடியே மீனாட்சி டீச்சரைப் பார்த்தாள். மீனாட்சி டீச்சரோ ஆசிரியர் அறையில் இருந்த கண்ணாடியின் முன்னின்று உடையைச் சரிசெய்து முகத்திற்குப் பவுடர் அப்பிக் கொண்டிருந்தாள். பள்ளிக் கூடம் விட்டு பஸ்ஸிற்கு புறப்பட்டு விட்டாள் என்றால் இலட்ச ணமாகத்தான் வெளியேறுவாள். அதில் பல டீச்சர்களுக்கு எரிச்சல், இதுல ஒண்ணும் குறைச்சல் இல்ல. எத்துப்பல்ல வச்சுகிட்டே இந்த மினுக்கு. அது சொஞ்சம் அடக்கமா இருந்துட்டா அம்மாவ இந்த வட்டாரத்தில் பிடிக்க முடியாது என்று அவர்கள் மனத்திற்குள் நினைத்துக் கொண்டாலும் வெளியே சொல்லமாட்டார்கள். ஏதோ நினைப்பில் மீனாட்சி டீச்சர் அன்று சற்று அதிகமாகவே பவுடரைப் பூசிக் கொண்டாள். பார்க்கிறவர்கள் சிரிக்கட்டும் என்று நினைத்துக் கொண்ட கனகவல்லி அது பற்றி ஒன்றும் பேசவில்லை. ஆசிரியர் அறையின் படிக்கட்டில் நின்றபடியே பஸ் வரும் திக்கையே பார்த்துக் கொண்டிருந்தவள்.

பாருங்க டீச்சர்... இந்த எஸ்சி கழுதைங் களுக்கு சைக்கிள் குடுத்தாலும் குடுத்தாங்க... டீச்சர் நிக்கிறாங்களேன்னு ஒரு மருவாதி இல்லாம... நம்ம முன்னாலேயே திமிரா ஓட்டிகிட்டுப் போகுதுங்க... என் றாள் கனகு. அவளுக்குப் பதில் சொல்வது போல்,

ஐய்ய... அது பரவாயில்ல டீச்சர் பாக்கு றதுக்கு ஒண்ணுந் தெரியாதவளுக போல தலையைக் கவுந்துகிட்டு போறாளுகளா... நம்ம, கண்ணு மறைஞ்சு அவளுக ஊர்ப்பாதையக் கூடிட்டாளுகண்ணா, கூடப் படிக்கிற பயலுக கிட்ட சைக்கிளைக் குடுத்து ஓட்டச் சொல்லி பார்ல ஒக்காந்துகிட்டுப் போறாளுக டீச்சர். ஒழுக்கங்கெட்டவளுக... என்றாள் மீனாட்சி. இரண்டு பிள்ளைகளுக்குத் தாயான பிறகும் கெமிஸ்டரி சாரை கொக்கி போட்டுக் கொண்டு திரியும் நீயா இப்படி பேசுகிறாய் என்று கனகுவின் அடிமனத்தில் ஒரு மின்னல் அடித் தது.

ஐய்யய்ய... என்ன இப்புடிச் சொல்றீக... பள்ளிக குடத்துப் பேரே நாறிப்போகும் போல... இத ஏன் எட்மாஸ்டரிட்ட சொல்லல... இன்னேரம் அவளுகளையும் அந்தப் பயல் களையும் சீட்டக் கிழிச்சிருக்க வாணாமா... என்றாள் கனகு.

சொன்னனே ... மூனு தடவ சொல்லி யிருக்கேன். அதுக்கு அவரு என்னானா பள்ளிக்குடத்துக் வெளிய நடக்குறதுக்கு எல்லாம் நாம கூப்பிட்டுக் கேட்டுகிட்டு இருக்க முடியாதுங்குறாரு... என்றாள் மீனாட்சி. அவள் பிஜி அசிஸ்டண்டுகளிலே சீனியர். தனக் குத்தான் அடுத்து தலைமை ஆசிரியர் பதவி வரும் என்ற நினைப்பில் கொஞ்சம் அதிகபட்சமாக நடந்து கொள்பவள். தான் எதைச் சொன்னாலும் கருத்தில் கொள்ளாமல் தன்னை வேண் டும் என்றே உதாசீனம் செய்கிறார் எட் மாஸ்டர் என்கிற வருத்தம் அவள் மனத்தில் ஆறாத காயமாக இருந்து வந்தது.

இது பள்ளிக்குடத்துக்கு வெளிய நடந்தாலும், இந்த வட்டாரத்தில் இருக்கிற ஊர் களில் எல்லாம் நம்ம பேரு கெட்டுப் போகுமில்ல அப்புறம் மரியாதக்காரங் கள்ளாம் இங்க புள்ளைகளைக் கொண்டு வந்து சேப்பாங்களா... இது அவருக்கு ஏன் புரிய மாட்டீங்கிது டீச்சர் ... என்றாள் கனகு. மீனாட்சி டீச்சர் ஒப்பனை முடித்து வெளியே வந்ததும் பள்ளிக் கூடத்துப் பணியாளர் வேல் முருகனைச் சத்தமிட்டுக் கூப்பிட்டாள் கனகு. அவன் ஒழுகிக்கொண் டிருக்கும் குடிதண்ணீர்த் தொட்டியை அடைக்கப் பொல்லாத பாடுபட்டுக் கொண்டிருந்தான். அதனால், அவனிடம் நாங்க போறோம் ரூமப் பூட்டிக்க என்று சத்தமாச் சொன்னாள். இருவரும் பள ளிக்கு முன்னாள் இருக்கும், மரத்தடியை நோக்கி நடந்தனர்.

நானும் கெட்மாஸ்டரிடம் சொல்லட்டுமா என்று ஆலோசனை கேட்டாள் கனகவல்லி.

நான் சொல்லியே கேட்கலை, இவள் சொல்லிக் கேட்கப் போறாராக்கும் என்று நினைத்துக் கொண்ட மீனாட்சி

நீங்க இதுக்கு எப்படி நடவடிக்க எடுக் கச் சொல்லுவீங்க என்று கேட்டாள்.

எப்பிடியா ... பிரேயர்ல நிக்க வச்சு இவளுகள எல்லார் முன்னாலையும் புளிய வெளாருல நாலு சாத்து சாத்தினாத்தான் அடங்கு வாளுகன்னு சொல்லுவென் என்றாள் கனகு. அவள் கெட்மாஸ்டரின் சாதிக்காரி. சுமார் முப்பது பேர் வேலை பார்க்கும் அந்தப் பள்ளி யில்



படிப்பகம்

www.padippakam.com

ஒரு பத்துப் பேர் அவள் சாதிக்காரர்கள். அவர்களுக் கிடையே சிறுசிறு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் ஒருவரை ஒருவர் விட்டுகொடுக்க மாட்டார்கள். அவர்க ளுக்குள் ஒரு ரகசியமான உறவு நூலாய் ஓடிக்கொண்டி ருந்தது. அந்தப் பத்துப் பேர் வீடுகளில் ஏதேனும் நல்லது கெட்டது நடந்தால் அந்த வீடுகளுக்குப் போய் வரு வதற்கு சக ஆசிரியர்களைத் திரட்டுவதில் முன்னிற்பவள் கனகவல்லி தான். அவளுக்கு அப்படி ஒரு சாதிப்பற்று அந்த தைரியத்தில் மீனாட்சியை விடவும், தனக்கு எட மாஸ்டரிடம் செல்வாக்கு இருக்கிறது என்கிற நினைப்பு அவளின் அடிமனத்தில் இருந்து கொண்டே இருந்தது. அப்படி ஒரு பெருமை கனகவல்லி டீச்சர் மனத்தில் இருக்கிறது என்பது மீனாட்சிக்கும் தெரியும். தான் சொல்லி நடக்காதது, இவள் சொல்லி நடக்கவேணுமா என்று பொறாமையும் அவள் மனத்திற்குள் அரும்பு கட்டி இருந்தது.

அப்படியா சொல்றீங்க ... அப்பிடியே இவளுகள கேவலப் படுத்தினாலும் ரெண்டு நாளைக்குத் தலைய கவுந்துகிட்டுப் போ வாளுக. பிறகு பழையபடி... எல்லாத் தையும் உதுத்ருவாளுக ... என்று அணைபோட்டாள்.

முந்தி நாமெல்லாம் படிக்கிற காலத்தில் ... இந்த எஸ்ஸி கழுதைக ஒரு பாவாடைய நாலு நாளைக்கு கழத்த மாட்டாளுக. பக்கத்தில் ஒக்கார முடியாது... இப்ப என்னடான்னா ஒரு நாளைக்கு ஒன்னு போடு றாளுக ... பவுடர் பூசுறாளுக. பூ வைக்கிறாளுக ... அலங்காரம் பண்ணிகிட்டு பள்ளிக்குடத்துக்கு வர்றாளுக பள்ளிக் குடத்துக் குள்ள வந்திட்டாப் போதும் இந்தப் பூனையும் பால் குடிக்குமான்னு ஊமையாயிராளுக என்றாள் கனகவல்லி

பள்ளிக்கூடத்திற்கு முன்னே போகும் தார்சாலையின் ஓரத்தில் உள்ள புளிய மரத் தடியில் கூட்ட மாக இருந்தது. ஆசிரியரும் மாணவர்களும் பஸ் வரு வதை எதிர்நோக்கிக் காத்திருந்தனர்.

பேசிக்கொண்டே அங்கே போன கனக வல்லியும் மீனாட்சியும் கூட்டத்தோடு நிற் காமல் சற்று தள்ளிப் போய் நின்று கொண்டனர். அவர்கள் பயணிக்கும் பஸ் வர நேரம் ஆகும்.

"முந்தாநாள் ஒன்னு நடந்துச்சு தெரி யுமா டீச்சர் " என்றாள் மீனாட்சி

"என்னாது .. " என்றாள் கனகு ...

"பிளஸ் ஒன் வகுப்பில்... அதுதான் வீரலட்சுமி டீச்சர் வகுப்பில் ... முத்து மாரின்னு ஒருத்தி இருக்காளுல"

"யாரு ... அவ எப்பிடி இருப்பா" என்றால் கனகு.

"தடிச்சவ... புதுநிறமானவ... எப்பப் பாத் தாலும் ரெண்டுபேர சைக்கிள்ல ஏத்தி கிட்டுப் போவாளே ... அந்த கபடி பிளேயர் அவதான் டீச்சர் ஞாபகம் இல்லையா ..."

"ஓ ... ஆமா ... ஆமா ... "

அவ கிளாஸ்மேட் ஒருத்தன் அவளுக்கு லவ் லெட்டர் குடுத்தாங்கிறதுக்காக எட மாஸ்டர்கிட்ட லெட்டரக் கொண்டு போய்க் குடுத்து பிரச்சனை பண்ணினாளே அவ" என்று எடுத்துக் கொடுத்தாள் மீனாட்சி.

"ஓ ... அந்தக் குட்டியா? ஆமா ... ஆமா ... இப்ப தெரியுது. அவளுக்கு என்னா ... "

"அன்னைக்கு மந்த்லி டெஸ்ட் பேப்பர் குடுத்து கிட்டிருந்திருக்காரு ராகவன் சார். இவ பஸ்ட் மார்க் வாங்கி இருக்கா. அதுக்கு ராகவன் சார் ... பாத்து எழுதினையா... இல்ல படிச்சி எழுதினையான்னு கேட்டிருக்காரு ... அதுக்கு இவ மப்பா ... பார்த்துத்தான் எழுதுனேன்னு சொல்லி இருக்கா. சாருக்குக் கோவம் "

பின்ன வராதா ... " என்றாள் கனகு.

நான் கேக்குறேன் ... பாத்து எழுதினேன்னா சொல்றன்னு பிரம்ப எடுத்து ஒரு அடி அடிச்சிருக்காரு ... ரெண்டாவது அடி அடிக்க ஓங்கும் போது பெரம்பக் கையில புடிச்சிகிட்டு, இவங்கள்ளாம் எம்பது எம்பத்தஞ்சு மார்க்கு வாங்கிருக்காங்க இவங்களை யெல்லாம் அப்பிடிக் கேக்குறீங்களா ... நான் தொண்ணூறு மார்க் வாங்கிட்டா இப்புடி கேக்கறீங்க என்று கேள்வி கேட்டிருக்கா ... எப்புட்டுத் திமிரு ... எம்புட்டு வாய்க்கொழுப்புப் பாருங்க டீச்சர்... " என்றாள் மீனாட்சி

"அவரு எல்லா சாதிப் புள்ளைகளையும் ஒண்ணா நினைக்குறவரு ... அவருக்கிட்டேயே இப்புடி நடந்தான்னா ... எவ்வளவு ஏத்தம் பாத்தீங்களா?"

அப்புடியா சொல்றீங்க. எங்கிட்டையெல்லாம் அப்பிடி நடந்திருந்தான்னா ... வகுப்புல எல்லார் முன்னாலையும் பாவாடையைத் தூக்கிவிட்டு பின்னால வரிஞ்சிருப்பேன் ... வீட்டில போயி ஒரு வாரத்துக்கு வேது வைக்க விட்டிருப்பேன். ராகவன் சார் பாவம் அப்புராணி என்றாள் மீனாட்சி

என்னாங்க டீச்சர். வரவர இவளுகளுக்கு பயமில்லாமப் போச்சு ...

அதுமட்டுமா டீச்சர் ... அண்ணைக்குச் சாந்த்தரமே ... அவ ... அவுக ஊரக்காரப் புள்ளைங்க மூனு பேர சைக்கிள்ல ஏத்திகிட்டு. ராகவன் சாரு முன்னாலேயே தலைய நிமித்தி கிட்டு ஓட்டிட்டுப் போறா. கறியில பயம் இருக்கா பாருங்க ...

இந்த கழுதைகளுக்கு சைக்கிள் குடுத்ததே தப்பு டீச்சர் ... எப்பவும் போல ஒத்தடிப் பாதையில ஒடுங்க கழுதைகளான்னு விட்டிருக்கனும் என்று சொன்னாள் கனகு. அப்போது பஸ் வந்து நின்றது. ஆசிரியர்களும்



படிப்பகம்

www.padippakam.com

மாணவர்களும் செம்மறிக் கூட்டம் போல் முண்டியடித்துக் கொண்டு ஏறினர். அந்தக் கூட்டத்திலும் தன் ஒப்பனை கலைந்து விடக்கூடாது என்ற கவனத்தில் மாணவர் களைத் திட்டிக் கொண்டே ஏறினாள் மீனாட்சி டீச்சர். கனகவல்லி டீச்சருக்கு இன்னும் பஸ் வரவில்லை.

ஏ... தாயி... என்று விளித்தான் சின்னச் சங்கரன். இறந்து போன தன் மனைவி முத்தம்மாளின் பெயரை தன் பேத்திக்கு விட்டிருந்தான். பள்ளிக்கூடத்தில் அவ ளைச் சேர்க்கையில் அவன் மகன் செங்கோட்டை தான் முத்துமாரி என்று பெயர் கொடுத்தான். என்றாலும் முத்து மாரி என்பது பள்ளிக் கூடத்தோட சரி. தெருவில் அவள் முத்தம்மாள் தான். செங்கோட்டையனும் அவன் மனைவி காளியும் மரியாதை கருதி அப்படி அழைக்க மாட்டார்கள் அவர்களுக்கும் தாயி தான். தாத்தன் சத்தம் காதில் கேட்கவும்

இந்தா வர்றேன் தாத்தோய் என்று சொல்லிக் கொண்டே கொல்லையில் இருந்து வெளியே வந்தாள். முத்துமாரி தலைவழியே குளித்து விட்டு ஈரத்தோடு அலுமினியத் தவலையையும் செம்பையும் கையில் பிடித்தபடியே குடிசைக்குப் பின்னாலிருந்து வந்த அவள் வாசலில் அவற்றை வைத்துவிட்டு உள்ளே ஓடினாள். பள்ளிச்சீருடை குடிசைக்குள் கொடியில் கிடந்தது. வெளியே வீதி ஓரத்தில் கிடந்த உரலில் உட்கார்ந்திருந் தான் சின்னச்சங்கரன்

ஏம்பா ... தாயி... சைக்கிளை வீட்டில வச்சிட்டு மத்த பிள்ளைகளோடு நடந்து பள்ளிக்கொடத்துக்கு போயிட்டு வரக்கூடாதா? என்றான். சின்னச்சங்கரன்

ஏன் தாத்தா அப்புடிச் சொல்ற...?

ஊர்க்கழுதைக எல்லாம் ஒண்ணு பேசுமுப்பா ... நாறக்கழுதைக பல்லுல படனுமா... அதுக்குத்தான்...

ஒம்பது கிலோ மீட்டர்... எப்படி காலா காலத்தில ஸ்கூலுக்கு போய் சேர முடியும்.

ஏ... இத்தன காலமும் நீ நடந்து போகலையா... கருக்கலோடை வழி போன யின்னா... அஞ்சு நிமிட்ல போயிறலாங்கண்ணு...

ஐஞ்சு நிமிட்டிலயும் போகலாம் பத்து நிமிட்லையும் போகலாம் நம்மகிட்ட ஒரு வண்டி இருக்கையில அத ஓட்டாமா... வீட் டிலே இத்துப் போகப் போட்டுட்டு அப்பிடி ஏன் நடந்து போகனும். நான் அப்பிடிச் சொல்லல. பள்ளிக்குடம் போயிட்டு வந்து நம்ம வீட்டுக்கு முன்னால சைக்கிள ஓட்டிக்க... இத்துப் போகாது சரியா... என்றான் கிழவன்.

பிறகு எங்க சைக்கிள? வித்துத் தின்னுட்டீங்க ளான்னு எட்மாஸ்டர் கேட்டு அடிச்சாரன்னா... நீயா வந்து அடிய வாங்குவ...?

சின்னச் சங்கரனுக்கு எதைச் சொல்லிப் புரிய வைப்பது என்று தெரியவில்லை.

ஏ... தாயி... நீ சைக்கிள ஓட்டிட்டுப் போறதையும் வர்றதையும் பாத்து பொருமிகிட்டு இருக்குதுக மேலத்தெருச் சனங்க. சும்மாவே வேட்டி மடிச்சுக் கட்டிகிட்டு நாங்க போனா அவங்களுக்குப் பொறுக்காது. ஏதாச்சும் வம்பிழுத்து கலகம் பண்ணுவானுக. ஊரே ஒண்ணாச் சேந்துகிட்டு கேவலப்படுத்துவானுக நீ பொட்டப்புள்ள நீ படிக்கிறது அவங்களுக்கு புடிக்கல... அவனுக புள்ளைகள வயசுக்கு வந்து உடனே ஒருத்தன் கையில புடிச்சுக் குடுத்திறானுக. படிக்க வைக்கிறது இல்லை. ஒன்னைய நாங்க படிக்க வைக்கிறதுக்கு ஊர்ல இருக்கிற வீச்ச மெடுத்த பயலுகளுக்கெல்லாம் சவரம் செஞ்சுகிட்டு இருக்கிறோம். இப்ப என்னாடான்னா. நீ அவனுக கண்ணு உறுத்துற மாதிரி சைக்கிள ஓட்டிகிட்டு போறேன்னு பிடிவாதம் பண்ணுற... சொல்றதக் கேளு தாயி... என்று கெஞ்சினான் கிழவன். அதை முத்துமாரி கேட்பதாக இல்லை. பள்ளிக்கு வெளியேறினாள். வயிறுப்பசிக்கு அவரச அவசரமாக கொஞ்சம் வாயில் அள்ளிப் போட்டுக் கொண்டாள். எவர்சில்வர் டப்பாவில் நண்பகல் உணவினை அடைத்துக்கொண்டு சைக்கிளை திண்ணையில் இருந்து இறக்கி வீதியில் வைத்துத் துடைத்துச் சரிபார்த்தாள். புத்தகப் பையினை எடுத்து கேண்ட்பாரில் மாட்டிக் கொண்டாள். சின்னச்சங்கரன் எதுவும் பேசாமல் இடுப்புக் கயிறில் சுருட்டிக் கட்டி இருந்த பையை திறந்து இரண்டு ரூபாய் நாணயம் ஒன்றினை எடுத்து அவளிடம் நீட்டினான்.

இம்... பத்தாது... அஞ்சு ரூவா குடு... தாத்தா... என்றாள் முத்துமாரி . அம்புட்டுத் தாம்மா இருக்கு... இந்தா பாரு என்று பையை உதறினான். அவன் உதட்டின் ஓரத்தில் புன்னகை ஓடியது முத்துமாரிக்கு புரியாதா என்ன?

இம்... எங்கிட்ட ஏய்க்காத... ஒங்கிட்டையாவது காசு இல்லாமப் போறதாவது... என்று தாத்தனின் கையில் இருந்த வெற்றிலைப் பையை பசக்கென்று பிடுங்கினாள். அதன் உள்ளே கையை விட்டுத் துளாவினாள். அவள் நினைத்தது போலவே பணம் இருந்தது. இரண்டு ரூபாய் நாணயத்தை உள்ளே போட்டுவிட்டு, ஒரு ஐந்து ரூபாய் நோட்டைப் பிரித்து எடுத்துக் கொண்டு பையை அவன் கையில் திணித்தாள். சின்னச் சங்கரனுக்கு உள்ளுக்குள் மகிழ்ச்சியாகத்தான் இருந்தது. ஆனாலும்.

இப்பிடி நித்தம் அஞ்சு ரூவா குடுத்தா. வீடு விழுந்துக்கிறாதா... என்னாம்மா நீ... என்றான்.

எனக்கு அஞ்சு ரூவா குடுக்குறதில்தான் வீடு விழுந் துக்கிருமாக்கும். இத ஒம்மகங்கிட்டையும் மருமககிட்டையும் சொல்லு... எங்கிட்டச் சொல்லாத. தெரியுதா...? என்று சிரித்துக் கொண்டே சொல்லிய முத்துமாரி, சைக்கிளைத் தள்ளிப் பெடலில் கால் வைத்து ஏறி ஓட்டிக் கொண்டு போனாள்.



படிப்பகம்

www.padippakam.com

ஏ... தாயி மேலத் தெரு வழிபோகாதம்மா... என்று சத்தமிட்டான் கிழவன்

யாரு அது சின்னச்சங்கரன் பேத்தியா... சைக்கிள ஓட்டிக்கிட்டு வர்றது. வெடிச்ச சிறுக்கியா இருப்பா போலிருக்கே செம்மண்ணில் துவரம் பயரை பிசைந்து நடுத் தெருவில் காயப்போட்டு கைகளால் கிண்டி விட்டுக் கொண்டிருந்த மாயக்காள் நிமிர்ந்தபடியே சொன்னாள். அவள் பக்கத்தில் அவித்த நெல்லைக் கொட்டி விளக்க மாற்றால் உளைத்து விட்டுக் கொண்டிருந்த முத்துப் பேச்சியோ,

ஆமா... அந்த செங்கோட்டை மக... அடங்கா தவ... கோயிலுமாடு மாதிரி வளத்து விட்டிருக்கா காளி... பள்ளிக்குடத்துக்கு போறாம்மா...

இவ பள்ளிக்குடத்துக்கு போறதுக்கும் வாரதுக்கும் இந்தத் தெருவுதான் கிடைச் சுச்சா... கறியில பயமில்லாம என்றாள் மாயக்காள். தெருவோரத்தில் நின்றிருந்த பூவரசம் மரத்தடியில் படுத்துக் கிடந்த செம் மறி ஆடுகளுக்கு பேன் பார்த்துக் கொண்டிருந்த விருமாண்டியைப் பார்த்து,

ஏ...ஆம்பள... என்னா ஊருக்குள்ள கட்டுமானம் இருக்கு, கிழக்க பாரு செங் கோட்ட மக பயமில்லாம சைக்கிள் ஓட்டி வர்றத... என்றாள் முத்துப்பேச்சி, ஏதோ... நரகலில் கால் வைத்துவிட்டது போல் படக்கென்று உதறிக்கொண்டு எழுந்தான் விருமாண்டி, பக்கத்தில் வந்துவிட்ட முத்துமாரியைத் தடுத்து நிறுத்தினான்

ஏன்ளா... நீ பெரிய ஜில்லா கலெக்டருக்குப் படிக்கிறவ... எந்தத் தெருவழி சைக்கிள ஓட்டிகிட்டு வர்ற போளா திருப்பிகிட்டு... குடும்பிய அறுத்துப்புடுவேன் என்றான். விருமாண்டியின் பேத்தி முத்துமாரியோடு ஏழாம் வகுப்புவரை படித்தவள். முதல் வகுப்பிலிருந்தே நொண்டி அடித்துக்கொண்டு வந்ததால் ஏழாம் வகுப்பில் முழுக்குமரியாகியிருந்தாள் இனியும் அவளைப் பள்ளிக்கு அனுப்பக் கூடாது அப்படி அனுப்பினால் ஏதேனும் ஏடாகூடமாக ஆகிப்போகும் என்று பயந்த விருமாண்டி தன் மகனிடம் சொல்லி செக்காணத்துக்குப் பக்கத்தில் அரைப்பாடி வண்டி ஓட்டிக் கொண்டிருந்த உறவுக்காரன் ஒருவனிடம் பிடித்துக் கொடுத்து விட்டான். தன் பேத்தி யோடு படித்தவள் என்று கூட பார்க்காமல் முத்துமாரியை வரைமுறை ஏதுமின்றிப் பேசினான். முத்துமாரிக்கு சுர்ரென்று ஏறியது கோவம், அதற்கு முன் அழுகை குப்பென்று எழுந்து அவள் கண்களில் இறங்கியது.

ஏன் இப்பிடி பேசுறீங்க... இந்த வழிதான போக முடியும் நான் இப்படித்தான் போவேன் வரு வேன் என்று உறுதிபடச் சொன்னாள்.

என்னா வாய்க்கொழுப்பா பேசுறவ... போளான்னா திருப்பி கிட்டுப் போவாளா... என்று சைக்கிளைப் பிடித்துத் தள்ளி விட்டான். முத்துமாரியோ அதைப் பலமாகப் பிடித்துக் கொண்டதால் சைக்கிள் கீழே விழவில்லை.

ஏன் என்னைய ஏளான்னு வாய்க் கொழுப்பா நீங்கதான பேசுறீங்க. நானா பேசுறன்... என்று சொல்லிக் கொண்டே தேம்பினாள். பார்த்துக் கொண்டிருந்த மாயக் காளோ,

ஏளா... பொடிச்சிறுக்கி பெரியமனுசன மட்டு மருவாதி இல்லாமவா பேசகிட்டு நிக்கிறவ... என்று விளக்குமாற்ற ஓங்கிக் கொண்டு வந்தாள் முத்துமாரியின் உடம்பெல்லாம் நடுங்கியது. ஒருபுறம் பயம் ஒருபுறம் கோபம் இரண்டும் அவளைத் தின்றன. அவமானத்தால் சுருண்டு போனாள் பேதை முத்துப்பேச்சியோ ஒருபடி மேலே போய் முத்து மாரியின் கன்னத்தில் இடித்தாள். கன்னத்தில் விழுந்த இடியின் வலியைப் பொறுக்க முடியாமல் சைக்கிளோடு சாய்ந்து தெருவில் விழுந்தாள் மாடுகட்டுவதற்காகத் தெருவோரத்தில் அடித்து வைத்திருந்த முளைக்குச்சி அவளை குத்திக் கிழித்தது. பாவடை தாவணி எல்லாம் இரத்தம் கசிந்து நனைத்தது. ஒரு சிறு முயல்குட்டியை மூன்று தெருநாய்கள் விரட்டிக் கடித்து குதறு வது போன்ற அவலம் பெருகியது.

தகவல் அறிந்த சின்னச்சங்கரன் கைக்கம்பை ஊன்றி நொண்டி நொண்டி நடந்த படியே,

அப்பே... விட்டுருங்க... ஆத்தே... விட்டுருங்க... நான் கண்டிச்சி வைக்கிறேன் என்று கெஞ்சியபடியே வந்தான்.

தன் தாத்தனையும் சிறாய்ப்பிலிருந்து வடியும் ரத்தத்தையும் பொருட்படுத்தாமல் என்னை அடித்துக் கொல்லட்டும் நான் இங்கேயே சாகிறேன் என்ற வைராக் கியம் முத்துமாரியின் நெஞ்சில் நெருப்பாய் எரிந்தது. பள்ளிக்கு நேரம் ஆகிக் கொண்டிருப்பதை நினைத்த வளாய் சைக்கிளை நிமித்தி மிதியில் கால் வைத்து ஏறி அந்தத் தெருவழியே சவ்வாரி செய்து கொண்டு போனாள் முத்துமாரி

தப்பிச்சா போறவ... இந்த வழிதான வரனும்... அப்ப வச்சுக்கிறோம். என்றாள் மாயக்காள்.

ஆத்தே ஒன்னுச் செஞ்சிராதீங்க... எங்காலம் மாதிரி இல்ல. அது விவரமில்லாத புள்ளை... பாவம்... அத விட்டுருங்க... அது கேக்காது என்று மருகினான் சின்னச்சங்கரன்.

அவளா விவரமில்லாதவ... முதல்ல அவ படிப்ப நிறுத்து இல்ல... சைக்கிளோட போட்டு அவள எரிச்சுப்புடுவோம்... என்று எச்சரித்தான் விருமாண்டி. திரை விழுந்த கண்களைச் சுருக்கி தன் பேத்தியைப் பார்த்தான் சின்னசங்கரன். வெளிச்சத்தை நோக்கி சிறகடிக்கும் சின்னப் பறவையைப் போல சைக்கிளை வேகமாக மிதித்துக் கொண்டிருந்தாள் முத்துமாரி.

●●●



படிப்பகம்

www.padippakam.com

# இந்துத்துவாவின் தேசிய ஒருமைப்பாடு யாத்திரை

● நிகழ் அய்க்கண்

2002- பிப்ரவரியில் குஜராத் மாநிலம் கோத்ரா ரயில் நிலையத்தில் சபர்மதி எக்ஸ்பிரஸின் ஒரு பெட்டி தீப்பிடித்த சம்பவத்தினைத் தொடர்ந்து, சிறுபான்மையின இஸ்லாமிய மக்களுக்கு எதிராக இந்துத்துவ கொடும பாதக கொலை வெறியர்களால், திட்டமிட்டு நிகழ்த்தப் பட்ட இன அழித்தொழிப்புப்போர் நடவடிக்கைகளில் ஒன்றுதான் பெஸ்ட் பேக்கரியில் 14-பேர் உயிரோடு கொளுத்தப்பட்டது. இது தொடர்பான வழக்கின் தீர்ப்பில் மும்பை சிறப்பு நீதிமன்றமானது கொலைகாரர்களுக்கு ஆயுள் தண்டனையை உறுதி செய்திருக்கிறது.

கோத்ரா ரயில் நிலையத்தில் ரயில் பெட்டி எரிந்தது எப்படி என்பது குறித்து விசாரிக்க ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசால், நீதிபதி யு.சி. பானர்ஜி தலைமையில் அமைக்கப்பட்ட விசாரனைக் கமிஷனானது சபர்மதி ரயிலில் தீப்பற்றியது ஒரு விபத்து தான் என்று அறிக் கையைச் சமர்பித்திருக்கிறது.

குஜராத் மாநிலம், பஞ்சமால் மாவட்டத்தில் பனம் நதியின் கரையோரத்தில் லுனாவாடாவில் உள்ள பாழடைந்த கட்டிடத்தின் அருகில், இஸ்லாமிய இன அழித் தொழிப்பு நிகழ்வுகளுடன் தொடர்புடைய 8 எலும்புக் கூடுகளை மத்தியப் புலனாய்வுத் துறை வெளிக் கொணர்ந்திருக்கிறது. அவைகள் குஜராத் உயர் நீதிமன்ற நீதிபதி ஆணைக்கிணங்க, டி.என்.ஏ (D.N.A) பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது. குஜராத் இஸ்லாமிய இனப் படுகொலைகள் குறித்த விசாரணை களும் - ஆய்வுகளும் - நீதிமன்ற தீர்ப்புகளும்... தொடர்ந்த வண்ணம் இருக்கிறது.

இத்தகைய இனப்படுகொலைகளுக்குக் காரண மான குஜராத் முதன் மந்திரி மோடியை நீக்கக் கோரி நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் அமளியாயிருக்கி றது. உத்திரபிரதேச மாநிலம், வாரணாசி நகரில் மார்ச் 2006 முதல் வாரம் நிகழ்ந்த இரு குண்டு வெடிப்புச் சம்பவங் களுக்குப் பிறகு, இந்துத்துவம் சார்ந்த அமைப் புகள், கட்சிகள் நாடாளுமன்றத்திற்கு வெளியேயும், உள்ளேயும் கூச்சல்களை எழுப்பத் தொடங்கிவிட்டன.

பி.ஜே.பி.யின் அப்போதைய தலைவராயிருந்த அத்வானி, டிசம்பர் 2005-ல் மும்பையில் பி.ஜே.பி-யின் வெள்ளி விழா மாநாட்டில் உரையாற்றும் போது, தியாக பூமி யாத்திரையை நடத்த விரும்புவதாக கூறியது மட்டுமின்றி யாத்திரைகளால் சமுகத்தின் அனைத்து தரப்பு மக்களிடமும் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு கிடைக்கிறது எனவும், இதனால் கட்சி வலுவடைகிறது எனவும் கூறியிருந்தார். காக்காய் உட்கார பனம்பழம் விழுந்த கதையாய்த் தற்போது, நிகழ்த்துள்ள குண்டு வெடிப்பினைச் சாக்காக வைத்து தேச ஒற்றுமையை வலியுறுத்தப் போவதாகக் கூறிக்கொண்டு, (பிராமணர்க ளையும்- இந்துத்துவத்தையும் பாதுகாக்க) சத்திரியவம் சத்தவரும் பி.ஜே. பி-யின் தலைவருமான ராஜ்நாத்சிங்கும், வைசியரான அத்வானியும் யாத்திரை மூலம் நச்சு விதைக்க வரிந்து கட்டத் தயாராகி விட்டனர். (அடுத்த மாதம் தமிழகம் உள்ளிட்ட ஐந்து மாநிலங் களிலே தேர்தல், அடுத்த வருடம் உத்திர பிரதேசத்துல தேர்தல் வருதுல்ல?!).

இஸ்லாமிய மத வெறுப்பினை இந்துக்களின் மன தில் கட்டமைத்து நிலை நிறுத்த முயலுவது என்பது காலங் காலமாக இந்துத்துவவாதிகளின் நயவஞ்சகச் சதிகளில் ஒன்றாகும். தற்போதும் இராணுவத்தில் சிறுபான்மை இனத்தவரான இஸ்லாமியர்களின் பிரதிநிதித்துவம் குறித்து ஆராய நீதிபதி ராஜிந்தர் சச்சார் தலைமையில் அமைக் கப்பட்ட குழுவிற்கு இந்துத்துவ அமைப்புகளும் - கட்சிகளும் எதிர்ப்பினை பதிவு செய்திருக்கின்றன. அரசும் இராணுவத்தில் இஸ்லாமியர்களின் விதம் குறித்து கணக் கெடுப்பதையும் நிறுத்திக்கொண்டு விட்டது. அதே போன்று, நீதிபதி ராஜிந்தர் சச்சார் குழுவானது நாடு முழுவதும் உள்ள மக்களவைத் தொகுதிகளில், சிறு பான்மையினர் - தலித்துகள் - பெண்கள் - பிறர் குறித்த கணக்கெடுப்புக்கு, மாவட்ட நிர்வாக அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது. அச்சுற்றறிக்கையிலும் உள் நோக்கம் இருப்பதாக இந்துத்துவ அமைப்புகளும் - கட்சிகளும் தங்களது எதிர்ப்பைக் காட்டத் துவங்கி விட்டன.

இஸ்லாமிய - கிறித்துவ மத எதிர்ப்பு, தலி
- பழங்குடிகளை மதம்மாற்ற நடவடிக்
விலக்கித் தக்கவைப்பது. இவைக
இந்துத்துவ அடிப்படை
குறிக்கோள்களாக இரு



படிப்பகம்

www.padippakam.com

2005-ல் மும்பையில் நடந்த பி.ஜே.பி.யின் வெள்ளி விழா மாநாட்டில், பலவித சர்ச்சைக்குள்ளாகியிருந்த அத்வானி பதவி விலகி பி.ஜே.பி.யின் தலைவராக ராஜ்நாத்சிங் பொறுப்பேற்கிறார். இது குறித்து ஆர்.எஸ்.எஸ். இயக்க மானது கருத்து தெரிவிக்கையில், பி.ஜே.பி கட்சி தனது கோட்பாடு - கட்டுப்பாடு நெறிகளில் இருந்து பிறழாது செல்ல அவரது தலைமை உறுதியுடன் செயல்படும் நம்பிக்கை உள்ளதாக கருத்து தெரிவித்துள்ளது.

சக இந்துத்துவ இயக்கமான வி.எச்.பி-யானது கருத்து தெரிவிக்கும் போது, பி.ஜே.பி மீண்டும் இந்துத்துவா கொள்கைக்கு அதிக முக்கியத்துவம் தரும் என நம்புவதாக அறிவித்திருக்கிறது. ஜாதகப்படி சரியான நேரம் தற்போது இல்லையென்ற போதிலும், ஜோதிடர்கள் கூறியதால் கட்சியின் தலைவராகப் பதவியேற்றதாகக் கூறிய ராஜ்நாத்சிங், மேலும் கூறும் போது, பி.ஜே.பி-யின் நற்பெயரைக் கட்டிக் காக்கவும், கட்சியைப் பலப்ப டுத்தவும் உறுதி பூண்டிருப்பதாகக் கூறுகிறார். அது மட்டுமல்லாது, கட்சியில் ஊழல் - ஒழுங்கினத்தை சகித்துக் கொள்ள முடியாது எனவும் கூறுகிறார். உத்திர பிரதேச முதல்வர் முலாயம் சிங் யாதவ், ராஜ்நாத்சிங் குறித்து கருத்து தெரிவிக்கும் போது, கிரிமினல்களுடன் தொடர்பு இருப்பதாகவும், புகார் நிருபணமாகவில்லை யெனில் முதல்வர் பதவியிலிருந்தே விலகவும் தயார் என வும் கூறியிருக்கிறார். ஊழலும் ஒழுங்கீனமும் இந்துத்துவத்தோடு மிகவும் நெருக்கமான தொடர்புடைய கருத்தாக்கமே என்பதைச் சொல்லத் தேவையில்லை.

ஆர்.எஸ்.எஸ்-ம் அவர்களது பரிவாரங்களும், இந்துத்துவ கோஷங்களை மீண்டும் முன்னெடுக்க முனைந்துள்ளதை ஊடகங்களின் வாயிலாக அறிய முடிகிறது. மதச்சார்பற்ற சாயம் பூசிக்கொண்டு தேசிய ஜனநாயக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஐக்கிய ஜனதாதளமானது பி.ஜே.பி இந்துத்துவ சாயம் பூசினால் கூட்டணியிலிருந்து விலகிவிடுவதாக ஏற்கனவே கூறியிருந்தது. கூட்டணியில் அங்கம் வகிக்கும் பிற கட்சிகள் என்ன நிலை எடுக்கப் போகிறது என்பது இனிதான் தெரியவரும்.

ஜனசங்கம், பி.ஜே.பி.-யாகி, வெள்ளி விழாவும் கொண்டாடியாகி விட்டது. நினைவுக்கு எட்டிய வரை, 1992-ல் பாபர் மசூதியை இந்நாட்டு மக்கள் பார்த்திருக்க இடித்ததும், 2002-ல் குஜராத்தில் இஸ்லாமிய சிறுபான்மையினருக்கு எதிராக இனப்படுகொலைகளை நிகழ்த்தியதும், நாடாளுமன்ற ஜனநாயத்திற்கு அவப் பெயரைத் தேடித்தரும் வகையில், நாடாளுமன்ற அவை யில் கேள்வி எழுப்ப பொதுமக்களிடமிருந்து கையூட் டாகப் பணம் பெற்றதும், மரபு - ஒழுங்கு - கலாச்சாரம் குறித்து பேசுபவர்களே மரபையும் - ஒழுங்கையும் - மீறுவது போன்று பி.ஜே.பி.-யின் பொதுச் செயலாளரே ஆபாச சி.டி.யில் சிக்கியிருப்பதையும் பி.ஜே.பி.யின் இருபத்து ஐந்து வருட சாதனைகளாகக் கருதலாம். மண்டல் கமிஷன் பரிந்துரைகளுக்கு எதிராகக் கிளர்ச்சிகளை நெய் ஊற்றி வளர்த்தவர்கள் இவர்கள் தான். மகாராஷ்ட்ராவில் உள்ள மராத்வாடா பல்கலைக் கழகத்திற்கு டாக்டர் அம்பேத்கரின் பெயரைச் சூட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து மிகப்பெரிய கலவரத்திற்கு உரமிட்டவர்களும் இவர்கள் தான். தற்போது இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீடு கோரிக்கை வலுப்பெறும் போது, மத அடிப்படையில் இட ஒதுக்கீடு என்பது பிற்படுத்தப்பட்ட அனைத்து சாதியினரும், இதுவரை அனுபவித்து வந்த இட ஒதுக்கீட்டில், துண்டு போட முனையும் ஒரு முயற்சி என கூசாமல் கூறுகிறவர்களும் இவர்கள் தான். இப்படிக் கூறுவதானது, பிற்படுத்தப்பட்டவர்களையும், இஸ்லாமியர்களையும் எதிரெதிர் துருவங்களாக நிறுத்தும் ஒரு முயற்சியேயாகும். இவர்கள் ஆட்சியில் முற்பட்ட சாதியினரில் உள்ள ஏழைகளுக்கு இட ஒதுக்கீடு செய்ய முனைந்தது எந்த ஊர் நியாயம்?!

மத்தியில் தேசிய ஜனநாயகக் கூட்டணி என்ற பெயரில் இவர்கள் ஆண்ட பொழுது, தலித்துகளுக்கு மத்திய அமைச்சரவையில் அளித்த பிரதிநிதித்துவமும் - ஒதுக்கப்பட்ட துறைகளும், தமிழகத்தில் கடந்த 40-ஆண்டுகளில் திராவிட இயக்க அரசியல் கட்சிகளின் ஆட்சி யில் தலித்துகளுக்கு ஒதுக்குகிற பிரதிநிதித்துவத்தையும் - துறைகளையும் ஒத்ததாகவே இருந்தன. ஒரிஸ்ஸாவில் தொழு நோயாளிகளிடையே பணியாற்றி வந்த ஆஸ்திரேலிய டாக்டரையும், அவரது குழந்தைகளையும் இவர்களது பரிவாரங்கள் உயிரோடு எரித்து படுகொலை செய்ததை யாரும் மறுக்க முடியாது. அரியானா மாநிலத்தில் செத்த பசுமாட்டின் தோலை உரித்ததற்காக 5-தலித் மக்களை உயிரோடு எரித்து கொலை செய்ததும் அவர்கள் மத்தியில் ஆண்ட பொழுதுதான். இவர்கள் மத்தியில் ஆண்ட போது தான் உத்திரப் பிரதேசத்திலும் - குஜராத்திலும் - ராஜஸ்தானிலும் - அரியானாவிலும் - திரிசூலங்களும் - கைத்தடிகளும் பொது மேடைகளிலே பகிரங்கமாகத் தொண்டர்களுக்கு வழங்கப்பட்டன. ஒவ்வொரு முறையும் தேர்தல் காலங்களில் இந்துத்துவ அமைப்புகளும் - அரசி யல் இயக்கங்களும் பலவித யாகங்களையும் - யாத்திரை களையும் மேற்கொண்டு சாதி வேறுபாட்டுடன் மக்களை ஒருங்கிணைக்க முயன்றதும், நாட்டின் எல்லைப் பிரச்சனைகளை முன் எப்போதையும் விட கூர்மை யாக்கியதும், இந்துமதம் சார்ந்த கோயில் - கும்பாபி ஷேகம் - நீராடுதல் - சங்கமம் - மகாமகம் போன்ற விழாக்களை காட்சி ஊடகம் வாயிலாக ஒளிபரப்பி மதங்களுக்கிடையே ஒருவிதப்பதட்டத்தை உண்டு பண்ணி வந்ததும் இவர்களது ஆட்சிக் காலங்களில் தான். இந்துமதத்தைச் சார்ந்த இளம் பெண்கள் வாள் ஏந்துவதையும், துப்பாக்கிச்சுடும் பயிற்சியை ஊக்குவித்ததும், பசுவைப்பாதுகாக்க வேண்டி நாடு முழுக்க இடையறாது பிரச்சாரத்தை விரிவுபடுத்தியதும் இவர்கள் மத்தியல் ஆண்ட பொழுது தான் அதிகம்.



படிப்பகம்

www.padippakam.com

ஒரு மதச்சார்பற்ற அரசின் அனைத்து கூறு களையும், கடந்த 1999 - 2004 காலகட்டங்களில் சிதைத்து, இந்துத்துவம் சார்ந்த முறைமைகளை கல்வி - சுற்றுலா - இராணுவம் - தகவல் ஒளி பரப்பு தொழில் நுட்பம் போன்ற துறைகளில் ஆழமாக வேரூன்ற உதவியிருக்கிறது.

இந்துத்துவமானது பிராமணர்களின் நலனை முன்னிருத்தியே கட்டமைக்கப்பட்டிருக்கிறது என்று டாக்டர் அம்பேத்கர் கூறுவார். ஆர்.எஸ்.எஸ்-ஸின் பின்னனியில் ராஜ்நாத்சிங் பி.ஜே.பி. தலைவர் பொறுப்பேற்ற பிறகு, பத்திரிக்கையாளர் சந்திப்பின் போது கூறுகையில், இந்துத்துவ கொள்கை, பொதுச்சிவில் சட்டம் மற்றும் காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் சட்டம் 370, குறித்து நாடு தழுவிய விவாதம் நடத்தக் கோருகிறார். இத்தகைய செயல்பாடுகள் நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், மதச்சார்பற்ற தன்மைக்கும் ஊறுவிளைவிப்பதாகவே அமையும். இவர்கள் துவங்க இருக்கும் தேசிய ஒருமைப்பாடு - யாத்திரையின் ஊற்றுக்கண் எது என கூறத் தேவையில்லை.

குஜராத்தில் கொத்து கொத்தாக எலும்புக் கூடுகள் தோண்டி எடுக்கப்படுவதும், பாபர் மசூதி இடிப்பும் அதன் பிறகு நிகழ்த்திய உயிர்பலிகளும், அரசியல் தலைவர்களின் பாலியல் முறைகேடுகளும், இந்துத்துவ மக்கள் நலனைக் காக்கப் புறப்பட்டவர்கள் பெற்ற தட்சணைக்கு நிகரான கையூட்டுகளும், இவர்கள் போதிக்கும் ஒழுங்கு-மரபு-கட்டுப்பாடு-கலாச்சாரத் தொன்மங்கள் யாவும் நாட்டின் மதச்சார்பற்ற கூறு களுக்கும், அடித்தள மக்களின் மேம்பாட்டுக்கும் எதிரான தாகவே அமையும்.

●

பின் குறிப்பு

யாத்திரை குறித்து ஆர்.எஸ்.எஸ்.

"நாட்டில் முஸ்லீம்களை சாந்தப்படுத்த நடக்கும் முயற்சிகளையும் இதனால் தேசத்தின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் ஊறு விளைவிக்கும் செயலைக் கண்டித்து அத்வானி மற்றும் ராஜநாத்சிங் ஆகியோர் மேற் கொள்ளவிருக்கும் யாத்திரையினை ஆர்.எஸ்.எஸ். எதிப் பது என்ற பேச்சுக்கே இடமில்லை"

ஆர்.எஸ்.எஸ். தலைவர் K.S. சுதர்சன்
தினமலர் 14-03-2006

---

தலித் நிலவுரிமை இயக்க மையக்குழு கூட்டம் வருகிற ஏப்ரல் 13, 2006 வியாழக்கிழமை அன்று காலை 10 மணிக்கு சென்னையிலுள்ள இக்சா மையத்தில் (ICSA CENTRE) (ஜீவன் ஜோதி கட்டிடம் , 107, பாந்தியன் சாலை, அரசு அருங்காட்சியகம் எதிரே, எழும்பூர்) நடைபெறவிருக்கிறது. இக்கூட்டத்தில்

**1. டிசம்பர் 12-2005 மாவட்டத்தலை நகரங்களில் நிகழ்ந்த கோரிக்கை நாள் மற்றும் மார்ச் 13 2006 வட்டார அளவில் நிகழ்ந்த கோரிக்கை நாள் குறித்து மீளாய்வு செய்தல்.**

**2. நிலவுரிமை இயக்க அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிவெடுத்தல்.**

**3. வட்டார அளவிலான குழு அமைப்பது குறித்த நடவடிக்கை.**

**4. பெண்ணுரிமையும்- நிலவுரிமையும்.**

**5. மையக்குழு, மாவட்ட- வட்ட -ஊராட்சி உறுப்பினர்கள் சந்தா மற்றும் நிதி நிலவரம் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.**

இம்மையக்குழு கூட்டத்திற்கு தலித் நிலவுரிமை இயக்க மாவட்ட- வட்ட பொறுப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ள விழைகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

# மார்ச் 2006 புதிய கோடாங்கி பதிவுகள்

## மார்ச் 1 - வாணியம்பாடி

தலித் நில உரிமை இயக்கத்தின் வேலூர் மாவட்டப் பொறுப்பாளர் கஜேந்திரன், வாணியம்பாடி வட்டத்தின் பொறுப்பாளர்களுக்கான கருத்த ரங்கத்தை வாணியம்பாடி தேவாலய வளாகத்தில் ஏற்பாடு செய்திருந்தார். நகரை ஒட்டிய பகுதி களிலிருந்தும், கிராமங்களிலிருந்தும் சுமார் 150 ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டனர். சிவகாமி, கிராமத்தலைவர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

## மார்ச் 3 -சென்னை, இக்சா மய்யம்

தலித் கூட்டமைப்பு தேர்தலையொட்டி தலித்களின் கோரிக்கைகள் அடங்கிய பட்டியலை விவாதித்து நிறைவு செய்ய கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. ஆதித்தமிழர் விடுதலை இயக்கத்தின் தலைவர் வினோத் இக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். சக்திதாசன், அரங்கமல்லிகா, சிவகாமி, நிகழ் போன்ற எழுத்தாளர்களும் கூட்டமைப்பின் பல பொறுப்பாளர் களும் கலந்து கொண்டனர்.

வினோத் தயாரித்த அறிக்கையின் மீது பலரும் தங்கள் கருத்துக்களைக் கூறினர். சிவகாமி அவர்கள் பேசும்போது,

அரசின் திட்டங்களை ஒட்டியே நமது கோரிக்கை களும் அடங்கியுள்ளன. அல்லது தலித் தல்லா தோரின் கோரிக்கை அடங்கிய பட்டியலாக இது உள்ளது.

உதாரணமாக நீர் வளம் என்ற தலைப்பில் நிலத்தடி நிரை பன்னாட்டுக் கம்பெனிகளுக்குத் தாரை வார்க்காதே என்ற கோரிக்கையை ஆய்வு செய்தால் நிலம் தனி மனித உடைமையாக மாறி தலித் சமூகம் அதைச் சொந்தம் கொண்டாடாத வகையில் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் போது எவ்வகையில் நிலத்தடி நீர் அவர்களுக்கு சொந்த மாகும்? முதலில் நிலம் தலித் சமூகத்திற்கு சொந்த மாகட்டும், பிறகு நிலத்தடி நீரைப் பாதுகாக்க பிறருடன் இணைவோம். என்று கூறிய அவர் இவ்வகையில் அமைந்திருந்த அம்பேத்கரின் போராட்டங்களை வரிசைப்படுத்தினார்.

மேலும் அரசாங்கத்தில், தலித் மக்களுக் கான பிரத்யேக கவனம் செலுத்தி திட்டமிட எந்தத் துறையும் இல்லை. ஐந்தாண்டு திட்டங்கள் ஏழை மக்களுக்கான சில இல வசத் திட்டங்களை அறிவிப்பதை ஒட்டி தமிழக அரசும் மத்திய அரசைப் பின்பற்றியும், நிதிக்கட்டுப்பாட்டை மீறாமலும் வழக்கமானத் திட்டங்களையே வகுக்கிறார் கள். தலித் மக்களின் வாழ்வாதாரங்களைப் பெருக்கு வது, ஏற்படுத்திக் கொடுப்பது, தலித் சிந்தனையாளர் களும், ஆய்வாளர்களும் அடங்கியதிட்டக் குழுவினாலேயே சாத்தியம். அப்படிப்பட்ட திட்டக் குழுவை முதலில் உருவாக்கச் சொல்லி கோரிக்கை வைக்க வேண்டும் என்றார்.

அதே போல் அம்பேத்கர் நூல்களைப் பாடத் திட்டங்களில் சேர்ப்பதையும், கல்வியில் பிறரைப் போன்ற முன்னேற்றம் அடைய தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

அதே போல் தலித் மக்கள் "வேண்டும்" என்ற கோரிக்கைகளுடன் "வேண்டாம்" என்ற கோரிக்கை களையும் வைக்க வேண்டும் என்றார். இலவசமாக வேட்டி, சேலை, உணவு, ரேஷன் அரிசி, இலவச சைக்கிள் வேண்டாம் என்று கூறி அரசு, தனியார் துறையில் வேலை வாய்ப்பைக் கேட்டு கோரிக்கை வைக்க வேண்டும் என்று கூறினார்.

## மார்ச் 4 - ராமநாதபுரம்

ஆணைக்குடி கிராமம் ராமநாதபுரத்திலிருந்து 18 கி.மீ தொலைவிலுள்ளது. ஆணைக்குடி மற்றும் சுற்று வட்டா ரத்திலுள்ள முப்பத்தைந்து சிறிய தலித் கிராமங்களுக்கு குடி நீர் ஆதாரமாக விளங்கி வரும் ஏரிக்கருகில் தனியார் ஒருவரால் தொடங்கப்படும் உப்பளத்தை எதிர்த்து கிராம மக்கள் கிளர்ச்சி செய்தனர். இவர்கள் மீது காவல் துறை யினர் வழக்குப் போட்டதுடன் மாவட்ட நிர்வாகம் உப் பளத்துக்கு அனுமதி வழங்கி அது நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்ட நிலையில் மக்கள் கடும் அவதிக்கு ஆளாகியுள்ளனர். ராமநாதபுரம் மாவட்டப் பொறுப்பாளர் சந்தனமேரி, ராஜமாணிக்கம், மற்றும் கிராமத்தாரின் வேண்டு கோளுக்கிணங்கி சிவகாமி அங்கு சென்று உப்பளத்தையும், மற்றும் உப்பளத்தையொட்டிய கிராமப் பகுதிகளையும் பார்வையிட்டு அவர்களுக்கான செயல் திட்டங்களை வகுத்துக்கொடுத்தார். தொடர்ந்து இராமநாதபுரத்தில் நிலவுரிமை கருத்தரங்கம் நடைபெற்றது.



படிப்பகம்

www.padippakam.com

## மார்ச் 4 - காளையார் கோவில் சிவகங்கை

வெரோணிக்கா, சிவகங்கை மாவட்டப் பொறுப்பாளர் தலைமையில் தலித் நிலவுரிமை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. நாகராஜ், திரவியம், ஜான்சி, விடுதலைச் சிறுத்தை அமைப்பின் மாவட்டச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். பகுதி பிரச்னைகள், குறிப்பாக மைக்கேல்பட்டி பிரச்சினை விவாதிக்கப்பட்டது.

## மார்ச் 8 - எத்திராஜ் கல்லூரி, சென்னை

நவீன இலக்கியத்தில் பெண்ணியம் என்ற தலைப்பில் எழுத்தாளர் அரங்க மல்லிகா ஒருங்கிணைத்த தேசிய கருத்தரங்கில் திலகவதி, காதம்பரி, கனிமொழி, க்ருஷாங்கினி, வெண்ணிலா, அழகிய பெரியவன் போன்ற எழுத்தாளர்களும் கவிஞர்களும் கல்வித் துறையினரும் கலந்து கொண்டனர். நிறைவுரை ஆற்றிய எழுத்தாளர் சிவகாமி, ஒடுக்கப்பட்ட பெண்ணினம் சகலவிதமான ஒடுக்கு முறையையும் கருத்தில் கொண்டு அடித்தட்டுப் பெண்களை மய்யப்படுத்தி ஒருங்கிணைய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

## மார்ச் 8 - கண்ணகி நகர், துரைப்பாக்கம், சென்னை

சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்களும், கண்ணகி நகர் தலித் பெண்களும் இணைந்து மகளிர் தினம் கொண்டாடினர். இதை பகுதி வாழ் ராமச்சந்திரன் சிறப்பாக ஒருங்கிணைத்தார். சாமுவேல் பறையர், ராஜவேல், செல்வநாயகம், பெண் தலைவிகள் ரமணி, தேவமணி, கல்யாணி ஆகியோர் உரையாற்றினர். சிறப்புரை ஆற்றிய சிவகாமி, தலித் பெணகள் 12 வரை படிப்பு, வேலைவாய்ப்பிற்கான பயிற்சி பெறுவது அவசியம் என்றார்.

## மார்ச் 9 - தக்கர் பாபா பள்ளி, சென்னை

மிதக்கும் பல்கலைக் கழகத்தின் வெளி நாட்டுப் பெண் மாணவிகளுக்கு வழக்கறிஞர் பிரியாவும், எழுத்தாளர் சிவகாமியும் பெண்களும் - வறுமையும் என்ற தலைப்பில் உரையாற்றினர்.

## மார்ச் 11 - பெண்கள் தின விழா, செங்கல்பட்டு

செங்கல்பட்டு பழைய பேருந்து மைதானத்தில் பத்தாயிரம் கிராப்புற மகளிர் திரண்டிருந்தனர். ஆயர்நீதிநாதன், பங்குத் தந்தைகள், எழுத்தாளர்கள் சிவகாமி, கோபு, குடியரசன் ஆகியோரும், பெண்கள் கூட்டமைப்பின் தலைவி உதயகுமாரி மணிமேகலை ஆகியோர் உரையாற்றினர். சக்தி கலைக் குழுவின் ஆட்டத்தை வேடிக்கைப் பார்த்து விஷயத்தைக் கோட்டை விட்டுவிடக் கூடாது எனக்கூறிய கோபு தலித் பெண்களுக்கான நிலவுரிமை பற்றி எடுத்துரைத்தார். அடுத்து உரையாற்றிய எழுத்தாளர் சிவகாமி, பெண்களுக்கு சொத்துரிமை என்கிறது சட்டம். ஆண்களைச் சார்ந்துதான் பெண்கள் பெற வேண்டியுள்ளது. ஆண்களுக்கே சொத்து இல்லையென்றால் பெண்கள் எவ்வாறு பெறமுடியும்? ஆகையால் சட்டத்தில் மாற்றம் வரவேண்டும் என்றார்.

## மார்ச் 13

தமிழகத்தில் 68 தாலுக் காக்களில் சுமார் 2.50 லட்சம் தலித் மக்கள் 5 ஏக்கர் நிலம், குடிமனைப் பட்டா, பஞ்சமி நில மீட்பு, நகர் புறங்களில் குடியிருப்பு மனை மற்றும் சிறப்புக் கூறு திட்டத்தை முறையாக அமல்படுத்த தாலுக்கா அலுவலகங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தி கோரிக்கைகளை சமர்ப்பித்தனர். சிறப்புப் பதிவுகள் இவ்விதழில் வெளியாகியுள்ளன.

## மார்ச் 17 - குட் ஷெப்பர்ட் அரங்கம், சென்னை

தமிழ்நாடு ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்களின் மூன்றாவது மாநில மாநாடு சென்னையில் நடந்தது. பஞ்சமி நிலம் மீட்கப்பட வேண்டும் என ஊராட்சித் தலைவர்கள் கோஷமிட்டவாறு சென்னை மாநகரில் ஊர்வலமாகச் சென்றனர்.

## மார்ச் 18

மதுரை தலித் கலைவிழா :

மதுரையில் ஆண்டுதோறும் நடக்கும் தலித் கலைவிழாவின் மய்யப் பொருள் "தலித்நில உரிமை என்பதாகும். காலையில் நடந்த கருத்தரங்கில் இன்பக்குமார், சிவகாமி, சன்னா ஆகியோர் தலித் நில உரிமையில் தலித் கலைஞர்களின் பங்கு, பெண்களும் நிலமும், நில உரிமை வரலாறு ஆகிய தலைப்புகளில் முறையே உரையாற்றினர். தொடர்ந்து தலித் நில உரிமை இயக்கத்தின் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. பல்வேறு மாவட்டங்களின் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டார்கள். மாலையில்



படிப்பகம்

www.padippakam.com

எழுச்சி மிகு கலை விழாவில் என்.டி.ராஜ்குமாரின் பாடல்கள், விதவிதமான பறையாட்டங்கள், சில்லாட்டம், தப்பாட்டம், நாடகங்கள் என மேடை களைகட்டியது. சிவகாமிக்கு "வீரியக்காரி" விருது வழங்கப்பட்டது. பாரதி கிருஷ்ணகுமார், சிவகாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

## மார்ச் 19 - பனிமலர் பாலிடெக்னிக், சென்னை

தமிழ் சினிமாவில் - பெண்கள், தலித்துகள், சிறுபான்மையினர், பழங்குடிகள், அரவாணிகள் என்ற தலைப்பில் கருத்தரங்கம் ஒன்றை புதிய கோடாங்கி ஏற்பாடு செய்திருந்தது. ஜேப்பியார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இவ்விழாவிற்கு நடிகர் - இயக்குநர் நாசர் தலைமை ஏற்றார். இயக்குநர் (இயற்கை) ஜனநாதன் வாழ்த்துரை வழங்கினார். அரங்க. மல்லிகா, தய் கந்தசாமி, கோபு, சன்னா, பேரா. கல்விமணி, டயானா (அரவாணி), பிரதிபா ஜெயச்சந்திரன், ஆகியோர் உரையாற்றினர். சங்கமித்ரா வரவேற் புரையும், சிவகாமி தொகுப்புரையும் வழங்கினர். செல்வநாயம் நன்றியுரை ஆற்றினர்.

(இக் கருத்தரங்கக் கட்டுரைகளில் கோபுவின் கட்டுரை இவ்விதழில் வெளியாகிறது)

## மார்ச் 21 - வசந்தபவன், அண்ணா நகர், சென்னை

"பெண்ணுரிமையே மனித உரிமை" என்ற தலைப்பில் வள்ளி கோபால் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில், வழக்கறிஞர், லலிதா, சாந்தகுமாரி, ஆஸிபெர்னாண்டஸ், தாஸ், அருள்மொழி, அஜிதா, சிவகாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

●

# ஒரு கிராமத்து நதி

● வை. சரண்யா

கருக்கொண்ட மேகக்குவியல் வார்த்த
கலங்கமில்லா மண்ணின் உயிர்த்துளி
கூடிக்கலந்து கிராமத்து நதியாய்.....

பயணப்பாதைகளில்
மந்தைகளுக்கும் மனிதர்களுக்கும் தாகம் தீர்த்தும்
உழைத்துத்தேயும் ஏழைகளின்
களைப்பை நீக்கியும்,
காடுகழனிகளை ஈரப்படுத்தி,
வழித்தடமெங்கும்
மண்ணின் நிறங்களை
மனிதன் சிந்திய கழிவைச் சுமந்தும்
தாமிரபரணி இரத்தக் கரையோடு தவழ்கையில்

இயற்கை தந்த கொடை நீரை
இறைத்துக் காசாக்கும் பன்னாட்டு களவானிகளும்
அமிலக் குண்டுகளடங்கிய சாயக்கழிவை,
ஆலைக் கழிவை, ராவாய்க் கலந்து
உயிர்குடிக்கும் நஞ்சாய் மாற்றும்
உழைப்புச் சுரண்டிகளுக்கிடையே

மண்ணை மலடாக்கும் மணல் சுரண்டலில்
கடல் தொடாமலே உயிர் அறுபட்ட நதியாய்
மரித்துப் போனது - அந்த கிராமத்து நதி.



படிப்பகம்

www.padippakam.com

தொடர்கதை

# புதியவர்கள்

## 2. கருவிகள்

● சிவகாமி

நீலா வீட்டிலிருந்தாள். அலுவலகம் செல்லவில்லையே தவிர, பல்வேறு வேலைகள் காத்திருந்தன. கிராமத்தில் நடத்தும் முகாம்களுக்கான அழைப்புகள் தேங்கிக் கிடந்தன. அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருந்தது. கட்டாயக் காத்திருப்பு குறித்த விசாரிப்புகள் தொடர்ந்து வந்த வண்ணமிருந்தன. நண்பர்களுடன் உரையாடல் இப்படி பொழுது காணாமல் இருந்தது. மாலை மணி மூன்றிருக்கும். தொலைபேசி மணி அடித்தபோது எடுத்த நீலாவை, நீலாவா என்றது குரல்.

"சார்" அந்தக் குரலை அடையாளங்கண்டு கொண்டாள். ஓய்வு பெற்ற அதிகாரி சபேசன். நீலா மீது அக்கறை கொண்டவர் என்று சொல்ல முடியாது. இன்று வரை அவராக தொலைபேசியில் அழைத்தவருமில்லை.

"என்னம்மா, எப்படியிருக்கே?"

இதுவும் விசாரிப்புத்தான் என்று நினைத்தவள்,

"நல்லாயிருக்கேன் சார் நீங்க?"

"பொழுதை உபயோகமாகக் கழிக்கிறேன். அது சரி, நான் என்ன கேள்விப்படுகிறேன்?"

"சார்"

"எனக்கு கவலையா இருக்கேம்மா, உன்னைப் பார்க்கணுமே"

" எள்ளுதான் எண்ணெய்க்குக் காயுதுன்னா, எலிப் புளுக்கை எதுக்கு காயுது?" என்ற பிரேமாக்கா அடிக்கடி சொல்லும் பழமொழி ஞாபகத்திற்கு வந்தது.

"நான் வரட்டாமா, உங்க வீட்டுக்கு?"

"உங்களுக்கு எதுக்கு சார் சிரமம், நானே உங்க அலுவலகத்துக்கு வர்றேன்"

"தட்ஸ் பெட்டர். ஐந்து மணிக்கு முன்னால் வந்துடும்மா"

"ஆகட்டும் சார், உங்கள் விலாசத்தைச் சொல்லுங்கள்"

அவர் விலாசத்தைக் கேட்டு வாங்கிக் கொண்டு கிளம்பினாள்

"ஏம்மா, என்ன பண்றதா உத்தேசம்?"

அவளைப் பார்த்ததுமே நேரடியாக விஷயத்துக்கு வந்துவிட்டார் சபேசன்.

"பணியிடம் ஒதுக்குகிற வரை காத்திருக்கப் போறேன்"

"அதுசரி, காத்திருப்பில் இருக்கிறது. தண்டனை ஒன்றும் கிடையாது உன்னை மட்டும்தானா காத்திருப்பில் வைத்திருக்கிறது அரசு? இதற்கு முன் எத்தனையோ பேர் அல்லவா?"

"ஆமாம் சார், நான் மறுக்கவில்லை."

"பின்ன என்ன, இதற்கெதற்கு தலித் சமூகத்தினர் உண்ணாவிரதம் ஆர்ப்பாட்டம் எல்லாம்?"

"சார், எதற்காக இந்தக் காத்திருப்பு என்றிருக்கிறதல்லவா? தலித் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பற்றி கூட்டத்தில் பேசியதால் மட்டுமே காத்திருப்பில் வைக்கப்பட்டுள்ளேன். மற்றவர்கள் பிரச்சனை வேறுவகையானது. அதனால் தலித் சமூகம் இதை எதிர்க்கிறார்கள். இதில் என்ன தவறு?"

"சரி, நீங்கள் உங்கள் நிலையை விளக்கி அரசுக்கு கடிதம் கொடுத்தால் என்ன?"

"எனக்கு அனுப்பிய தாக்கீதுக்கு விளக்கம் கொடுத்துள்ளேன். அது போதாதா?"

"அம்மா, அரசு அதிகாரிகளாகிய நாம் நாணல் புல் போலிருக்க வேண்டும். நாணல், ஆற்றில் வெள்ளம் வரும்போது வளைந்து கொடுத்து, பின் வெள்ளம் வடிந்தவுடன் உறுதியாக எழுந்து நின்றுவிடும். இம்மாதிரி நேரங்களில் அரசு கேட்பது போல் ஒரு கடிதம் கொடுத்துவிட்டால்தான் என்ன?"

"சபேசன் அரசாங்க உத்யோகத்தில் நீடித்திருக்க வழி சொல்கிறாரேயன்றி மக்கள் பிரச்சனைகளை இந்நாட்டின் குடிகளாக இருந்து செய்யக் கூடிய வழிகளைக் கூறுகிறாரில்லையே. முன்கோபம் உள்ளவர்கள் உயர்அதிகாரிகளாக இருக்கும்போது பொறுத்துப்போவதும், கோபம் தணிந்தவுடன் பக்குவமாக விஷயங்களை எடுத்துரைத்து காரியம் சாதிப்பதும் என்ற வகையில் விளக்கங்கள் சரிதான். இப்படிப் பொறுமையாக இருப்பது, தக்க சமயத்தில் எடுத்துரைப்பதெல்லாம் சாதாரண அலுவலக நடைமுறைகள். நீலாவும் அப்படித்தான் இருந்திருக்கிறாள். இதுவரை எந்த உயர் அதிகாரியையும் பகைத்துக் கொண்டதோ, பொருந்தாத வாக்குவாதங்களில் ஈடுபட்டதோ கிடையாது. சக அலுவலர்கள், அலுவலகப் பணியாளர்கள் ஆகிய எல்லோரிடமும் நல்ல பெயர் தான் எடுத்திருக்கிறாள். ஆனால் இப்போது, தான்

படிப்பகம்

www.padippakam.com

**இளைய அதிகாரிகள் தனியாகவும், மூத்த அதிகாரிகள் தனியாகவும் சந்தித்து உணவுருந்துவார்கள். அந்த சந்தர்ப்பங்களில் தலித் அதிகாரிகளை பிறர் விமர்சிப்பார்கள். அவர்கள் ஆங்கிலம் பேசுவது, தமிழ் பேசுவது, கீழதிகாரிகளுக்கு உத்தரவிடுவது, மேலதிகாரிகளிடம் பணிந்து நடப்பது அல்லது மோதுவது, அலுவலகக் கோப்புகளை படித்துவிட்டனர் என்பது, தூங்குவது, நடப்பது போன்ற எல்லாமே அவர்களுக்கு கேலிப் பொருள்தான். சில சமயங்களில் தலித் அதிகாரிகளில் தோல் நிறம் மற்றும் பெயர்கள் கூட அவர்களிடையே நகைப்புக்கு இடமாகிவிடுவதுண்டு.**

மக்கள் பிரச்னைகளைப் பேசுவதற்கும், நாணல் புல் போலிருப்பதற்கும் என்ன சம்பந்தம் என்று யோசித்த வாறிருந்தாள்."

"நீ யோசிக்கறதைப் பார்த்தா, யாரோ என்னைப் பேச தூண்டிவிட்டிருப்பாங்கன்னு நெனக்கிறாப்படி இருக்கு. நோபடி கால்ட் மி. நானாகத்தான் விசுவேசுவரனுக்கு போன் பண்ணினேன். அவர் ரொம்ப நல்லவர். அவர்தான் சொன்னார், ஒரு லெட்டர் குடுக்கச் சொல்லுங்க, போஸ்டிங் குடுத்துடலாம்னு"

நீலாவுக்குப் புரிந்தது. அரசு அவரைத் தூது விட்டிருக்கிறது என்று. அவளுக்கு நம்ப முடியவில்லை. அரசியல் முக்கியத்துவமோ, பலமோ இல்லாத தன்னை ஏன் இவ்வளவு கூர்மையாக கவனித்து, கடிதம் கேட்க வேண்டும் என எண்ணத்தலைப் பட்டாள்.

"அதற்கென்ன சார், இன்னைக்கே குடுத்தாப் போச்சு. ஆனால் அவர் சொல்ற மாதிரி தலைமையிடத்துக்கல்ல. அது விதிகளுக்கு முரணானது. அவருக்கு வேண்டுமானால் நான் கடிதம் எழுதுகிறேன், நான் காத்திருப்புப் பட்டியலில் உள்ளேன், பணியிடம் விரைவில் ஒதுக்குங்கள் என்று".

"அம்மா, இந்த சர்வீஸ் சாதாரணமானதல்ல. இது உனக்குத் தெரியும். சீனியர் அதிகாரியான உனக்கு நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை ஆனால் நீ ஏன் இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறாய்?"

"சார் எனக்கு போஸ்டிங் வராவிட்டால் பரவாயில்லை. வரும்போது வரட்டும். அதுவரை கிராமம் கிராமமாகச் சென்று முகாம்கள் நடத்தத் திட்டமிட்டுள்ளேன்."

நீலா, இவ்விசயத்தையே ஒரு வருடத்திற்கு முன்பு சபேசனிடம் சொல்லியிருந்தால் அவர் வாய்விட்டு சிரித்திருப்பார். முகாம்கள், மக்களை சந்திப்பதாம், என்ன பயித்திக்காரத்தனம் என்று நினைத்திருப்பார். ஆனால் இப்போது அவர் மௌனமாக இருந்தார். மூத்த அதிகாரியைக் காத்திருப்பில் வைத்து பணியிடம் ஒதுக்காத அளவிற்கு இந்த முகாம்கள் முக்கியத்துவம் வாய்ந்தன என்பதை உணர்ந்து கொண்டவர் போலிருந்தார்"

சபேசன் பணியிலிருக்கும் போது பல சமூக விழாக்களில், சிறப்பு அழைப்பாளராகச் சென்றிருக்கிறார். அப்போது தாழ்த்தப்பட்ட மாணவர்கள் குளித்து சுத்தமாக இருக்க வேண்டும். பாடங்களை அக்கறையுடன் படிக்க வேண்டும். ஒழுக்கமாக இருக்க வேண்டும். தான் அப்படி இருந்ததால்தான் உயர்ந்த பதவிக்கு வர முடிந்தது என்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் தாழ்வு மனப்பான்மையைக் கைவிட வேண்டும் என்றும் தொடர்ந்து பேசியிருக்கிறார்

'அவ்விழாக்களில் தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு இலவச புத்தகங்கள், சீருடைகள் வழங்கியிருக்கிறார். ஆனால் இந்த நீலா அப்படியில்லாமல் வேறு வகையில் முகாம்கள் நடத்துகிறாள் என்று நினைத்துக் கொண்டார். என்றாலும் அந்த முகாம்கள் எப்படிப்பட்டவை என்று கேட்டுத் தெரிந்துக் கொள்ள விருப்பமில்லை. அவருக்கு.

தாழ்த்தப்பட்ட மக்கள் நன்றியில்லாதவர்கள். தான் பெரிய பொறுப்புகளில் இருந்தபோது ஓடி ஓடி வந்து விழாக்களுக்கு அழைத்தவர்கள், ஒய்வு பெற்றதும் தன்னை மறந்துவிட்டு நீலா போன்று பதவியிலிருப்பவர்களையே அழைக்கிறார்கள் என்றும் நினைத்துக் கொண்டார்.

"லுக் நீலா. அரசாங்கம் வலிமையானது. அவர்கள் நினைத்தால் எது வேண்டுமானாலும் செய்வார்கள். உன் மீது இல்லாததும் பொல்லாததும் சொல்லி உன் வேலையைப் பறிக்கக் கூடத் தயங்க மாட்டார்கள். அது மட்டுமல்ல நீ நேசிக்கும் நம் மக்களே வெறுத்துக் கொள்ளும்படி ஏதாவது கிளப்புவார்கள். அப்போது நம் சமூகம் உன்னைக் காப்பாற்ற முன் வருமா? பதவி இல்லாவிட்டால் உன்னைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டார்கள். புரிந்துக் கொள்"

"சார். நீங்கள் சொல்லியதைத்தான் வேறு சிலரும் சொன்னார்கள். நான் மிகவும் வேகமாகச் செல்வதாகவும், வேகத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்றும் தூது அனுப்பினார், உங்களுக்கும் மூத்தவர்."

"இங்க பாரும்மா, இந்தச் சமுதாயத்திற்கு



படிப்பகம்

www.padippakam.com

உழைக்க யாரும் விரும்புவதில்லை. அப்படியே முன்வந்தாலும் அவர்கள் பணியை யாரும் பாராட்டுவதில்லை. அப்படி உழைத்தவர்களெல்லாம் இறுதியில் கண்ணீர் வடித்திருக்கின்றனர். கேட்பாரற்ற அனாதையாக பலர் இறந்திருக்கின்றனர். இரண்டு வேளை உணவு கூட இல்லாமல் இறந்தவர்கள் பலர்"

சார் சாகும்போது எல்லோரும் தனியாகத் தான் சாகவேண்டும். சேர்ந்து செத்தாலும் சாவு கொடுமையானதுதான். இது ஒன்றே போதுமா நமது நடவடிக்கைகளைத் தீர்மானிக்க?

எவ்வளவு அகங்காரமும் மமதையும் அவள் பேச்சில் வெளிப்படுகிறது! நீலா மீது இரக்கப்பட்டார் சபேசன்

"நீ சொல்றது சரிதாம்மா. ஏதோ சொல்ல வேண்டியது என் கடமை. கேட்பதும் கேட்காததும் உன் விருப்பம்"

அங்கங்கே மக்கள் தட்டியில் எழுதி வைத்து மக்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் நீலா மாதிரி சிறிய விஷயங்களில் கவரப்பட்டு வேலையை இழக்கத் தயாராகிவிட்டதைக் குறித்து அவருக்கு ஒரு பக்கம் ஆச்சரியமாக இருந்தது. அவள் மௌனமாயிருப்பதைப் பார்த்து,

"அம்மா, உன்னுடைய திட்டம்தான் என்ன?"

"இதுகாரும் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு அவர்கள் புறந்தள்ளப்பட்டிருப்பதை எடுத்துரைப்பதுதான் திட்டம். பல வருடங்கள் அரசுக்கு உழைத்துவிட்டேன். மக்களுக்காக சிறிது காலமேனும் உழைக்க விருப்பப்படுகிறேன்."

"ஓய்வு பெற்றபின் முழுநேரமாகச் செய்யலாம் தானே"

"கடந்த காலத்தில் பலர் இச்சமூகத்திற்காக உழைத்திருக்கிறார்கள். அவர்கள் இப்படி நினைத்திருந்தால் இப்போதுள்ள முன்னேற்றம்கூட இருந்திருக்காது. நான் என்னுடைய பங்கை ஆற்றுகிறேன். வருவது வரட்டும். நான் எதிர்கொள்வேன்."

"அப்ப சரி, இவ்வளவு உறுதியாக இருந்தால் நான் ஒன்றும் செய்வதற்கில்லை".

"சரிங்க சார், நான் கிளம்புகிறேன். ரொம்ப நன்றி, நீங்கள் என் மீது காட்டிய பரிவுக்கு."

அவள் புன்னகைத்தப்படி வெளியேறினாள். அலுவலகத்தைவிட்டு வெளியே வந்ததும் அவள் சபேசனைப்பற்றி எண்ணமிடலானானள். அவர் ஓய்வு பெற்றுவிட்டாலும் அவருக்கு அரசு ஒரு பதவியைத் தந்து நாற்காலியில் அமர்த்தியிருந்தது. அது ஆளுங்கட்சிக்கு அவர் காட்டிய விசுவாசத்தினால் என்று வெளியில் பேசிக் கொண்டார்கள். ஆளுங்கட்சிக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை பலருக்கு ஏற்படுத்தியிருந்தது.. சபேசன் என்று மட்டுமில்லை பல அதிகாரிகள் ஓய்வு பெற்றும், ஏதாவது ஒரு வகையில் அதிகாரத்தில் நீடித்திருக்கும் வழிகளைப் பற்றித்தான் பலர் யோசித்துக் கொண்டிருந்தனர். என்பது நீலாவுக்குத் தெரியும்.

நீலா சர்வீஸில் சேர்ந்த புதிதில், அதிகாரிகளுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட விருந்தொன்றில் தான் அவரை முதன் முதலில் சந்தித்தாள். விருந்தில் எல்லோரும் எல்லோருடனும் கலந்து பழக வேண்டும் என்பது எழுதப்படாத விதி. தொடர்ந்து ஒரு சிலராய் மட்டும் கூடிப் பேசக் கூடாது. எல்லோரும் சாப்பிட்டவாறே நகர்ந்து கொண்டிருப்பார்கள். நீலா சபேசனை நெருங்கி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள். ஆனால் அவர் அதை விரும்பாதவர் போல், தன்னைப் பற்றி எந்த அறிமுகமும் செய்துக் கொள்ளாமல் உடனே இடம் பெயர்ந்து விட்டார்.. பொதுவாக தலித் அதிகாரிகள் பொது இடங்களில் பிறர் காணும்படியாகக் கூடிப் பேசுவதைத் தவிர்த்து வந்தனர். சபேசனும் அதையேதான் செய்தார்.

மற்றொருமுறை அலுவல் நிமித்தமாக சபேசனைப் பார்க்கச் சென்றிருந்தாள். நெடுநேரம் வெளியே காத்திருக்க வைத்து உள்ளே அழைத்தார் சபேசன்.. அவள் முறுவலுடன் நாற்காலியில் அமரச் சென்ற போது, 'என்னம்மா என்ன விசயம்? நான் பிஸியாக இருக்கிறேன்' என்றார். அவள் வந்த விசயத்தைக் கூறத் தொடங்கியபோது, அவளுக்கும் இளைய அதிகாரி ஒருவர் கதவைத் தட்டி சடக்கென நுழைந்தார்.. சபேசன் எழுந்து நின்று கைகொடுத்து அவரை வரவேற்றார். அந்த அதிகாரியைப் பற்றி சம்பிரதாய விசாரிப்புகள் செய்து, 'நீலா ரொம்ப அர்ஜென்ட் இல்லன்னா, அப்புறம் பார்க்கலாமா?' என்றார். 'சார் இன்னும் ஒரு நிமிடம்தான்.' என தான் தொடங்கியதை முடித்துக் கொண்டு கிளம்பினாள். அப்போது சபேசனின் செய்கை அவளுக்கு வித்தியாசமாகத் தெரிந்தது.

இம்மாதிரியான பல சந்தர்ப்பங்களிலும் சபேசன் அவளுடன் தனியாகப் பேசுவதையோ, குறைந்தபட்ச விசாரிப்புகளையோ தவிர்த்தவர் என்ற எண்ணம் அவள் மனதில் ஆழமாக வேருன்றியிருந்தது.

பிற சமூகத்தவர்கள் அப்படியில்லை. தங்களுக்குள்ளே சாதிவாரியாகக் கூடி பேசிக்கொள்வார்கள். பிறருடன் பேசும்போது அதிகார அடுக்கு வரிசை மட்டுமே கவனத்தில் இருக்கும். அதற்கு ஏற்றவாறு ஏற்ற இறக்கத்துடன் பேசுவார்கள். பிற சமூகத்து

**தலித் அதிகாரிகளுக்கு அரிதாக வேனும் முக்கிய பணியிடங்கள் கிடைத்துவிடக் கூடாது என்பது அவர்களிடையே எழுதப்படாத ஒப்பந்தமாகவே இருந்து வந்தது. தப்பித் தவறி கிடைத்துவிட்டால் ஆளும் கட்சியின் அடிவருடி, ஊழல் பேர்வழி என்று குற்றம்சாட்ட அவர்கள் தயங்குவதே இல்லை.**



படிப்பகம்

www.padippakam.com

**"லுக் நீலா. அரசாங்கம் வலிமையானது அவர்கள் நினைத்தால் எது வேண்டுமானானலும் செய்வார்கள். உன் மீது இல்லாததும் பொல்லாததும் சொல்லி உன் வேலையைப் பறிக்கக் கூடத் தயங்க மாட்டார்கள். அது மட்டுமல்ல நீ நேசிக்கும் நம் மக்களே வெறுத்துக் கொள்ளும்படி ஏதாவது கிளப்புவார்கள். அப்போது நம் சமூகம் உன்னைக் காப்பாற்ற முன் வருமா? பதவி இல்லாவிட்டால் உன்னைத் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டார்கள். புரிந்துக் கொள்"**

அதிகாரிகளை அனைவருமே சாதிரீதியான குறுகிய மனோபாவம் கொண்டவர்கள் என்று எளிதில் கூறி விட முடியாது. ஆனால் பல விதங்களில் அவர்கள் சாதி காப்பாற்றி வந்தார்கள்.

உணவு இடைவேளைகளில் இளைய அதிகாரிகள் தனியாகவும், மூத்த அதிகாரிகள் தனியாகவும் சந்தித்து உணவருந்துவார்கள். அந்த சந்தர்ப்பங்களில் தலித் அதிகாரிகளை பிறர் விமர்சிப்பார்கள். அவர்கள் ஆங்கிலம் பேசுவது, தமிழ் பேசுவது, கீழதிகாரிகளுக்கு உத்தரவிடுவது, மேலதிகாரிகளிடம் பணிந்து நடப்பது அல்லது மோதுவது, அலுவலகக் கோப்புகளை படிக்கவில்லை என்பது, அல்லது நுணுக்கமாகப் படித்துவிட்டனர் என்பது, அவர்கள் தூங்குவது, நடப்பது போன்ற எல்லாமே அவர்களுக்கு கேலிப் பொருள்தான். சில சமயங்களில் தலித் அதிகாரிகளின் தோல்நிறம் மற்றும் பெயர்கள் கூட அவர்களிடையே நகைப்புக்கு இடமாகிவிடுவதுண்டு. எப்போதாவது சில சமயங்களில் பிறரையும் அவர்கள் விமர்சிப்பார்கள். அது பெரும்பாலும் பாராட்டாகவே இருக்கும்

இது ஒரு வகையான வெளிப்பாடு என்றால், தலித் அதிகாரிகளுக்கு அரிதாகவேனும் முக்கிய பணியிடங்கள் கிடைத்துவிடக் கூடாது என்பது அவர்களிடையே எழுதப்படாத ஒப்பந்தமாகவே இருந்து வந்தது. தப்பித் தவறி கிடைத்துவிட்டால் ஆளும் கட்சியின் அடிவருடி, ஊழல் பேர்வழி என்று குற்றம் சாட்ட அவர்கள் தயங்குவதே இல்லை.

இதைவிடக் குரூரமாகவும், நுணுக்கமாகவும் சாதி வெளிப்படும். அதிகாரிகள் குறித்த ரகசிய அறிக்கை ஒவ்வொரு வருடமும் அவர்களது மேலதிரிகளால் தயாரிக்கப்படும். மிக மிகத் திறமையானவர் என்று தொடங்கி மிகவும் மோசமானவர் என்பது வரை மதிப்பீடுகள் அவற்றில் உண்டு. இந்த மதிப்பீட்டின் அடிப்படையிலேயே பதவி உயர்வு, மத்திய அரசில் முக்கியப் பொறுப்புகள் ஆகியவை வழங்கப்படும். தலித் அதிகாரிகள் பெரும்பாலும் வடிகட்டப்பட்டு விடுவார்கள். விதிவிலக்காக சிலர் மட்டுமே மிஞ்சுவர். அந்த விதிவிலக்கில் தானும் இருப்பதைக் கருதிதான் விசுவேசுவரன் 'வீணாகக் கெடுத்துக் கொள்ளாதே' என்று சொல்லியிருப்பாரோ என்று நீலா எண்ணத்தலைப்பட்டாள்.

'காட் ஃபாதர்' இல்லாவிட்டால் சர்வீஸில் எதிர் நீச்சல் போட முடியாது என்று மத்திய பிரதேசத்து அதிகாரி குப்தா என்பவர் ஒருமுறை நீலாவிடம் சொன்னார். ஆனால் யோசித்துப் பார்க்கையில், தனக்காக அரசிடம் பரிந்து பேசுபவரோ, முக்கிய பொறுப்புகள் வழங்கப் படவேண்டும் என்று வாதாடக் கூடிய அரசியல் தலைவரோ அல்லது தொழிலதிபர்களோ யாருமே இல்லை என்பது புரிந்தது. பிறஅதிகாரிகள், பல்வேறு காரணங்களால் புறக்கணிக்கப்படும்போது, ஓரங்கட்டப்படும்போது அல்லது தண்டிக்கப்படும்போது உறவினர்கள்/சாதிக்காரர்கள் என்ற வகையில் தொழிலதிபர்கள்/அரசியல்வாதிகள் விரைந்து செயலாற்றி பாதிக்கப்பட்டவருக்கு புணர்வாழ்வு கொடுத்துவிடுகின்றனர். சாதிக்கான குழுமங்கள், உறவினர்கள், சக அதிகாரிகள், தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள் என்ற போர்வையில் விரைந்து செயலாற்றி விடுகின்றனர். நீலா எப்போதுமே கடினஉழைப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை இவற்றின் துணை கொண்டே இத்தனை வருடங்களும் சர்வீஸில் ஒட்டிக் கொண்டிருக்கிறாள்.

இந்த நினைவுகள் தன்னைப் பற்றிய கழிவிரக்கத்திற்குப் பதிலாக அவளுக்கு தெம்பை ஊட்டியன. அவள் எதிர் நீச்சலுக்கு தயாரானாள். வருவது வரட்டும், மேலிடம் கேட்கின்ற கடிதத்தை எழுதிக் கொடுக்கக் கூடாது என உறுதி செய்து, சாதாரணமான கடிதம் ஒன்றைத் தயார் செய்தாள்.

ஐயா,

எனக்குப் பணியிடம் ஒதுக்கப்படவில்லை. விரைவில் ஒதுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் உண்மையுள்ள

நீலா

இக்கடிதத்தை எழுதி முடித்த அவள் விசுவேசுவரனை நேரில் சந்தித்து கொடுத்துவிடத் தீர்மானித்தாள்.

●

தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

# நிலவுரிமை இயக்கம் கோரிக்கைப் பேரணி மார்ச் 13-2006











திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் வட்டத்தில் தலித் நிலவுரிமை இயக்கம் சார்பாக கோரிக்கைப் பேரணி மற்றும் ஆர்ப்பட்டம் நடைபெற்றது. இயக்கத் தோழர்கள் தாரை தப்பட்டை முழங்க ஊர்வலமாகச் சென்று திண்டுக்கல் மாவட்ட பொறுப்பாளர் திரு தலித் சிவா அவர்கள் தலைமையில் வட்டாச்சியரிடம் மனு அளித்தனர். திரு தலித் சிவா அவர்கள் உடல் நலம் குன்றிய நிலையில் இருந்தும் கூட அவரது மிகச் சிறப்பான செயல்பாட்டின் மூலம் அனைத்து மக்களின் பாராட்டைப் பெற்றார்.

படிப்பகம்

www.padippakam.com

# நிலவுரிமை இயக்கம் கோரிக்கைப் பேரணி மார்ச் 13-2006











வேலூர் மாவட்டம் அரக்கோணம், காட்பாடி, திருப்பத்துர் மற்றும் வாணியம் பாடி வட்டத்தில் தலித் நிலவுரிமை இயக்கம் சார்பாக கோரிக்கைப் பேரணி மற்றும் ஆர்ப்பட்டம் நடை பெற்றது. இயக்கத் தோழர்கள் ஆர்வத்து டன் கலந்து கொண்டனர். திரு வீரராக வன் அவர்கள் தலைமையில் நடை பெற் றது. கன்னியப்பன் ஆசிரியர், மோகன்ராஜ், இஸ்மாயில், ராஜ், ரகு, ராஜா, ஜெயா, அன்பு மற்றும் திரு. கஜேந்திரன் அவர்களும் கலந்து கொண்டனர்.

www.padippakam.com



# தலித் நிலவுரிமை இயக்கம் கோரிக்கைப் பேரணி மார்ச் 13-2006







திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டம் மார்ச் 13 அன்று மாவட்டப் பொறுப்பாளர் திரு. சிவக்குமார் அவர்கள் தலைமையில் ஆர்ப்பட்டம் மற்றும் பேரணி நடைபெற்றது.இயக்கத்தைச் சேர்ந்த அனைவரும் வெயிலையும் பொருட்படுத்தாது மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை மாவட்டப் பொறுப் பாளர் திரு. சிவக்குமார் அவர்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்துத் தாலு காக்களுக்கும் சென்று இந்த கோரிக்கைப் பேரணியை ஒருங்கிணைத்தார். அவரது செயல்பாடுகள் பாராட்டுக் குரியது.



படிப்பகம்

www.padippakam.com

# தலித் நிலவுரிமை இயக்கம் கோரிக்கைப் பேரணி மார்ச் 13-2006









திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் மார்ச் 13 அன்று மாவட்டப் பொறுப்பாளர் திரு. சிவக்குமார் மற்றும் திரு. காமராஜ் அவர்கள் தலைமையில் ஆர்ப்பட்டம் மற்றும் பேரணி நடை பெற்றது. இயக்கத்தைச் சேர்ந்த அனை வரும் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

# மகளிர் தினம்

## பெண்ணின் பெருமை

● சிவகாமி

**அமாவாசை, பாட்டிமை என்று கோள் பார்த்து விரதம் இருந்த பெண்கள் மகளிர் தினத்தையும் கோள் பார்த்து குறித்த தினமாக நம்புகிறார்களோ? மார்ச் மாதத்தில் எல்லா மகளிர் நிறுவனங்களும் கல்லூரியிலிருந்து வில்லேஜ வரை மகளிர் தின திருவிழாக்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.**

மகளிர் தினத்திற்கு வரும்படி அழைத்த மகளிர் குழுத் தலைவியிடம் மார்ச் மாதம் வர இயலாது. நீங்கள் விரும்பினால் ஏப்ரல் இரண்டாவது வாரத்தில் வருகிறேன் என்றேன். ஏப்ரல் மாதம் மகளிர் தினம் கொண்டாடலாமா, தப்பில்லையா? என்று கேட்டார் அவர். அமாவாசை, பாட்டிமை என்று கோள் பார்த்து விரதம் இருந்த பெண்கள் மகளிர் தினத்தையும் கோள் பார்த்து குறித்த தினமாக நம்புகிறார்களோ? இவ்வாறு மார்ச் மாதத்தில் எல்லா மகளிர் நிறுவனங்களும் கல்லூரியிலிருந்து வில்லேஜ் வரை மகளிர் தின திருவிழாக்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

பிராமணப் பெண்கள் மட்டும் தான் பரத நாட்டியம் ஆட வேண்டுமா நாங்களும் ஆடுவோம் என்று சிலர் அதை பள்ளிச் சிறுமிகளைக் கொண்டு கர்முர் டேப்பைப் போட்டு சினிமாவில் வரும் பரத நாட்டியங்களை துள்ளலான பாடலோடு அரங்கேற்றினார்கள். சிலர் இயந்திரத்தனமான இடதுசாரிகளின் புரட்சிப் பாடல்களைப் பாடத் தொடங்கினர். குத்துவிளக்கேற்றி, கல்கண்டு வழங்கி, ரோஜாமலர் கொடுத்து மகிழ்ந்தனர் சிலர்.

ஒரு கண்ணில் அம்மை விழுந்து பார்வை யற்றிருக்க, மறுகண் அயர்ச்சியில் மூடியிருக்க மேடையில் ஆரவாரம் அதிகமாகியதும் விழித்தார் கிராமத்துப் பெண்மணி. தினமும் கூலிவேல அரை நாளுக்கு ரூ.30. முழுநாளுக்கு 60ரூ. சம்பளம் என்றும் மாதத்தில் பத்துநாட்கள் கூட முறையாக வேலை கிடைப்பதில்லை என்றும் மூத்தமகன் 9வது படித்த கையோடு கூலிவேலைக்குப் போகிறான் இரண்டாவது மகன் 7ம்வகுப்பில் படிக்கிறான், ரொம்ப கஷ்டமாயிருக்கு என்றும் கூறிக்கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் விழாவில் கொடுத்த பன்னீர் ரோஜாவை தலையிலிருந்து எடுத்து உண்ணத் தொடங்கினார். வற்றி உலர்ந்த அவரது வயிற்றுக்கு அது போதவே போதாது. மகளிர் குழுக்களின் சுழல் நிதியும் அப்படித்தான். என் மனதில் இந்தியப் பெண்கள் பற்றிய வரைபடம் உருவாகியது.

Woman's Era, Savvy, Femina, அவள் விகடன், மங்கையர் மலர் போன்ற பத்திரிக்கைகளை அலங்கரிக்கும் மேலைய நாகரிகத்திலும், குடும்பப் பாங்கு குத்துவிளக்குத் தோற்றங்களிலும் உயிரற்ற மைதா பதுமைகளைப்போல் அலங்கரிக்கும் பெண்கள் ஒரு தினுசு என்றால் பொய்க்கால் போன்ற உயரமான நிஜக் கால்களில் நின்று கொண் டிருக்கும் விளம்பரப் பெண்கள் மாநகரத்தின் விளம்பரக் கட்அவுட்டுகளில் வேறு தினுசாக இருந்தார்கள். கால்சென்டர்களில் கணிணியோடு கணிணியாக உறைந்திருக்கும் படித்த பெண்கள் இப்படி சில தினுசு. பத்தினிப்பெண் வேடங்களில் குங்குமமும் மல்லிகையும் அட்டிகை, ஒட்டியாணத்தில் அடைபட்டுச் சென்ற தலைமுறையின் எச்சங்களாக சில உயர்த்தட்டுப் பெண்கள். இந்தத் தலைமுறையிலும் முக்காடும் பர்தாவுமாக உருதும் ஆங்கிலமும் பேசும் இஸ் லாமியப் பெண்களில் சிலர். அவர்களில் பலர் வாணியம்பாடி, வேலூர், திருநெல்வேலி, பகுதிகளில் பீடி சுருட்டும் ஏழைப் பெண்களாக! கம்பளம் தயாரிக்கும் ஏழைப் பெண்கள், சொத்துக்கள் உள்ள கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த உயர்கல்வி பெற்று வெளிநாட்டு exposure உடன் சில பெண்கள். தென்னிந்திய திருச்சபையின் ஆதரவில் நடக்கும் கல்லூரிகளில் படித்து தன்னம்பிக்கைப் பெற்ற சில பெண்கள், பெந்தகொஸ்தே மற்றும் இதர ஏழை திருச்சபைகளில் உயிருக்கு மன்றாடுவது போல முனகலுடன் செபத்தில் ஈடுபட்டிருக்கும் கணக்கற்ற பெண்கள். மாரியம்மனுக்கு நேர்ந்து கொண்டு அலகு குத்தி அக்கினிச் சட்டி வேப்பிலையோடு ஆடும் பெண்கள். நகரக்கழிவு அகற்றும் சென்னைக் குடி சைப் பகுதி பெண்கள். சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவப் பெண்கள். சாதிக் கொடுமையிலும் வறுமை யிலும் வாடும் தலித் பெண்கள். படித்தால் வேலை கிடைக்குமா, தகுந்த துணை கிடைக்குமா என்ற எதிர்பார்ப்பில் கல்லூரிப்பெண்கள்.

பெண்கள் இப்படிப் பலவாறாய் உள்ளனர். பெண்களுக்கு பெண்கள் வித்தியாசப்படுகிறார்கள்



படிப்பகம்

www.padippakam.com

என்று பன்மைத் தன்மைப் பற்றிப் பேசுபவர்கள் வர்க்கம் மற்றும் சாதி ஒடுக்குமுறையால் உருவாகியுள்ள ஏற்றத்தாழ்வுகளை அலட்சியப்படுத்தி பொதுமை பேசுகிறார்கள்.

பெண்களுக்கு சாதி கிடையாது என்பதும் பெண் என்பதாலேயே ஒடுக்கப்படுவதும் வரலாறு நெடுகிலும் பதிவு செய்யப்பட்ட உண்மைகள். ஆனால் சாதி காப்பாற்றும் பொறுப்பை நிறைவேற்றும் பொறுப்பில் அவர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள் என்பதும் உண்மையே. இதைக் கட்டுடைக்கும் முயற்சியிலேயே தலித் பெண்ணியம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

பெண்ணடிமை முறையை ஒழிக்கும் முயற்சியில் சில தளங்கள் முன்னேற்றம் உள்ளது.

பெண்கல்வி கட்டாயக் கல்வியாக ஓரளவு மாற்றம் பெற்றுள்ளது. எனினும் ஆண் பெண் ஒப்பீட்டில் பெண்கள் பின்தங்கியுள்ளனர். அதேபோல் வசதி வாய்ப்பு பெற்ற பெண்களுக்கும் அது மறுக்கப்பட்ட பெண்களுக்கும் இடையில் பெருத்த வேறுபாடு நிலவுகிறது.

பெண்கள் எல்லாத் துறைகளிலும் வேலை வாய்ப்புப் பெற்று சாதனைப் படைத்திருக்கிறார்கள். எனினும் அது உரிய சதவிதத்தை எட்டவில்லை. குறிப்பாக அடித்தட்டுப் பெண்களுக்கு அரசு தனியார் துறைகளில் போதுமான பிரதிநிதித்துவம் கூட இல்லை.

பெண்கள் அரசியலில் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கிறார்களே தவிர அவர்கள் ஆணாதிக்கச் சிந்தனையையே பின்பற்றுகிறார்கள். இந்தவகை அரசியல் பிரதிநிதித்துவம் கூட தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு கிடைப்பதில்லை.

பாலியல் வன்கொடுமையை அனைத்துத் தரப்புப் பெண்களும் சந்திக்கின்றார்கள் எனினும் சாதி வன்கொடுமையையும் சேர்த்து எதிர்கொள்கிறார்கள் தலித் பெண்கள்.

அடிப்படைத் தேவைகள் பூர்த்தியான நிலையில் பாலியல் சுதந்திரம் சமத்துவத்தை நோக்கி சிலரும், அடிப்படை வசதியின்மை, வறுமை இவற்றிற்காக போராடும் பெண்கள் பலருமாக இருக்கிறார்கள்

மகளிர் சுயஉதவிக் குழுக்களில் பலர் சுழல் நிதியை மட்டும் பெற்று தங்களின் சிறு சிறு உடனடித்தேவைகளை பூர்த்தி செய்யும் நிலையில் பலரும், சுழல் நிதியோடு பொருளாதாரக் கடன் பெற்று சுயதொழில் வேலைவாய்ப்புப் பெற்ற சிலருமாக உள்ளது தற்போதைய நிலை.

மேற்கண்ட சூழலில் பெண்கள் தரப்பில் உள்ள கோரிக்கைகள் தான் என்ன?

**பெண்கள் திரள் என்பது அரசியல்படுத்தப்படாத குறைந்தபட்ச வேலைத்திட்டங்களில் நெறி முறைப்படுத்தப்படாத பல்முனைத் தாக்குதலுக்கு ஆளாகி சிதறுண்ட தனித்தனி திரட்சியாகவே உள்ளது.**

கல்வி, பொருளாதாரம், அரசியலில் 33% ஒதுக்கீடு இதுதான் இன்றைய பிரதான கோரிக்கை. இது பெண்ணடிமையை ஒழிக்க போதுமானதாகக் கருதப்படுகிறது. ஆனால் இது தனியார்மயம் உலகமயத்தின் விளைவாக அதிகாரக் குவிப்பு, போட்டி முறையிலான சந்தையமைப்பில், தகுதி பெற்றவர்களுக்கான வாய்ப்பைத்தான் முன்மொழிகிறது. ஆணாதிக்கச் சிந்தனையோடு இயங்கும் அரசியல் கட்சிகளில் பங்கு கேட்கின்றது. இருக்கின்ற சட்டங்களை முறையாக அமல்படுத்தக் கோரிக்கைகள் வைக்கிறது. சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை குறிப்பாக சாதியையோ ஆணாதிக்கச் சிந்தனையையோ, கல்வி முறையில் மாற்றத்தையோ, கோருவதாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் இதற்கான வேலைத்திட்டங்களை இப்போதிருக்கும் பெண்கள் இயக்கங்கள் கொண்டிருக்கவில்லை. உதாரணத்திற்கு 1955க்குப்பிறகு பெண்களுக்கு சொத்துரிமை கிடைத்தது. 1989ல் இச்சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதன்மூலம் கூட்டுக் குடும்பத்தில் ஆண் சொத்துக்ளை நிர்வகிக்கும பொறுப்பாளராக இருந்தாலும், அவர் இறக்கும் பட்சத்தில் பேரன்கள் மட்டுமல்லாது பேத்திகளும் வாரிசுகளாகக் கருதப்படவேண்டும். ஆனால் கூட்டுக் குடும்பமாக வாழும் வீட்டில் தனக்கு உரிமையிருக்கிறது என்று எந்தப் பெண்ணும் சொத்தைத் தனக்குப் பிரித்துக் கொடுக்கும்படி கேட்க முடியாது. மொத்தத்தில் 1989 சட்டப்படி 5 சதவிகிதப் பெண்களே சொத்துரிமை பெற வாய்ப்புள்ளது. இந்த மாற்றங்கள் கூட பிற மாநிலங்களில் இல்லை எனத் தமிழகம் பெருமைபட்டுக் கொண்டாலும், ஆண்களுடைய சொத்துக்களை சுவீகரிக்க மட்டுமே முடியும் என்பதும் ஆண்களுக்கு சொத்துக்கள் இல்லையென்றால் பெண்கள் சொத்துரிமை பெற முடியாது என்பதும் நடைமுறை உண்மை. திருமணங்களில் பெறும் சீதனங்கள் பெண்ணுக்கு சொத்து என்று சட்டம் கூறும் போது வரதட்சனை என்பது மறைமுகமாக அமல்படுத்தப்படுகிறதாக அர்த்தமாகிறது. மேலும் பெண்களே சம்பாதித்து சொத்துக்களை அடைவதை யாரும் தடுக்க முடியாது என்றாலும் அதற்கான வாய்ப்புகளும் மறுக்கப் படுகையில் சொத்தில் சமஉரிமை என்பதை இப்



படிப்பகம்

www.padippakam.com

போதுள்ள சட்டங்களால் சாத்தியப்படுத்த முடியாது என்பது தெளிவாகிறது.

அதே போல் 1960ல் கொண்டு வரப்பட்ட நில உச்ச வரம்பு சட்டம் தற்போதைய தேவைகளையும், விவசாய நடைமுறைகளையும் கருத்தில் கொண்டு மாற்றியமைக்கப்பட்டு உழைக்கும் பெண்கள் நிலத்துக்கு உடைமையாளர்களாக மாறும் வண்ணம் திருத்தம் தேவைப்படுகிறது. இம்மாதிரி ஒவ்வொரு சட்டமும் பெண் நோக்கில் நுணுகி ஆராயப்பட வேண்டிய தேவை உள்ளது. அதேபோல் பாலியல் கல்வி/பெண் விடுதலைக் கல்வியை அடிப்படையாகக் கொண்டு கல்வி முறையிலும் மாற்றங்கள் தேவைப்படுகின்றது.

கனிம வளங்கள், இயற்கை வளங்கள் இவை பெண்களும் ஈடுபட்டு பாதுகாத்துப் பேணவும் பயன் படுத்தவும் ஏதுவாக மறுபங்கீடு முறையையும் பரிசீலிக்க வேண்டியது.இயற்கை சுற்றுச்சூழல் இவற்றோடு இணைந்த தன்னிறைவு கொண்ட பொருளாதாரம் என்பது பெண்களின் பங்களிப்பினாலேயே பூரணத்தை நோக்கி நகரும்.சாதிப் பாகுபாட்டிலான ஒடுக்குமுறையை களைய முற்படுவதே சமூக மாற்றத்திற்கான அறிகுறி.

ஆகவே 33 சதவிகித ஒதுக்கீடு கேட்டு போராடும் இயக்கங்கள் மேற்கண்டவற்றை வென்றெடுப்பதற்கான வேலைத் திட்டங்களை வகுத்துச் செயல்படவேண்டிய அவசியமுள்ளளது.

இந்த வேலைத் திட்டங்கள் மூலம் பெண்களையும் ஆண்களையும் அணிதிரட்டுவதே பெண்கள் முன்னேற்றத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியாகும். பெண்கள் பிரதிநிதித்துவம் என்பது அரசியல் கட்சிகளுக்கு வால் பிடிப்பது கலர் சேர்ப்பது என்று சுருங்கியிருக்கும் நிலையிலிருந்து பன்முக வளர்ச்சியை எட்டவேண்டும். அரசியல் கட்சியின் மாதர் அணிகள் தொடர்ந்து அக்கட்சிகளுக்கு வால்பிடித்தால் அது பெண்ணினத்திற்கு பெருமை சேர்ப்பதாகாது.

எனக்குத்தெரிந்த பத்தாயிரம் பெண்கள் கொண்ட மகளிர் சுயஉதவிக் குழுக்களின் கூட்டமைப்பின் தலைவி சுயேச்சையாகத் தேர்தலில் நின்ற போது பெண்கள் யாரும் வோட்டளிக்க முன் வரவில்லை. பெண்கள் திரள் என்பது அரசியல்படுத்தப் படாத தத்துவங்களால் இணைக்கப்படாத குறைந்தபட்ச வேலைத்திட்டங்களில் நெறி முறைப்படுத்தப்படாத பல்முனைத் தாக்குதலுக்கு ஆளாகி சிதறுண்ட தனித்தனி திரட்சியாகவே உள்ளனர்.

பெண்ணியச் சிந்தனை, அரசியல் விழிப்புணர்வு பொதுவான மற்றும் தனித்த (தலித்/பழங்குடி/அரவாணி/சிறுபான்மையினர்) அடையாளங்கள் உள்ள பெண்களுக்கான வேலைத் திட்டங்களால் ஒரு வலைப்பின்னலுக்குள் நேர்த்தியாக இணைக்கப்படவேண்டும். இந்த ஒற்றுமைக்கு வழி வகுப்போம். பெண்ணினத்திற்கு பெருமை சேர்ப்போம்.

## உலகம் உள்ளவரை....!

அறியாமைப் பேரிருள் படர்ந்திருந்த போழ்தில்
அடிமையின் எச்சங்கள் சூழ்ந்திருந்தவேளை;
குறிக்கோளை உணர்ந்தவராய் கிளர்ந்து எழுந்து
கொள்கையைத் தாங்கியவராய் முனைந்து வந்து
வரும்புயலை தடுத்திடவே களங்கள் கண்டவர்!
விடியலை நோக்கியே பயணம் கொண்டவர்!
தரும் பதவிகள் எதையும் துச்சம் என்றே
தனித்துநின்று போராடுவேன் எனத் துணிந்தவர்

சாதிமறுப்பு கடவுள்மறுப்புச் சொல்லிச் சொல்லி
சாட்டையடி கொடுத்துமே விளக்கம் தந்து,
ஆதிதிராவிடர்மற்றும் அனைவருக்கும் விளக்கம் தந்து
அரணாக நின்று நம்மானம் காத்தவர்!
ஆதிக்கம் இல்லாத அருமை நல்லாட்சி
அமைத்திட வேண்டி முனைப்பாய் இருந்தவர்!
போதிமரப் புத்தரின் சிந்தனைகள் கூறி
பகுத்தறிவுச் சுடராய் பாரில் ஒளிர்ந்தவர்!

அம்பேத்கார்கொள்கைகளை அகத்திலேந்தி
அனைத்திந்திய அளவில் விடிவெள்ளியாய் எழுவோம்!
செம்மாந்த அண்ணலின் சீர்திருத்தக் கருத்துக்கள்!
சிந்தனைகள் ஒவ்வொன்றும் வெடிக்கும் எரிமலை!
இகழ்வார்முன் பீடுநடை கொண்டு வாழ்ந்த
ஏந்தலாம் ஏறுநடை சவுதார் குள(ம்) வீரரவர்!
பகலவன் அம்பேத்கார் புகழ்பாரில் நிறைந்து
பேசட்டும் உலகம் உள்ளவரை சிறந்தே!

துறையூர் கவிஞர் மு.க. தங்கராசு.



படிப்பகம்

www.padippakam.com

# தலித் நில உரிமை இயக்கம்

## தமிழ்நாடு மற்றும் புதுவை

### அனைத்து அரசியல் கட்சிகளின் கவனத்திற்கு...

மதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

தலித் நிலஉரிமை இயக்கத்தின் சார்பாக இந்த விண்ணப்பத்தை தங்களது சமூகத்தின் முன் சமர்ப்பிக்கின்றோம்.

தலித் நில உரிமை இயக்கமானது விவசாயத்தையே நம்பி வாழும் நிலமற்ற தலித் ஏழை மக்களுக்கு நிலத்தை பெற்றுக் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு இயக்கமாகும். தலித் மக்களின் இன்றைய நிலை பற்றிய சில புள்ளிவிவரங்களை தங்களின் கனிவான கவனத்திற்கு சமர்ப்பிப்பது அவசியமாகிறது.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்வார் என்ற வள்ளுவன் வாக்கு இன்றைய உலகமயமாதலினால் பொய்யாகிவிட்டது. நெற்றி வேர்வை நிலத்தில் விழ பாடுபடும் பாட்டாளி வர்க்கத்திற்கு நிலமே சொந்தமில்லை. 1991 கணக்கெடுப்பின்படி தலித் மக்களும் பழங்குடியினரும் மொத்த மக்கள் தொகையில் 20.21 சதவிகிதம் உள்ளனர். மட்டுமின்றி தலித் மக்களில் விவசாயதொழிலில் உள்ளவர்கள் தமிழ்நாட்டில் 81.85 சதவிகிதம்பேர். பிறசாதியினர் மக்கள் தொகையில் 79.79 சதவிகிதம் இருப்பினும் விவசாயத்தில் ஈடுபடுபவர்கள் 55.89 சதவிகிதம் பேர் மட்டுமே. தலித்துக்களில் விவசாயக் கூலிகளாக உள்ளவர்கள் (1991) 63.17 சதவிகிதம். ஆனால் பிறசாதிகளில் விவசாயக் கூலிகளாக உள்ளவர்கள் 26.21 சதவிகிதம் மட்டுமே பெரும்பான்மை தலித் மக்கள் விவசாய கூலிகளாகவே உள்ளனர். நில உரிமையில் உள்ள ஏற்றத்தாழ்வை நீக்குவதற்கு பல நில சீர்த்திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டாலும் அதன் மூலம் நிலமற்ற விவசாய கூலி வேலை செய்கின்ற தலித் மக்கள் முழுமையாக பயன்பெறவில்லை என்பதே உண்மை.

**தமிழ்நாட்டில் சமூகவகைப்பாட்டின் அடிப்படையில் நிலம் பகிர்ந்தளிக்கப்பட்ட விவரங்கள்**
**(எண்ணிக்கை, ஆயிரத்தில், நிலம் ஆயிரம் ஹெக்டேரில்)**

| சமூக வகைப்பாடு | மக்கள் தொகை சதவீதத்தில் 1991 | எண்ணிக்கை | | | நிலப்பரப்பு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 85-86 | 90-91 | 95-96 | 85-86 | 90-91 | 95-96 |
| அட்டவணைச் சாதியினர் | 19.18 | 876 (11.4) | 904 (11.3)( | 911 11.4) | 557 (7.1) | 534 (7.1) | 527 (7.2) |
| பழங்குடியினர் | 1.03 | 58 (0.8)(0 | 67 8)(0 | 62 8) | 87 (1.1) | 87 (1.1) | 77 (1.1) |
| பிறர் | 79.79 | 6772 (87.9) | 7029 (87.9) | 7039 (87.9) | 71526 (91.7) | 853 (91.7) | 6699 (91.7) |
| மொத்தம் | 100.00 | 7706 (100) | 8000 (100) | 8012 (100) | 7796 (100) | 7474 (100) | 7303 (100) |



படிப்பகம்

www.padippakam.com

மேற்கண்ட புள்ளி விவரத்தின்படி, நில உச்சவரம்பு சட்டத்தின் (1961) கீழ் நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டாலும் அவை பெரும்பாலும் பிற சமுகத்தை சார்ந்தவர்களுக்கே அதிகமாக பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் தமிழக அரசின் நிதி ஒதுக்கீட்டில் பெரும்பகுதி விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில்கள், நீர்பாசனம், மின்சாரம் ஆகியவற்றிற்காக செலவு செய்யப்பட்டாலும் அதிகமாக பயன் பெற்றவர்கள் உயர் சமூகத்தைச் சார்ந்த இந்து விவசாயி களே. மேலும் மத்திய அரசினால் செயல்படுத்தப்படும் பல்வேறு அரசுத் திட்டங்கள் (இந்திரா யோஜனா பிரதான் மந்திரிதிட்டம், ஸ்வர்ண ஜெயந்தி திட்டம், சம்பூர்ண வேலைவாய்ப்புத் திட்டம்) கிராமப்புறத்திலுள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்தாலும் இதன் மூலம் உருவாக்கப்படும் சொத்துக்கள் மேல்மட்ட வகுப்பினருக்குத்தான் பயன்படுகின்றனவே ஒழிய தலித் மக்களுக்கு எவ்வகையிலும் பயனளிக்கவில்லை.

மேலும் நிலம் /விவசாயம் அரசின் ஆதாரமாக விளங்கி வந்தாலும் அரசு நிதி ஒதுக்கீட்டில் அதிக அளவு நிதி ஒதுக்கப்பட்டது நிலமும் நிலம் சார்ந்த தொழில்களுக்கு மட்டுமே. ஆனாலும், விவசாயம் மூலம் பெறப்படும் நேரடி வரி வருவாய் மிகவும் குறைவு. விவசாயத்தை பொறுத்த வரையில் வருமானம் என்ற அளவில் வைத்துப் பார்க்காமல் பெரும்பான்மையான மக்களுக்கு வேலைவாய்ப்பு என்றளவில் வைத்து அரசு கணித்தாலும் இத்துறையில் வேலைவாய்ப்புகள் குறைந்து கொண்டே வருகின்றன.

**வேலைவாய்ப்பில் வளர்ச்சிவிகிதம்**
**(வருடாந்திரம்)**

| | கிராமப்புறம் | நகர்ப்புறம் |
|---|---|---|
| *1983 முதல் 1987-88* | *1.36* | *2.77* |
| *1987-88 முதல் 1993-94* | *2.03* | *3.39* |
| *1993-94 முதல் 1999-2000* | *0.58* | *2.27* |

1983-85ல் கிராமப்புறத்தில் இருந்த 1.36 வளர்ச்சி வீதம் ஐந்து வருடங்களில் 0.58 ஆக குறைந்துள்ளது. இதற்கு காரணம் முறையாக நிலம் பகிர்ந்தளிக்கப்படாததும், பெரிய விவசாயிகள் தங்கள் நிலங்களை தரிசாகவே வைத்திருப்பதும்தான், மேலும் இவர்கள் தங்களுடைய வருமானத்திற்கு வரி கட்டுவதை தவிர்க்க, விவசாயத்தில் நஷ்டம் ஏற்பட்டதாகக் கணக்கு காட்டத்தான். அதாவது கறுப்பு பணத்தை வெளுப்பாக்கத்தான் நிலங்களை வைத்துள்ளார்கள். எனவே இதுவரை நிலப்பகிர்வு உழுபவர்கள் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படவில்லை. நில உடைமையாளர் களுக்குத்தான் அரசு உதவி அனைத்தும் போய் சேருகிறது.

மேலும் தலித் மக்களுக்கு என்று வழங்கப்பட்ட பஞ்சமி நிலங்களின் பெருவாரியான நிலங்கள் உயர்சாதி இந்துக்களிடம் தான் உள்ளன.

தமிழகத்தில் 130 - 48 லட்சம்பேர் (ஏறக்குறைக் கால் பகுதியினர்) 1999 - 2000ம் ஆண்டு நிலவரப்படி வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கின்றனர். இவர்களில் 60 சதத்திற்கும் மேற்பட்டவர்கள் தலித்துக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

விவசாயப் பொருளாதாரமே இந்திய பொருளாதாரம் என்ற தொடர் மொழி உபயோகத்தில் இருந்தாலும், விவசாயம் என்பது உணவில் தன்னிறைவு உற்பத்தி அதிகரிப்பு என்றளவில் மட்டுமே பேசப்படுகிறது. நிலத்தின் மதிப்பு குறைக்கப்பட்டுள்ளது. இந்நிலையிலாவது அரசு அதன் பங்கீட்டு விகிதத்தை மாற்றி அதற்கான தேவைகள் உள்ள தலித் மற்றும் பழங்குடி சமூகத்திற்கு மறு விநியோகம் செய்ய முன்வரவேண்டும்.

பெரிய அளவிலான சாகுபடி என்பது மாறி, சிறு குறு விவசாயிகள் லாபகரமாக விவசாயம் செய்யும் வகையில், அரசு மாற்றங்களை கொண்டுவரவேண்டும். அதேபோல் வளர்ந்து வரும் மக்கள்தொகை, கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு என்றளவில் நிலம் மதிப்பிடப்பட வேண்டும் தமிழகத்தில் 12 லட்சம் ஹெக்டேர் நிலங்கள் வீணே தரிசாக போடப்பட்டுள்ளன. இந்நிலங்களை உபயோகத்திற்கு கொண்டு வரவும், இயற்கை முறையில் உற்பத்தி செய்வதற்கும் நிலம் இல்லாத ஏழை தலித் மக்களுக்கும் பழங்குடியினருக்கும் நிலம் வழங்கப்படவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

## அரசிடமிருந்து நாங்கள் எதிர்பார்ப்பது

- தலித் மக்களுக்கு நிலம் வழங்க புதிய சட்டம்
- உச்சவரம்பு சட்டத்தில் போதிய திருத்தம்
- வழங்கப்பட்ட நிலங்கள் பறிபோகாதிருக்க கர்நாடக மாநிலத்தை பின்பற்றி சட்டம்
- குத்தகை முறையை ஒழிக்க கேரள மாநிலத்தை பின்பற்றி சட்டம்
- பழங்குடிகளை ஐந்தாவது அட்டவணையில் கொண்டு வந்து அவர்கள் நிலம் பறி போகாதிருக்க சட்டம்

இச்சட்டங்களை இயற்ற இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் மாநில அரசுகளுக்கு போதிய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே நில சீர்திருத்த சட்டங்களை அரசு கொண்டு வந்து உச்சவரம்பில் பெறப்பட்ட உபரிநிலங்களில் பெரும்பகுதியை விவசாயத்தையே நம்பியிருக்கும் தலித்துகளுக்கு வழங்கவும் வீணாக தரிசாக உள்ள நிலங்களை நிலமில்லாத தலித் இனத்தவருக்கு அரசு வழங்கிடவும் வேண்டும்.

நிலம் ஒரு உற்பத்தி சாதனம். நிலத்தில் உழைப்பவர்களுக்கு உரிமை இருக்க வேண்டும். அண்டை மாநிலமான கேரள அரசு 1970ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதியிலிருந்து குத்தகை சாகுபடி விவசாயிகளை நிலச் சொந்தக்காரர்களாக்கியது. அதே போல கர்நாடக அரசும் நிலங்களை நிலமற்றோர் மற்றும் குத்தகைத்தாரர்களுக்கு சொந்தமாக வழங்கியுள்ளது. அதைப்போல தமிழக அரசும் நிலமற்றோருக்கு, குறிப்பாக தாழ்த்தப்பட்ட தலித் இன மக்களுக்கு நிலம் வழங்க கீழ்க்கண்ட முறைகளை பின்பற்ற தலித் நில உரிமை இயக்கம் தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறது.

1. நில உச்சவரம்பு சட்டத்தில் குறிப்பிட்டுள்ள உயர்ந்தபட்ச அளவு நிலத்தை குறைக்கவேண்டும்

2. நில உச்சவரம்பு சட்டத்தில் உபரி நிலத்தை கணக்கிட உதவும் தர ஏக்கர் என்ற விளக்கத்தை மறு ஆய்வு செய்து அதிக அளவில் உபரி நிலம் கிடைக்குமாறு செய்ய வேண்டும்.

3. நில உச்சவரம்பு சட்டத்தின் மூலம் பட்டா பெற்ற பின்னரும் நிலம் பெறாத பயனாளிகளுக்கு உடனே நிலம் வழங்கவேண்டும்.

4. உபரி நிலத்தை விவசாய கூலி தலித் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை அளித்து அளிக்கப்படவேண்டும்.

5. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பஞ்சமி நிலங்களையும் கண்டறிந்து அவற்றில் தாழ்த்தப்பட்டோர் அல்லாதவர்களிடம் இருக்கின்ற அனைத்து பஞ்சமி நிலங்களையும் தலித் இன மக்களிடம் ஒப்படைக்கவேண்டும்.

6. ஆதிதிராவிட நில குடியேற்ற கூட்டுறவு சங்கங்களை கலைப்பதற்கான முயற்சியை அரசு கைவிட்டு அச் சங்கங்களுக்கு புத்துணர்வு அளித்து செம்மையாக செயல்படுவதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய்ய வேண்டும்.

தங்களுடைய ஆட்சியில் தலித் மக்களின் நல்வாழ்விற்காக மேற்கண்ட சட்டங்களை கொண்டு வந்து மண்ணையே நம்பி இருக்கின்ற தலித் மக்களுக்கு மண்ணுரிமை வழங்கி அவர்கள் தம் வாழ்க்கையில் ஒளி வீசச் செய்யவேண்டுமென மிக பணிவுடன் வேண்டுகிறோம்.

இவண்

**தலித் நில உரிமை இயக்கம்**



படிப்பகம்

www.padippakam.com

நூல் மதிப்புரை

# கன்னிக்கோவில் இராஜாவின்
# தொப்புள் கொடி

● விழி.பா.இதயவேந்தன்

தொப்புள் கொடி
(ஹைக்கூ கவிதைகள்)

கன்னிக்கோவில் இராஜா

பக்கம் 64
விலை 20

தமிழில் கவிதை என்பது இன்றைக்குப் பல்வேறு உத்திகளாகக் கொண்டு மாறி மாறி இயங்கிக் கொண்டிருக்கிறது. சங்க இலக்கியப் பாடல் களைப் படிக்கையில் இன்றும் கூட மரண அவஸ்தையே பலருக்குள் நிகழ்கிறது. காரணம் பாடல்கள் ஒவ்வொன்றும் குறிக்கும் சூழலும் பொருளும் புரிந்து கொள்ளுதலில் பல்வேறு சிக்கல்களும் சிரமங்களும் உள்ளன.

1906க்குப்பிறகு குறிப்பாக மகாகவி பாரதிக் குப் பிறகு தமிழ்க் கவிதையின் நடை என்பது எளி மைப் படுத்தப்பட்டு கவிதைகளாக, பாடல்களாக, வசன கவிதைகளாக வெளிவரத் தொடங்கின. இவற் றுக்கு தமிழில் பண்டிதம் பெற வேண்டும் என்பது அவசியமில்லை.1959க்குப் பிறகு எழுத்து பத்திரிக்கை மூலம் பலர் எளிமையான மொழியில் கவிதை நடையை உருவாக்கத் தொடங்கினார்கள்.

வானம்பாடிகள் போல் கவிதையை கருத்துச் சுதந்திரத்துடன் படைக்க ஆரம்பித்தார்கள். இவை தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெரிதும் வரவேற்க வேண்டிய அம்சமாக இன்றும் நிலைத்துவிட்டது. அன்னிய மொழியின் பாதிப்பு எனத் தொடக்க காலத் தில் பேசப்பட்டாலும் காலப்போக்கில் புதுக்கவிதை என்பது நிராகரிக்கப்பட முடியாத ஒன்றாக நிலைத்து விட்டது.

இதே போன்று சப்பானிய மொழியிலிருந்து கையாளப்பட்ட வடிவமான ஹைக்கூக் கவிதை களும் தமிழ்க் கவிதை உலகில் நிராகரிக்க முடியாதவை ஆகிவிட்டன.

ஹைகூவைப் பொருத்தவரையில் சொல் பழையதானாலும் சுவை புதியதாய் இருக்கிறது. சொல்ல வேண்டியவை சுருங்கச் சொல்வதுடன் ஆழ்ந்த கருத்துக்களை எளிமையான வடிவத்தில் சொல்வதனால் இவற்றை நாங்கள் இலக்கியம் என ஏற்றுக் கொள்கிறோம்.

இத்தகைய கவிதைப்பயணத்தில் கன்னிக் கோவில் இராஜாவின் தொப்புள் கொடி என்னும் ஹைக்கூ கவிதைகள் நம்மிடையே மிகுந்த கவனத் தைப் பெறுகிறது. ஈரோடு தமிழன்பன், மித்ரா, அறிவுமதி, நிர்மலா சுரேஷ், தி.லீலாவதி, முருகேஷ், பொன்.குமார், தமிழரசி, அன்பாதவன், திருவைக் குமரன், தமிழினியன், தமிழ்ப்பித்தன்............ என நூற்றுக்கணக்கான கவிஞர்கள் ஹைக்கூவின்பால் ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள். இயங்கிக் கொண்டிருக் கிறார்கள்.

இவர்களோடு நம் மண்ணின் வேர்பிடித்து தமிழ்த்தாயின் தொப்புள் கொடியாக இராஜா தனது கவிதை உறவுகளோடு படைத்துக் கொண்டிருக் கிறார் என்பதை சொல்லியாக வேண்டும்.

இந்தியா ஓர் விவசாய நாடு என்பார்கள். ஆனால் வேளாண்மை நலிந்து விளை நிலமானதை கவிஞர் தம் கவிதையில் இப்படிக் காண்பிக்கிறார்.

"கேட்பாரற்று அனாதையானது
வீட்டின் மூலையில்
கலப்பை"

குட்டி சப்பானாக விளங்கும் நம் தமிழக சிவ காசி, விருதுநகர் பகுதிகளின் குழந்தைகள் நிலைமை இவரின் கவிதையில்

"எண்ணி அடுக்குகிறான்
படிக்காத சிறுவன்
தீக்குச்சி"

எனும் போது நமக்குள் உரச நெஞ்சு சமூகத்தின் மீது பற்றி எரிய வைக்கிறது.

தாய்மை என்பது எல்லோர்க்கும் தலைமை. வளர்த்து ஆளாக்கி கடைசியில் கண்கலங்க வைக்கும் பிள்ளைகளின் கொடூரத்தை என்னவென்பது?

"மகனின் கடிதத்தில்
என்றென்றும் அன்புடன்
காப்பகத்தில் தாய்"

இதே போன்று பெண் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக இருக்கிற சொத்தையெல்லாம்



படிப்பகம்

www.padippakam.com

அழித்துவிடுகிற குடும்பங்கள் பலப்பல. இருந்த கொஞ்ச நஞ்ச நிலமும் பறிபோவதை

"மகளின் தாலி
நினைவில் வரும்
இழந்த நிலம்"

எனும்போது இச்சமூக சூழல் அம்பலப்பட்டு போகிறது.

இப்படி சமூகம் சார்ந்த, சமூகத்தில் பாதிக்கிற, அவலங்கள் நிறைந்த குடும்ப வாழ்க்கை, பெண்கள் பிரச்சினைகள் என இராஜாவின் பார்வைகள் பதிவு செய்கின்றன.

"மனைவியின் புது பாசம்
மறந்தே போனது
சம்பள தேதி"

எனும் வரிகளில் அவளின் சுயநலம் மட்டு மில்லை குடும்பத்தின் பொதுநலமும் உள்ளடக்கி யிருப்பதை அறியலாம்.

"காய்ச்சிய பறை ஒலியில்
நீங்கும் பார்ப்பன இருள்
நாத்திகத் தீ"

தொகுப்பின் மிகச்சிறந்த கவிதைகளில் இதுவும் ஒன்று. சாதிய மயமான இச்சமூக சீர்கேட்டினை பறைச் சத்தந்தான் எழுந்து ஒழிக்கும் என்பதை திறம்படச் சொல்கிறார்.

"தமிழ்க்கடவுள்
அர்ச்சனை
சமஸ்கிருதம்"

என்ற கவிதையின் மூலம் தமிழ் கடவுள் நிறைய இருந்தும் கும்பிட தமிழ் அல்லாத நிலையையும் இன்றைக்கு அதுவே இயக்கமாக உள்ளதையும் உணர முடிகிறது.

"எரிந்த வீடு
மிச்சமிருக்கும்
பழைய நினைவு"

இழந்தவைகள் எத்தனையோ இருந்த போதிலும் அவற்றின் தொடர்ச்சி அழியாமல் எரியாமல் நம் நினைவில் தொடர்ந்து நிழலாடுவது இயல்பான பதிவாகவுள்ளது.

இத்துனை சிறப்புக்களோடும் சமூக முன்னேற்றம் குறித்தப் பார்வையுடனும் ஹைகூ கவிதைகளைப் படைத்திருக்கும் கன்னிக் கோவில் இராஜாவை நாம் வெகுவாக பாராட்டலாம். இதற்கான சிந்தனை அவரிடம் இருப்பதற்கு மார்க்சியம் முறையாகப் பயில வேண்டும் என்பதில்லை. அதற்கான அவசியத்தை அவரின் ஈடுபாடும் வாழ்நிலையுமே எளிதாய் தீர்மானித்திருக்கிறது.

"இன்றைய தமிழ் இலக்கிய உலகம் ஹைக்கூவை ஏற்றுக் கொண்டுவிட்டது",என்று இவரின் நூல் முன்னுரையில் பேராசிரியர் இராம குருநாதன் சொல்வதுபோல இந்நூலும் நமது சிந்தனையைக் கவர்வதால் நாம் வெகுவாக ஏற்கலாம்.

வண்ணை சிவா, செல்லம்மாள் கண்ணன், உதயக் கண்ணன் ஆகியோர் இவரின் முதல் தொகுப்பிற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்திருப்பது பாராட்டுக்குரியது.

இனிய ஹைக்கூ, அமுதசுரபி, அரும்பு, ஏழைதாசன்........ உள்ளிட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட இதழ்களில் வெளிவந்த இந்த ஹைக்கூ கவிதைகளை சென்னை, அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம் பொறுப்பாக வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தகுந்தது.

● தொப்புள் கொடி-பக்கம்-64.விலை ரூ.20.

( ஹைகூ கவிதைகள்)

கன்னிக் கோயில் இராஜா.

## அறிவிப்பு

தலித் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு சார்பாக, முன்னெடுக்கப்படும் முயற்சிகள் குறித்து இக்கூட்டமைப்பு சார்பாக வருகிற 7.4.2006 வெள்ளிக் கிழமை, சென்னை காமராசர் அரங்கில் நடை பெறும் மாநாட்டில், மாநிலம் தழுவிய நம்மக்களின் உரிமைகளை மையப்படுத்தி "தலித் மக்கள் பிரகடனம்-2006" வெளியிடப்பட உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

**நூல் மதிப்புரை**

தப்பாட்டம் ● சோலை சுந்தரப் பெருமாள் ● சாதிய ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்ட நாவல் ● நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட் 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-98, ● விலை ரூ.100)

# அறிமுகம் தேவைப்படாத சோலை சுந்தரப் பெருமாளின் தப்பாட்டம்

ஏறக்குறைய எட்டு புனைவுப் புத்தகங்களை வெளியிட்டுள்ள சோலை சுந்தரப் பெருமாளுக்கு அறிமுகம் தேவையில்லை. சிவப்புக் கட்சிக்காரர்கள், இப்போது சாதி ஒடுக்குமுறை தொடர்பான படைப்புகளை வெளியிட்டு வருவதுடன் தற்போது, பொதுவான இந்திய சாதியக் கலாச்சாரப் பிரிவினைகள் பற்றிய புரிதலுக்குள் வந்து தமது முன்னாளய சாதியப் பாராமுகத்திற்கு 'பரிகாரம்' தேடும் வகையில் சிலரின் படைப்புகளையாவது வெளியிடுகிறார்கள். என்பது மகிழ்ச்சிதான்.

பொதுவாக, ஒரு புத்தகத்தை விமர்சிக்கும் போது, படைப்பை விமர்சிப்பது தவிர்க்க இயலாதது போலவே வெளியீட்டாளரைப் பற்றிப் பேசாமல் இருப்பதும் தவிர்க்க முடியாத சூழலில், தற்போதைய தலித் படைப்புகள், வெளியீட்டின் அரசியல் முக்கியத்துவத்தையும், பொருளாதார முக்கியத்துவத்தையும், அதாவது வியாபார முக்கியத்துவத்தையும் பிரதிபலிப்பதாக உள்ளது என்று குறிப்பிடுவது தவறல்ல.

சோலை சுந்தரப் பெருமாளின் தப்பாட்டம் வெளிவந்திருப்பது, சிவப்புக் கட்சிகாரர்களுக்கு உவப்பளிப்பதாயினும், தனது எல்லைக்குள் பக்குவமாக தாயமாடிக் கொண்டிருக்கும் தலித்துக்கள் மட்டுமே, வெளியீட்டு விளையாட்டில் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கின்றனர் என்பதும் குறிப்பிடப்பட வேண்டியது இங்கே அவசியமாகிறது.

பொதுவாக சோலை சுந்தரப் பெருமாளின் கதை சொல்லல் உத்தி மிக எளிமையானது என்பதுவே, புத்தகத்தைக் கீழே வைக்கவிடாமல் படித்து முடிக்க தூண்டும். சோ.சு.பெ. தாழ்த்தப்பட்ட மக்களோடு மக்களாக இன்றும் வாழ்ந்து வதைப்பட்டுக் கொண்டிருப்பதால்(?)தன்வாழ்சூழல் அவலங்களைச் சொல்வதிலும், தப்பு எப்படிக் கட்டுவதென்று சொல்வது, நையாண்டி நாயனம் வாசித்தலில் உள்ள லயிப்பைச் சொல்வது, பகடையாய்ப் பிறந்துவிட்ட ஒருவன், தன் மகளைக் கண்ணெதிரே கெடுக்க கொடுத்து விட்டு வெளியே சொல்லமுடியாமல் தவிப்பதைச் சொல்வது குடியானத் தெருவுக்குள் நுழைய அச்சப்படும் ஒரு பகடையின் மனநிலையை சொல்வது, நாலுநாளா அடை மழை, நேத்திக்குக் கூட நான் ரெட்டியாரு காட்டுப் பங்குகளைப் போய்ப் பார்த்தேனுங்க, குறுவ பங்கு உரக்கட்டு மூலையில பத்துகுழி அளவுக்குத்தாங்க படுத்திருக்கு. மத்த பயிருங்க அப்படியே குத்துக்க...... கதிரு சீவட்டையா இருந்தாலும் பாக்கிறதுக்குத் தாங்க அப்படி மணிக்கட்டு புடிச்சிருக்குங்க. காச்சப் பட்டுகெடந்த சம்பா இளம்பயிறு அப்படியே மொசுமொசுன்னு கௌம்பி இருக்குங்க. எறங்கிப் பாத்தேங்க. பழைய வேரு பொறுபொறுன்னு அறுப்பட்டு சேறு பதமா இருக்குங்க. களையும் ஜாஸ்தி இல்லைங்க. ஆளுங்கள எறக்கி நெருக்க மிதிச்சுகிட்டு வந்து மேலுரம் கொடுத்து பூச்சு அண்டாம இருக்க மாவுக்கு நாலு டேங்கு மருந்து புடிச்சிட்டோம், அப்புறம் வேலையே இருக்காதுங்க என்று முனியாண்டிச் சாம்பான் வாயிலாகச் சொல்வதிலும், நிறைய நுணுக்கமான தலித் வாழ்க்கைக் கூறுகளை உள்ளடக்கி, கதையை தலித் புழுதியில் நடத்திக் காட்டியிருப்பது ஆசிரியரின் படைப்பாளுமைக்குக் கிடைத்த வெற்றி.

மேலும் தலித்துகள் காலப்போக்கில் எவ்வாறு மன அளவில் விடுதலை உணர்வைச் சுவாசிக்க விரும்புகின்றனர் என்பதற்கான ஆதாரமாக மதுக்கன் பகடையின் மன ஓட்டமும், அடுத்த தலைமுறை தோழபப்பனின் மன ஓட்டமும் ஆங்காங்கே அடுத்தடுத்துக் காட்டியிருப்பது தலைமுறை இடைவெளி



படிப்பகம்

www.padippakam.com

யின் எல்லைக் கோடுகளைத் தொட்டு, தலித் விடுதலைக்கான பரிணாம வளர்ச்சியைப் படம் பிடிக்கிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை கம்யூனிஸ்டு களின் நிகழ்ச்சி நிரலில் தீண்டாமையிலிருந்து விடு தலை என்பது பொருளாதார விடுதலை என்று தான் இன்றளவும் பொருள் கொள்ளப்பட்டு வருகிறது. இந்தியாவில் முதல் கம்யூனிஸ்ட் மாநாடு 26.12.1925ல் கான் பூரில், திரு. சிங்காரவேலு தலைமையில் நடந் தது. அவர் தனது தலைமையுரையில், “கம்யூனிஸ்டு களின் பார்வையில் தீண்டாமைக் கொடுமை என்பது முழுவதும் பொருளாதார அடிப்படை கொண்டது. தான்..... பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப் பட்டால் தீண்டாமைக் கொடுமை இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகும்.... கோயில் நுழைவு, குளத்தில் இறங்குதல், தெருவில் நடத்தல், ஆகிய உரிமைகள் வந்துவிட்டால் சமூகத் தளத்தில் உயர்ந்துள்ள மக்களோடு எல்லாம் ஒன்றாகிவிட முடியாது” என்று குறிப்பிட்டார். கம்யூனிஸ்டுகளைப் பொறுத்த வரை தீண்டாமையின் சல்லி வேர்களைக் களையாமல் இலைகளுக்குப் பூச்சிமருந்து அடிப் பதில் திருப்திப் பட்டு போய்விடக் கூடியவர்கள்தான்.

ஆனால், இந்த நாவலைப் பொறுத்தவரை கம்யூனிஸ்ட் திட்ட வரைபடத்தை வைத்துக் கொண்டு சம்பவங்களை சில்லறையாக்கி உள்ளே கொட்டி குறிப்பிட்ட எல்லைகளுக்கு மிகாமல் விளையாடிக் காட்டி கட்சி மீறல் என்ற விஷயத்தை கடைசியாக எட்டிப்பார்க்கும் வரகூர் அறிவு என்ற பாத்திரத்தின் மூலம், கட்சிக்குள் உள்ள அதிருப்தி யாளர்களைத் திருப்திபடுத்த முன்வைக்கப்பட்டுள்ளது.

முதல் பாதி நாவல் பகடைகள், சாம்பான் களின் வாழ்க்கை பின்னல்களோடு தொடர்ந்து பின் பகுதி நாவல் ஒரு முக்கியமான முடிச்சை தொடுகிறது. குடியானத்தெரு சனங்களும் பண்ணைக் காரர்களும் காலால சொல்லுகிற வேலையைத் தலையால செஞ்சி கிட்டு இருந்த சனங்களை அவ்வளவு லேசுல எல்லாரையும் ஒன்று தெரட்டிட முடியாதுன்னு மட்டும் அவன் மனசுல நெனச்சுக் கிட்டுத் தான். இப்ப அந்தக் கூலியிலயும் கை வச்சு அடி வயித்துக்குச் சுருக்குப் போட்டதும்தான் சில பேருக்காச்சும் குடியான தெருவ எதிர்த்து நிமிர்ந்து நிக்கனுன்னு எண்ணம் வந்திருக்கு. இதை வச்சுகிட்டு ஏதாவது செஞ்சே ஆவணுங்கிற உணர்வு மட்டும் சுந்தர மூர்த்தியை (குடியானவ தெருக்காரர்) உசுப்பிக்கிட்டு இருக்கு. (பக் 251)

மேற்கண்ட இந்த வரிகளில் காணப்படும் உட் கூறுகள், யார் விடுதலையை யார் சிந்திக்கிறார்கள், வேண்டுவது பொருளாதார விடுதலையா சாதி விடுதலையா இந்த விடுதலைக்கான போராட்டம் வர்க்கப் போராட்டமா சாதி விடுதலைப் போராட் டமா என்ற கேள்விகளோடு கடைசிப் பகுதியில் ஜெயிலிருந்து விடுதலைப் பெற்று வெளிவரும் சுந்தரமூர்த்திக்கு ஜெ போட்டு வரவேற்கவும் அவரின் தலைமையை ஏற்கவும் தலித்துக்கள் தயார்ப்படுத்தப் படுகிறார்கள் என்று கதை முடியும் போது, நமது சிந்தனை இப்புத்தகத்தின் தலைப்பை நோக்கித்திரும் புவதும் தவிர்க்க இயலாததாகிறது.

●


## அடுத்த இதழில்

சகடம் அல்லது மக்கள் அறியாத அம்பேத்கர்
மாறுவேசம்
கணிதம் நம் உடைமை
தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005
முகத்தில் முகம்
மக்கள் பகுதி

**தலித் நிலவுரிமை இயக்க மாவட்ட, வட்ட , பொறுப்பாளர்கள் அனைவரும் புதியகோடாங்கி இதழுக்கான சந்தா செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்**




படிப்பகம்

www.padippakam.com

**நூல் மதிப்புரை**

**நரபலி தெய்வங்கள் திருவிழாக்கள்**
**– த.பழமலய் கட்டுரைத் தொகுப்பு**

**தன்னானே பதிப்பகம்,**
**14, முதல் குறுக்குத் தெரு,**
**டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம்,**
**சென்னை – 24**
**விலை ரூ.60)**

**ஆரியத் தன்மைகொண்ட திரௌபதி வழிபாடு போன்ற திருவிழாக்கள் அதன் உட்கூறுகள், இங்கு தமிழகப் படையாச்சிகளால் பாரம்பரியமாகப் பின்பற்றப்பட்டு வருகிறது என்ற தகவல் தருவதன் மூலம், ஆசிரியர் பார்ப்பனர்களைப் போன்று படையாச்சிகளும் பாரம்பரியம் மிக்கவர்கள் என்று நிறுவ இவற்றைச் சொல்ல வருகிறாரா?**

**தனது விவரணைகளுக்கான நோக்கம் என்ன என்ற தர்க்கரீதியான விளக்கமின்றிய மௌனம், பல சந்தேகங்களை ஆசிரியர் மேல் வைக்கிறது**

# நரபலி தெய்வங்கள் திருவிழாக்கள்

● ப்ரதிபா ஜெயசந்திரன்

தமிழ்ப் பேராசிரியான த. பழமலய் அவர்கள் நவீன தமிழ்க் கவிதையில் தனக்கான இடத்தை அலங்கரிப்பவர். கவிதையில் ஒரு புதிய போக்கை உருவாக்கி வளர்த்தவர். இவரின் எந்த வகையான படைப்பிலும் செய்நேர்த்தி, நிதானம், கூடுதல் தகவல்கள் என்று நெறிப்படுத்தி வெளியிடுவதில் கவனமுடன் இருப்பார். இவரின் தெய்வங்கள், திருவிழாக்ககள் தொகுதியிலும் தனது ஆய்வுக்காக எடுத்துக் கொண்ட புள்ளிகளை விரிவுபடுத்தி, நமது தொன்மையான மரபுகளை அதன் சாராம்சங்களை வெளிக்கொண்டு வந்துள்ளார்.

ஒவ்வொரு கட்டுரையின் முடிவிலும் அக்கட்டுரை கையாண்ட விஷயங்கள் என்ன என்றும், அடுத்த கட்டுரை எதைப்பற்றிப் பேசப் போகிறது என்றும் குறிப்பு (Gist) கொடுத்து வாசிப்பின் நோக்கத்தை நிறைவுறுத்துகிறார். ஒவ்வொரு கட்டுரைக்கும், பழந்தமிழ் இலக்கியங்கள் முதல்நிலைச் சான்றுகளாகவும், ஆய்வின் கருதுகோளை நிறுவுவதற்கு துணை செய்யும் நூல்கள் இரண்டாம்நிலைச் சான்றுகளாகவும் கொள்ளப்படுகின்றன என்று ஆசிரியர் கூறுகிறார்.

நிறையத் தகவல் செறிவுள்ள இக்கட்டுரைகள் எழுதப்பட்டதன் நோக்கம் என்ன? இன்றைய சூழலில், இது ஆய்வு மாணவர்களுக்காகப் பிரத்யேகமாக குறிப்புத் தெளிவுக்காக எழுதப்பட்டதா? ஆரியத் தன்மை கொண்ட திரௌபதி வழிபாடு போன்ற திருவிழாக்கள் அதன் உட்கூறுகள், இங்கு தமிழகப் படையாச்சிகளால் பாரம்பரியமாகப் பின்பற்றப்பட்டு வருகிறது என்ற தகவல் தருவதன் மூலம், ஆசிரியர் பார்ப்பனர்களைப் போன்று இவர்களும் பாரம்பரியம் மிக்கவர்கள் என்று நிறுவ இவற்றைச் சொல்ல வருகிறாரா? இந்தியா, ஆரிய மாயைக்குள் மூழ்கிவிட்ட அவலத்தை மறைத்து பழந்தமிழ் இலக்கியங்களின் ஆதாரங்களைத் தருவதன் மூலம் நாம் போய்க் கொண்டிருக்கும், வாழ்வுக் கலாச்சார மையம் சரியானது, இப்படியே போகலாம் என்று சொல்ல வருகிறாரா? இதுபோன்ற நிறைய கேள்விகளுக்கு இப்புத்தகம் விடை பகரவில்லை.

தனது விசாரணைகளுக்கான நோக்கம் என்ன என்ற தர்க்கரீதியான விளக்கமின்றிய மௌனம், பல சந்தேகங்களை ஆசிரியர் மேல் வைக்கிறது. உதாரணமாக, நரபலிக்கான பதிலீட்டு மாதிரிகள் இங்கே பாரம்பரியமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன என்பதற்கான நிறைய தகவல்களைத் தரும் கட்டுரை, இப்படிப்பட்ட 'நரபலி' என்ற மாதிரி சரியானதா தவறானதா 'நரபலி' பின்பற்றப்படுவதற்கான காரணங்கள் என்ன, அதன் மூலவேர் எங்கே இருக்கிறது போன்ற கூறுகளை அலசாமல் மௌனமாக இருப்பது இப்புத்தகத்தின் மேல் உள்ளீடற்ற நிலைப்பாட்டை தான் எடுக்க முடிகிறது.

மேலும் தமிழ் மரபான இயற்கை வழிபாட்டுக் கூறுகள்(Pagon Aspects)ஆரியத் தொன்மங்களுடன் நேர்க்கோட்டில் வைத்துப் பார்க்கப்படுவதன் மூலம், வாசகன், ஒரு தெளிவற்ற குழப்ப நிலைக்குள் நிறுத்தப்படுகிறான்.

●




படிப்பகம்

www.padippakam.com

8

ஸ்டாலின் ராஜாங்கம்



வரலாற்றை மொழிதல்

# கே.பி.எஸ். மணி

## 1922 - 1990

“ கீழ்வெண்மணி விஷயம் முற்றிலும் நூற்றுக்கு நூறு ஜாதி போராட்டம். அங்கு இருக்கிற மிராசுதாரர்கள் ஜாதிவெறி பிடித்தவர்களாக இருக்கிறார்கள். ஜாதி அகம்பாவம் பிடித்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அங்கு வேலை செய்கின்ற வேலையாட்களை, பணியாட்களை, மற்ற ஆட்களை என்ன நினைக்கிறார்கள்? ஒரு தாழ்ந்த சாதிக்காரன் என்று நினைக்கிறார்கள். இன்னும் பச்சையாக சொல்ல வேண்டுமானால் ஒரு பள்ளன், பறையன் தன்னுடைய வீடு ஏறி கூலி கேட்கிறானே, அல்லது களத்துமேடு ஏறி கூலி கேட்கிறானே, அது எவ்வளவு பெரிய கேவலம் என்று நினைக்கிறார்களே தவிர, அவன் அதிகபட்சக் கூலி கேட்பதாக நினைக்கவில்லை.

1969 பிப்ரவரி 25 தமிழக சட்டமன்ற உரை - கே.பி.எஸ்.மணி



படிப்பகம்

www.padippakam.com

இந்தக் கூற்று வெண்மணி சம்பவம் நடந்த ஒரு மாதத்திற்குள்ளாகவே தமிழக சட்ட மன்றத்தில் பேசப்பட்டதாகும். வெண்மணி சம்பவம் நடந்தபோதே இதன் பின்னணியை சாதியத்தின் விளைவாகவே மதிப்பிட்டு இக்கருத்தினை கம்யூனிஸ்ட் சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய சட்ட மன்றத்தில் பேசியவர் கே.பி.எஸ். மணி அவர்கள்தாம்.

கே.பி.எஸ்.மணி அவர்களைப் பற்றி அறிந்து கொள்வது என்பது தஞ்சை மாவட்ட தலித் நில வுரிமை போராட்டத்தின் ஒரு பகுதியை அறிந்து கொள்வதாக மாறுகிறது. சீர்காழி, மயிலாடுதுறை, கும்பகோணம், நன்னிலம் போன்ற தஞ்சையின் வடபகுதியை மையமாகக் கொண்டு இயங்கிய தலித் தலைவர் இவர்.

சில வருடங்களுக்கு முன் மதுரை தலித் ஆதார மையத்தில் நூலொன்றினை தேடிக்கொண்டிருந்த போது, பைண்ட் செய்யப்பட்ட பழைய செய்திதாள்கள் அடங்கிய கட்டு ஒன்றினை படிக்க வாய்ப்பு கிடைத்தது. அத்தாள்களில் ஒன்றில் "கோவில்கள் எங்களுக்குச் சொந்தம். அவைகளை எங்களுக்கு உரிமையாக்க வேண்டும்......... மதுரையில் இருக்கும் மீனாட்சி ஒரு சக்கிலிச்சி என்பது புராணம், காசியிலுள்ள விஸ்வநாதர் ஒரு வெட்டியான், இப்படி ஒவ்வொரு கோவிலையும் எடுத்துக் கொண்டு நாங்க சொல்ல முடியும்" என்று சட்டமன்ற உரை காணக் கிடைத்தது (தினத்தந்தி 20.4.1971) அதனை பேசியவரை கே.பி.எஸ்.மணி (இந்திய குடியரசுக்கட்சி) என்று குறிக்கப்பட்டிருந்தது. எல்லாவற்றையும் தனதாக்கும் அயோத்திதாசரின் வாசிப்பை ஒட்டி இக்கூற்றை யோசித்தபோது தலித் வரலாறு கடந்த காலம் பற்றி தலித் முன்னோடிகளின் கருத்துகளானது தலித்துகளுக்கு எதுவுமேயிருந்ததில்லை என்று நம்பவைக்கப்பட்டிருந்த எண்ணங்களுக்கு மாறானது என்பதை மெல்ல உணர முடிந்தது. இப்படி ஒரு பெயராக அறிமுகமான கே.பி.எஸ். மணி பற்றிய செய்திகள் அதற்கு மேல் கிடைக்கவில்லை.

நாகை, சீர்காழி பகுதிகளுக்கு வந்தபோதுதான் கே.பி.எஸ்.மணி பற்றிய செய்திகளை அறிய முடிந்தது. இதுவரை வாசித்த வந்த எந்த நூல்களிலும் அவரைப் பற்றி செய்திகளை காண முடிந்ததில்லை. கே.பி.எஸ். மணி குறித்த செய்திகள் அவரைப் போலவே கம்பீரம் மிகுந்தவையாக தோற்றம் பெறுகின்றன. இணையற்ற துணிச்சல், வாதங்களை எதிர் கொள்ளும் தர்க்கம், தலித் மக்கள் மீதான குறைவற்ற வாஞ்சை, தெளிந்த சமூக நோக்கு என்று செயற்பட்ட இவரைப் போன்ற ஆளுமைகளை தலித் 'வரலாற்று எழுதியல்' தான் தொகுக்க முடியும். அந்த வகையில் கே.பி.எஸ்.மணி பற்றி வரலாற்று நூலை முதன் முறையாக பூவிழியன் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



இம்மானுவேல் சேகரனுக்கு இணையாக வீரங்காட்டி செயற்பட்டு வந்தவராகவே இவரை புரிந்து கொள்ள முடிகிறது. 22.2.1922ல் சீர்காழியில் கே.ஏ. கதிர்வேல் - பட்டம்மாள் என்பவர்களுக்கு பிறந்த இவர் படிப்பில் ஆர்வமில்லாமல் விளையாட்டுகளில் அக்கறை செலுத்தி இராணுவத்தில் பணியாற்றி பன்மொழியறிவோடு திரும்பியவர். வாளிப்பான உடல் அமைப்பைக் கொண்ட இவர் மோட்டார் சைக்கிளில் செல்லும்போது நோக்கும் பார்வையினால் சாதி இந்துக்களையும், அச்சங் கொள்ள வைத்திருக்கிறார். தலித்துகளுக்கு உணவு மறுத்த உணவகங்கள், தேநீர் மறுத்த/இரட்டை குவளையை பயன்படுத்திய தேநீர் சாலைகள் எனும் இவைகளுக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகள் மாற்றத்தை உருவாக்கியுள்ளன. தம் தரப்பு ஆட்களை அத்துமீறி உணவகங்களில் நுழைய விட்டு சிக்கல் எழும் தருணத்தில் இவரே நுழைந்து சம வுரிமையை வழிகொணர்ந்திருக்கிறார். பல இடங்களில் தாக்குதலிலும் ஈடுபட்டதாக செய்திகள் சொல்லுகின்றன. நரசிம்மா நாயக்கர் ஹோட்டலில் இவ்வாறு இவர் செய்த மாற்றம் பிரசித்தி பெற்றதாகும்.

திணிக்கப்பட்ட இழிவுகளுக்கு எதிரான சுயமரியாதை ஊட்டும் அடையாளங்களை கைபெடுப்பது என்பது சாதி மறுப்பின் ஒரு பகுதியாகும். அந்த வகையில் தலித் முன்னோடிகளின் உடை, தோற்றம் போன்றவையும் இத்தகைய புரிதலிலிருந்து அமைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அம்பேத்கரின் கோட் சூட், அயோத்தி தாசரின் தலைப்பாகை, ஏ.பி.பெரியசாமி புலவரின் கீழ்பாச்சை கட்டும் முறை என்று இப்படியே சொல்லிக் கொண்டே போகலாம். கே.பி.எஸ்.மணியின் தோற்றமும் கூட ஆதிக்க சாதியினருக்கு அச்சுறுத்தலைத் தரத்தக்க விதத்திலேயே இருந்திருக்கிறது. முறுக்கிய மீசை, வளர்ந்த தாடி, சீக்கியரை நினைவுப்படுத்தும் தலைப்பாகை, ஜிப்பா அணிந்த திடகாத்திரமான உடல் என்று வசீகரமான தோற்றம் அவருடையது. ஆனால் நரிக்குறவர் சமூகத்தினரிடமிருந்தே தலைப்பாகை கட்டுவதை கற்றுக் கொண்டிருக்கிறார்.

**தலித்துகளின் தனித்துவமான எழுச்சிகளை சுட்டிக்காட்டினால் இம்மக்களுக்கு கம்யூனிஸ்டுகளே வழிகாட்டினார்கள் என்று சொல்வது பொய்யாகிவிடும். தங்களின் தியாகத்தை காட்டி இருப்பை நியாயப்படுத்துவது இதன்மூலம் காலாவதியாகிவிடும் என்பதால் தலித்துகளின் நிலம் சார்ந்த போராட்டங்கள் வரலாற்று ஏடுகளில் மறைக்கப்படுகின்றன.**



படிப்பகம்

www.padippakam.com

**தஞ்சை மாவட்டத்தில் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தி லேயும் தலித்துக்கள் அமைப்புகளை கட்டியிருக்கின் றனர். சிறு சிறு அமைப்புகளாகவும், தன்னிச்சை யாகவும் போராடி வந்த இம்மக்களுக்கு தலைமை யேற்றது கம்யூனிஸ்டுகளே. ஆனால் போராட்ட உணர்வை இம்மக்களுக்கு கம்யூனிஸ்ட்டுகள் தான் தந்தார்கள். அவர்களே இல்லையெனில் தலித்துக்கள் போராடியிருக்க முடியாது என்று கூறுவது இயங்கியலுக்கு எதிரான வாதமாகும்.**

சீர்காழி மயிலாடுதுறை வட்டார கிராமங்கள் எங்கும் பயணம் மேற்கொண்ட இவர் தலித் பிணத்தை எடுத்துச் செல்ல பொதுவழிகளை பெற்று தருதல், தலித் பெண்கள் மீதான பாலியல் ரீதியான ஒடுக்கு முறைகளை முடிவுக்கு கொணருதல், தலித்துக்கள் மீது சாதி வன்முறைகள் நடக்கும் இடங்களில் நேரில் ஆஜராகி தலித்துகளுக்கான நியாயத்தை பெற்றுத் தருதல் என்று பல்வேறு பணிகளை முன்னெடுத்திருக்கிறார். ஒவ்வொரு கிராமத்தைச் சார்ந்தும் இவருக்கான ஒவ்வொரு சம்பவத்தை சொல்ல முடியும். இழிவு தொழில்களை செய்ய மறுத்ததும் இவர் தொடர்பில் நடந்திருக்கிறது. இவரது போராட்ட வழிமுறை அடித்தால் அடிப்போம் என்பதே. முடிவினை எட்டும்வரை பிரச்சினைகளை கைவிடாத பண்பினை இவரிடம் காணமுடிகிறது.

நிலவுரிமைப் போராட்டம் என்றாலே கம்யூனிஸ்ட்கள்தான் எனும் தோற்றத்தை மறுக்கும் விதமான போராட்டங்களை கே.பி.எஸ். மணி நடத்தி யிருக்கிறார். நிலஉரிமைக்காக 19ம் நூற்றாண்டு முதலே தலித்துக்கள் போராடி வந்துள்ளனர். தஞ்சை மாவட்டத்தில் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தி லேயும் தலித்துக்கள் அமைப்புகளை கட்டியிருக்கின் றனர். சிறு சிறு அமைப்புகளாகவும், தன்னிச்சை யாகவும் போராடி வந்த இம்மக்களுக்கு தலைமை யேற்றது கம்யூனிஸ்டுகளே. ஆனால் போராட்ட உணர்வை இம்மக்களுக்கு கம்யூனிஸ்ட்டுகள் தான் தந்தார்கள். அவர்களே இல்லையெனில் தலித்துக்கள் போராடியிருக்க முடியாது என்று கூறுவது இயங்கி யலுக்கு எதிரான வாதமாகும். கம்யூனிஸ்ட்டுகளின் வருகைக்கு முன் நடந்த தலித்துகளின் போராட்டங் களை இடதுசாரி வரலாறுகள் இருட்டடிப்பு செய்கின்றன. தலித்துகளின் தனித்துவமான எழுச்சி களை சுட்டிக்காட்டினால் இம்மக்களுக்கு கம்யூனிஸ் டுகளே வழிகாட்டினார்கள் என்று சொல்வது பொய் யாகிவிடும். தங்களின் தியாகத்தை காட்டி இருப்பை நியாயப்படுத்துவது இதன்மூலம் காலாவதியாகிவிடும் என்பதால் தலித்துகளின் நிலம் சார்ந்த போராட் டங்கள் வரலாற்று ஏடுகளில் மறைக்கப்படுகின்றன.

இவ்வாறு தஞ்சைப் பகுதியில் தலித் தலைமை உருவாகாத சூழலில் அதனை ஓரளவு பூர்த்தி செய்த வர் கே.பி.எஸ்.மணி ஆவார். பூவிழியன் தொகுத் துள்ள இந்நூலில் முக்கியமான பகுதி கே.பி.எஸ். மணியின் சட்டமன்ற உரைகளாகும். அவரின் உரை களில் பெரும்பகுதி நிலம் தொடர்பானதாகவே இருக்கிறது. குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலுள்ள மடங்கள், மடங்களுக்கான நிலங்கள், அவைகளின் லாபம், மடங்களின் பணிகள் பற்றி பலமுறை கேள்வி எழுப்பியிருப்பதோடு அந்நிலங்களை தாழ்த் தப்பட்டவர்களுக்கு மட்டுமல்லாமல் வன்னியர் உள் ளிட்ட நிலத்தில் உழைக்கும் சாதிகளுக்கு பகிர்ந் தளிப்பது பற்றியும் பேசியிருக்கிறார்.

சட்டமன்றத்தில் அவர் ஆதிதிராவிடர் துறை மட்டுமல்லாது எல்லாத் துறைகளின் மானிய கோரிக் கைகளின் மீதும் கருத்தினை முன்வைத்திருக்கிறார். அதில் மீனவர்களின் வாழ்வாதாரம் பற்றியும் அக் கறையோடு பேசியிருக்கிறார். 1957 முதல் 1962 வரை காங்கிரஸ் உறுப்பினராகவும், 1967 முதல் 1972 வரை திமுக ஆதரவு உறுப்பினராகவும் சட்டமன்றத்திற்கு சென்ற இவர், ஒவ்வொரு சூழலிலும் தம்மை தலித் பிரதிநிதியென்றே நிறுவியிருக்கிறார். தலித் எம்.எல்.ஏ. ஒருவர் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதற்கு இன் றைக்கு இவரே சான்று, தாம் வெற்றிபெற ஆதர வளித்த கட்சிக்கு எதிராகக் கூட இவர் (தலித் பிரச் சினைகளுக்காக) பேசியிருக்கிறார்.

தலித்துகளுக்கு அளிக்கப்பட்டு வரும் அரசு சலுகைகளை 10 வருடங்களுக்கு ஒருமுறை நீட்டிக் கும் மரபு இருந்து வருகிறது. அவ்வாறு முதல் பத் தாண்டு முடிந்து, அடுத்த பத்தாண்டிற்கு நீடிக்க வகை செய்யும் மசோதா சென்னை சட்டபேரவையில் கொணரப்பட்ட போது இவர் நிகழ்த்திய உரை இன்றும் நினைவு கொள்ளத்தக்கதாயிருக்கிறது. காங்கிரஸ் உறுப்பினராயிருந்த அவரின் பேச்சு கட்சி எல்லையை கடந்ததாய் இருப்பதை இந்த உரையில் அறிய முடியும்.

"கடந்த பத்து வருட சலுகையால் ஹரி ஜனங்கள் எப்படி முன்னேறி இருக்கிறார்கள் என் றால் ஒரு சிறிய குழந்தை பால்குடிக்கும் நிலை யிலிருந்து மாறி கரைத்த கஞ்சி குடிக்கும் நிலையின் அளவிற்கு வந்திருக்கிறார்களே தவிர அசைப் பொருட்களை சாப்பிடும் அளவிற்கு வரவில்லை. வீழ்ச்சியுற்றிருக்கிற இந்த அரிஜன மக்களை முன் னேற்றம் அடையச் செய்ய வேண்டுமானால் இன் னும் பத்து ஆண்டுகளல்ல அதை இன்னும் அதிகப் படுத்த வேண்டுன்றுதான் நான் நினைக்கின்றேன்" என்று பேசுகிறார். பொருளாதார முன்னேற்றத்தை கடந்து சாதியின் வேரை கண்டுணர அவர் தயங்க




படிப்பகம்

வில்லை. "தீண்டாமை என்பது மக்களின் ரத்தத்தில் ஊறிப்போயிருக்கின்ற காரணத்தால் சீக்கிரமாக ஒழிக்க முடியவில்லை.............. சட்ட பூர்வமாக இவைகள் (இடஒதுக்கீடு) உண்மையாகவே அமல் செய்யப்படுகிறதா என்பதை நாம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். அன்றைக்கு காட்டப்படுகிற புள்ளி விவரங்களை மட்டும் வைத்துக் கொண்டு பார்ப்பதினால் எவ்வித பயனும் இல்லை. இந்தப் புள்ளி விவரங்களை சேகரிப்பவர்களிடமிருந்து உண்மையான நிலையை தெரிந்து கொள்ள முடியாது. எங்களைப் போன்று கிராமப்புறங்களில் இருக்கும் ஊழியர்களுக்குத்தான் தெரியும்... ஒருவனுடைய காலில் முள் குத்துகிறது என்று சொன்னால் அதனால், தாக்கப்பட்டவனுக்குத் தான் அதனுடைய உண்மையான வருத்தம் தெரியும். அதல்லாமல் தாக்கப்பட்டவனுடைய தாயாராக இருந்தாலும் சரி, தந்தையாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு அவன் பேரில் ஒரு அனுதாபம் ஏற்படுமே தவிர அவனுடைய கஷ்டத்தை உண்மையாகவே அனுபவிக்க முடியாது" (16 டிசம்பர் 1959 நாளைய சட்டமன்ற உரை) என்று பேசியுள்ளார். இங்கே காட்டியிருப்பது ஒரேயொரு உரையைத் தான். அவருடைய மற்ற எல்லா உரைகளும் பொருள் பொதிந்தவையாகவே இருப்பதை காணலாம். இன்றைக்கு அறிவுஜீவிகளால் பேசப்படும் பல்வேறு கருத்துகளையும் சர்வசாதாரணமாக அன்றைக்கே தலித் முன்னோடிகளால் பேசமுடிந்திருக்கிறது என்பதற்கு இந்த உரையே சான்று. தலித் தலைவர்களின் சட்டமன்ற உரைகளை இப்படியே தொகுத்தால் சிறப்பான வரலாற்றுப் பெட்டமாக மாற முடியும். அதே வேளையில் இவர்களின் குரல்கள் அரசால் எந்தளவுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது என்று பார்ப்பதும் அவசியம்.

தனித்துவமான ஆளுமையாக இருந்தமையால் தான் அடுத்த தேர்தலில் திமுக கூட்டணியில் கே.பி.எஸ். மணிக்கு இடமளிக்க மறுக்கப்பட்டது. 1967 தேர்தலில் சீர்காழி தொகுதியில் சுயேட்சையாக (இந்திய குடியரசுக் கட்சி) போட்டியிட்டபோது திமுக இவரை ஆதரித்ததற்கு காரணம் காங்கிரஸ் வேட்பாளரை தோற்கடிக்கவே ஆகும். அதற்கான செல்வாக்கு கே.பி.எஸ். மணிக்கே இருக்கிறது என்று திமுக கருதியது. அடுத்தடுத்த தேர்தல்களில் காங்கிசுரம், திமுகவும் சீட்டளிக்க மறுத்தமைக்கு முக்கியமான காரணம் அக்கட்சிகளில் பெருகிவிட்ட சாதி இந்து செல்வாக்கே என்பது குறிப்பிடத்தக்கது. சாதி இந்துக்களின் நெருக்கடி கே.பி.எஸ்.மணிக்கு எதிராக அக்கட்சிகளில் பெருகியது. சாதி இந்துக்களை அனுசரித்து போகாத அவரின் நடைமுறையே அவர்களின் வெறுப்புக்கு காரணமாயிற்று.

பிறகு 1980களில் திமுக காங்கிரஸ் கூட்டணியில் எதிர்ப்புகளை மீறி காங்கிரஸ் தலைவர் எல். இளைய பெருமாள் அவர்கள் எம்.பி.சீட்டை கே.பி.எஸ் மணிக்கு உறுதிப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் முதல் குடியரசுக்கட்சி வரையிலும் பங்காற்றிய அவர் பள்ளிக்கொண்டா கிருஷ்ணசாமி, எல்.இளையபெருமாள், ஈ.வெ.ராவின் மீது ஈடுபாடு காட்டிய இவர், பின்னாலில் தலித் பிரச்சினைகளை முழுமையாக கையெடுத்து போராடிய காலத்தில் பெரியாரின் அணுகுமுறையிலிருந்து மாறுபட்டு இயங்கியிருக்கிறார். மணலி கந்தசாமி போன்றோரோடும் தொடர்பு கொண்டிருந்த இவர் அக்காரணத்திலேயே கைதும் செய்யப்பட்டிருக்கிறார். 1940களில் சீர்காழியில் ஆதிதிராவிட இன முன்னேற்ற சங்க மாநாட்டினை முன்னிட்டு நடத்தியுள்ளார். நரிக்குறவர் முன்னேற்ற சங்கம் போன்றவற்றை தொடங்கி அக்குழந்தைகளின் கல்வி மேம்பாட்டில் அக்கறை செலுத்தியிருக்கிறார்.



**ஒருவனுடைய காலில் முள் குத்துகிறது என்று சொன்னால் அதனால், தாக்கப்பட்டவனுக்குத்தான் அதனுடைய உண்மையான வருத்தம் தெரியும். அதல்லாமல் தாக்கப்பட்டவனுடைய தாயாராக இருந்தாலும் சரி, தந்தையாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு அவன் பேரில் ஒரு அனுதாபம் ஏற்படுமே தவிர அவனுடைய கஷ்டத்தை உண்மையாகவே அனுபவிக்க முடியாது**

கே.பி.எஸ். மணி போன்றோரின் வரலாறுகள் தொகுக்கப்பட்டு தலித் அரசியல்தளமும், கருத்தியல் தளமும் வலுவாக்கப்பட வேண்டும். பூவிழியன் எழுதியுள்ள போராளி கே.பி.எஸ்.மணி என்னும் இந்நூல் அத்திசையில் செய்யப்பட்ட அரிய முயற்சியாகும். இந்நூல் மேலும் செம்மையாக்கப்பட்டால் நலம்.

*(25 டிசம்பர் 2005 அன்று மயிலாடுதுறையில் நடைபெற்ற பூவிழியன் எழுதிய போராளி கே.பி.எஸ் மணி என்னும் நூல் வெளியீட்டு அரங்கில் பேசியதன் முழுமையாக்கம் இது)*



www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# புரட்சியாளர் ரோசா மாக்கியலே



## இளமைப் பருவம்

ரோசா மாக்கியலே அலபாமா, டஸ்கிஜி என்னும் ஊரில் 1913 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4ம் தேதி பிறந்தார். இவரது தாயார் லியோனா மாக்கியலே இவர் தனது கணவரை பிரிந்து தன்னம் பிக்கையின் சின்னமாக வாழ்ந்து வந்தார். இவரது பணி ஆசிரியை. இவர் ஆசிரியராக இருந்தபோதிலும் தனது மகள் ரோசா மாக்கியலேவை வீரம் கொண்ட ஒரு பெண்ணாகவும், சமூக சிந்தனையுள்ள பெண்ணாகவும் வளர்த்தார். மேலும் கறுப்பின மக்களின் குடியுரிமைக்காக போராடவும் செய்தார்.

## திருமணம்

1932ல் ரேமண்ட் பார்க்ஸ் என்பவரை ரோசா மாக்கியலே திருமணம் செய்து கொண்டார். இவர் ஒரு முடிவெட்டும் தொழிலாளி ஆவார். இவர்கள் இருவரும் நிறவெறிக்கெதிராக தீண்டாமைக ளுக்காக குரல் எழுப்பினார்கள். மேலும் National Association for the Advancement of coloured people (NAACP) என்ற அமைப்பில் ரோசா பார்க்கும் தனது கணவரும் உறுப்பினராக இருந்து கொண்டு கறுப்பின மக்களுக்காக போராடினர்.

## NAACP அமைப்பில் செயலாராக இருந்தபோது

தேசிய அளவிலான நிறவெறிக்கெதிரான அமைப்பில் உறுப்பினர்களாக இருந்தனர். NAACP அமைப்பில் செயலராக இருந்த போது இன சமத் துவத்திற்கான காங்கிரஸ் (core) வேகமாக செயல் பட்டுக் கொண்டிருந்தது. பிலிப் ரேண்டோல்ப் ஏகர், நிக்ஸான் மற்றும் எல்லா பாகர் ஆகியோரோடு கிடைத்த நட்பு இவரது குடிமையியல் உரிமை இயக்கத்திற்கு வழிகோலியது.

இந்த CORE என்ற அமைப்பு 1942ல் துவங் கப்பட்டு சிக்காகோவில் உள்ள மாணவர்களால் நடத்தப்பட்டு வந்தது. இதில் குறிப்பாக ஹென்றி டேவிட் தொரோ போன்றோர்கள் அகிம்சை முறை யை பின்பற்றி கறுப்பின மக்களின் சம உரிமைக்காக போராடினார்கள்.

1947ல் CORE என்ற அமைப்பு உச்சநீதி மன்ற தீர்ப்பிற்கு எதிராக எட்டு கறுப்பர் மற்றும் எட்டு வெள்ளையர்களையும் உள் மாகாண பயணமாக அனுப்பிவைத்தது. இதற்கு இணக்குவித்தலுக்கான பயணம் (Journy of Reconcilition) என்று பெயரிட்டு இரண்டு வாரம் வெர்ஜினியா, வடக்கு கரோலினா, டென்னசே மற்றும் கெண்டுக்கு போன்ற மாகாணங் கள் சென்றுவந்தனர். இந்த பயணத்தின் போது இதில் பங்கேற்றவர்கள் பல முறை கைது செய்யப்பட்டனர். வன்முறைக்கும் ஆளானார்கள்.

## பயணத்தின் போது கைது செய்யப்பட்டவர்கள்

இணக்குவித்தலுக்கான பயணம் 9ம் தேதி 1947ம் ஆண்டு தொடங்கியது. இந்த பயணத்தின் குழுவினர் ஜார் ஒசர், பேயார், ரெஸ்டின், ஜேன்ஸ்பிக், குடன்கோ, ருடன்கோ, நாதன் ரைட், நெல்சன் ஆண்டிரிவ் ஜான்சன், யூஜின் ஸ்டான்லி, டெனிஸ் போங்க், பில்லியம் வெந்தி, லுயிஸ் ஆடம்ஸ் ஜேசப் பெல்மட், வெர்த் ரெண்டல் மற்றும் வேறாமஸ் ஜாக் போன்றவர்கள் கலந்து கொண்டனர் இக்குழுவினர் கள் தான் பயணத்தின் போது கைது செய்யப்பட்ட வர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

## ரோசாவின் புரட்சி

இந்தியாவில் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதிக்கசாதியினர் ஏற்படுத்தும் தீண்டாமைக் கொடுமைகள் போல வல்லரசு அமெரிக்காவிலும் தீண்டாமை இனவெறி உருவத்தில் நடைபெற்றுவந்தது.

கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவில் கறுப்பின மக்கள் பொது இடங்களில் பிரவேசிக்க முடியாமலும்,தேவலாயத்திற்குள் நுழைய முடியாமலும்,பேருந்துகளில் கறுப்பர்களுக்கென தனி இடங்களும், பள்ளி மற்றும் கல்லூரி போன்ற அனைத்துத் துறைகளிலும் வெள்ளையர்கள் கொடுத்த நெருக்கடி கொஞ்சம் நஞ்சமல்ல. இது போன்ற பிரச்சனைக்கு மத்தியில் கறுப்பின மக்களுக்காக பேருந்தில் சமமாக பயணம் செய்ய மாபெரும் புரட்சி செய்தவர் தான் ரோசா பார்க். இந்நிகழ்ச்சி கறுப்பின மக்களுக்கு ஓர் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

மாண்ட்கோமெரி இது அமெரிக்காவின் தெற்கு பகுதியில் உள்ள மிக முக்கியமான நகரமாகும். இங்கு பொதுப் பேருந்துகளில் கறுப்பின மக்கள் பயணம் செய்ய இருக்கைகள் பிரித்து வைக்கப்பட்டன. இந்தப் பிரச்சனையை ரோசா பார்க்ஸ் மற்றும் குடிமையியல் உரிமை செயல் பாட்டாளர்களை அழைத்து பேசி NAACP தேசிய நிற எதிர்ப்பு மற்றும் அவர்களுக்கான வளர்ச்சிகாக பணியாற்றும் அமைப்பில் இது குறித்து வலியுறுத்தப்பட்டது. ஆனால் NAACPஅமைப்பின் சட்டத் துறைத்தலைவர். தர்கூட் மார்ஷல் புகார் அளித்தவர்களை கடுமையாக எச்சரித்தார்.

1955ம் ஆண்டு கொல்ஷன் என்ற 15 வயது கறுப்பின பெண் பேருந்தில் அமர்ந்து பயணம் செய்ததற்காக கடுமையாக பேருந்திலிருந்து வெளியேற்றப்பட்டு கைது செய்யப்பட்டார். கைதுக்கான காரணம் வெள்ளையின மக்கள் அமரும் இருக்கையில் அமர்ந்திருந்ததற்காக.

**பேருந்து புறக்கணிப்பு பேராட்டம் துவங்கி ஏறத்தாழ 13 மாதங்களாக 17 ஆயிரம் கறுப்பின மக்கள் மாண்டகோமெரியில் தினமும் தங்கள் அலுவலகத்திற்கு நடந்தே சென்றர். சிலர் கார் உள்ள வர்களிடன் உதவி கேட்டு அவர்களுடன் சென்றர். ஆனால் யாரும் பேருந்தில் ஏறவே இல்லை.**

**உச்சநீதிமன்றம் அனைத்து மக்களையும் பேருந்தில் சமமமாக நடத்தவேண்டும். மதிக்கவேண்டும். தள்ளிவைத்தல் இருக்கக்கூடாது என்ற தீர்ப்பை அறிவித்தது. பேருந்து நிறுவனங்களும் தீர்ப்பை ஏற்று சமூக ஒருமைப்பாட்டை நிலை நிறுத்துவதாக உறுதி கூறின.**

இந்த நிகழ்விற்கு பிறகு NAACP அமைப்பு இந்த பிரச்சனையை கையில் எடுத்தது. இந்த காலகட்டத்தில்தான் பேருந்து நிகழ்வு போலவே கல்வியிலும் கறுப்பின மக்கள் தள்ளி வைக்கப்பட்டனர். இது 1954ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற தீர்ப்பாகும். இது போன்ற தொடர் அடக்கு முறையினால் மிகவும் மனவருத்தம் அடைந்தார் ரோசா பார்க்ஸ்.

ரோசாபார்க்ஸ் டிசம்பர் 1, 1955ல் மாண்ட்கோமெரியில் பணிபுரியும் பகுதியான பொது வணிக வளாகத்திலிருந்து தினமும் பயணம் செய்யும் பேருந்தில் பயணம் செய்தார். ரோசா எப்போதும் பேருந்தில் கறுப்பர்கள் பிரிவில்தான் அமர்ந்து செல்வார். இந்த பிரிவு பேருந்தின் பின்புறத்தில் இருக்கும். அன்றைய தினத்தன்று பேருந்து முழுவதும் கூட்ட நெரிசல். பேருந்து ஓட்டுநர் ரோசாவை எழுந்து நின்று பயணம் செய்யும்படி கூறினார். காரணம் வெள்ளையர்களுக்கு உட்கார இடம் கொடுக்க வேண்டும் என வற்புறுத்தினார். இதுபோன்ற சம்பவங்கள் ரோசாவிற்கு பல முறை நிகழ்ந்துள்ளது. இதனால் போலிசாரால் கைதும் செய்யப்பட்டுள்ளார். இந்த பேருந்து ஓட்டுநர் 1943ல் கூட இது போன்ற பிரச்சனைகளை வலியுறுத்தியுள்ளார். அதனால் ரோசாவுக்கு இது புதிதல்ல. ஆனால் ரோசா எப்போதும் எழுந்திருக்க மறுப்பு தெரிவிப்பார்.

இந்த முறையும் ரோசா இருக்கையிலிருந்து எழுவதற்கு மறுப்பு தெரிவித்தார். இதனால் காவல் துறையினர் சட்டத்தை அவமதித்த காரணத்திற்காக அவரை கைது செய்தனர். மேலும் இவர் மீது கடுமையான முறையில் வன்முறை ஏவப்பட்டது. இப்பிரச்சனைக்கு பிறகு ரோசா தனது நண்பர்களுடனும், குடும்பத்தாருடனும் ஆலோசனைசெய்த பின்பு NAACP அமைப்பையும், அதன் தன்னார்வலர்களையும் அணுகினார். இது துணிச்சலான முடிவு என்றாலும் வெள்ளையர்களால்தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் பாதிப்பு இருக்கும் மற்றும் பல சங்கடங்களை சந்திக்க நேரிடும் என்று உணர்ந்து



படிப்பகம்

www.padippakam.com

naacp அமைப்பை அணுகினார். இதன் விளைவு ரோசாவின் கணவர் ரோமண்ட் பார்க்ஸ் வேலையிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டார்.

## மார்டின் லூதர்கிங்குடன் ரோசா பார்க்ஸ்

மார்ட்டின் லூதர் கிங் உள்ளூர் கிறிஸ்தவ தேவாலயத்தில் மத போதகராக இருந்து வந்தார். இவர் கறுப்பின மக்களுக்கு நிகழும் கொடுமைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ய மக்களை ஒன்று திரட்ட ஒப்புதல் தெரிவித்தார். கறுப்பின மக்கள் பேருந்தில் இருந்து தள்ளி வைப்பது மிகவும் கொடியது என்றார். டிசம்பர் 5 அன்று போராட்டம் என்று முடிவு செய்தனர்.

## பேருந்து புறக்கணிப்பு போராட்டம்

கறுப்பின மக்களை பிறருக்கு சமமாக பேருந்தில் ஏற்ற சம்மதிக்கும் வரை போராட்டம் தொடரும். கறுப்பின மக்கள் யாரும் அதுவரை பேருந்தில் ஏறக் கூடாது என்ற முழக்கத்துடன் இருந்தனர். இதனால் கிங் கைது செய்யப்பட்டார். அவரது வீடு தீ வைத்து கொளுத்தப்பட்டது. இந்த பேருந்து புறக்கணிப்பு போராட்டத்தில் பங்கெடுத்த அனைவரும் மிகுந்த வன்முறைக்கு ஆளாயினர். பலாத்காரங்களும் நிகழ்ந்தன, எனினும் போராட்டம் தொடர்ந்தது.

பேருந்து புறக்கணிப்பு போராட்டம் துவங்கி ஏறத்தாழ 13 மாதங்களாக 17 ஆயிரம் கறுப்பின மக்கள் மாண்டகோமெரியில் தினமும் தங்கள் அலுவலகத்திற்கு நடந்தே சென்றனர். சிலர் கார் உள்ளவர்களிடம் உதவி கேட்டு அவர்களுடன் சென்றனர். ஆனால் யாரும் பேருந்தில் ஏறவே இல்லை.

## அரசாங்க வருமானம் பாதிப்பு

இதன் பின்பு மாண்ட்கோமெரி பகுதியில் அளவிற்கு அதிகமாக வருமானம் பாதிப்படைந்தன. இந்த வருமான இழப்பை உச்சநீதிமன்றம் கணக்கில் கொண்டு அனைத்து மக்களையும் பேருந்தில் சமமாக நடத்த வேண்டும். மதிக்கவேண்டும். தள்ளிவைத்தல் இருக்கக்கூடாது என்ற தீர்ப்பை அறிவித்தது. பேருந்து நிறுவனங்களும்தீர்ப்பை ஏற்று சமூக ஒருமைப்பாட்டை நிலை நிறுத்துவதாக உறுதி கூறின.

## போராட்டம் தீர்வு

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்கு பிறகு டிசம்பர் 20 1956 போராட்டம் முடிவுக்கு வந்தது. இந்த மாபெரும் வெற்றிப்போராட்டத்திற்கு பின் ரோசா பார்க்ஸ் குடிமையியல் உரிமை இயக்கத்தின் தாய் என்று அனைவராலும் அறியப்பட்டார்.

## இறப்பு

தன் வாழ் நாளெல்லாம் கறுப்பின மக்களின் சமத்துவ வாழ்வுரிமைக்காக பாடுபட்ட மாபெரும் புரட்சியாளராவார். தனது வாழ்வையே கறுப்பின மக்களுக்காக அர்ப்பணித்தவர். கறுப்பின மக்களின் துன்பங்களையும் துயரங்களையும் தகர்த்தெறிந்தவர். தனது சமுதாய தொண்டில் சிறிது அளவு கூட தளர்வடையாமல் பணியாற்றினார். தனது இறுதி நாளில் கூட சமுதாயத்திற்காக பாடுபட்டவர். ரோசா பார்க் 24 அக்டோபர் 2005ல் இயற்கை எய்தினார். SSLC (Couth Christian Leadershop Conference) என்ற நிறுவனம் இவரது பெயரில் விருது அறிவித்துள்ளது. ரோசா பார்க் சுதந்திர விருது ஆண்டுக்கு ஒருமுறை வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தகவல் தொகுப்பு : **தலித் இராம்தாஸ்**

---

## எரிதழல் கொண்டுவா!

விதையின் வீரியம்
விருச்சத்தில் தெரியுமாம்
அழியும் பொய்யுடல்
ஆற்றிய சேவைகள்
புதைக்க கூடிடும்
கூட்டத்தால் புரியுமாம்

வாடிய பயிரையும்
வற்றிய வயிரையும்
காண நேரிடின்
கதறி அழுவதால்
பயிர்கள் செழிக்குமோ!
வயிறுதான் நிரம்புமோ!

காரணம் தன்னை
கண்டிட வேண்டும்
கலங்கி நிற்பதை
கைவிட வேண்டும்

மானுடம் தன்னில்
சாதியம் புகுத்திய
ஆதிக்க வேரினை
அழித்திட வேண்டும்
எரிதழல் கொண்டுவா
எனதரும் சிங்கங்களே!

● க. அரசு



படிப்பகம்

www.padippakam.com

# புதிய ஆரம்பங்கள்

புதியமாதவி
மும்பை

அவள் கண்களில் இனம் புரியாத மருட்சி.

எப்போதும் அவள் என்னையும் என் முகத்தையும் நேரில் பார்த்து பேசுவதே இல்லை. அது அவள் என்னிடம் வேலை செய்பவள் என்ற ஒரு காரணத்தினால் மட்டும் அல்ல என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. இந்தப் பெண்கள் நல்ல கட்டுமஸ்தான உடல் வாகுடன் திடகாத்திரமாக இருப்பார்கள் என்பது நான் படித்தப் பாடம். அப்படி எந்த விதமான திடகாத்திரமும் இவளிடம் இல்லை. நான் கேட்பதற்கு மட்டுமே பதில் சொல்லுவாள். அதுவும் ஒன்றிரண்டு வார்த்தைகளில் இருக்கும் அவளுடைய பதில்.

இந்த மாவட்டத்திற்கு பணி மாற்றம் கிடைத்தவுடன் இந்திய வரைபடத்தை எடுத்து வைத்துக் கொண்டு எங்கே இருக்கிறது இந்த இடம்? என்று தேடிப்பார்த்தேன்.

பஞ்சாபிலிருந்து பிரிந்து தனிமாநிலமாகிவிட்ட அரியானாவில் இருந்தது இந்த மாவட்டம். மேவாட் மாவட்டம் (Mewat District).

எந்த விதமான தொழில் அபிவிருத்தி களும் இல்லை. விவசாயம் மட்டுந்தான். பெரும்பாலும் எல்லா ஆண்களும் வாகன ஓட்டுநர்களாக இருந்தார்கள். ஒவ்வொரு குடும்பத்திற்கும் குறைந்தது இரண்டு ஏக்கர் நிலமாவது இருந்தது. இரண்டு ஏக்கர் நிலத்திற்கும் குறைவாக இருப்பவனுக்கு யாரும் தன் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்க மாட்டார்களாம். அவள் தான் ஒரு நாள் இந்தச் செய்திகளைப் பேச்சு வாக்கில் சொன்னாள். இரண்டு மாதங்கள் ஆனது அவள் சகஜமாக என்னுடன் இரண்டொரு வார்த்தைகள் பேசுவதற்கு.

அவளுடைய கதையை அவள் சொன் னாள். அவள் பெயர் ரத்னா. அவள் சொந்த ஊர் அசாமில் இருந்தது. அடிக்கடி லாரி ஓட்டிக்கொண்டு வரும் அவள் கணவன் நெடுஞ் சாலையில் இருக்கும் இவர்களுடைய தேநீர்க் கடையில் தான் லாரியை நிறுத்துவான். தேநீருடன் சேர்ந்து சுடச்சுட சப்பாத்தியும் கிடைக்கும். அவனை முதன் முதலாக அவள் பார்த்த போது அவளுக்கு பத்துவயது கூட ஆக வில்லை. அவன் எப்போதும் அதிகாலையில் அல்லது இரவில்தான் வருவான். வந்தால் லாரியை நிறுத்திவிட்டு அவர்கள் நேநீர்க் கடையில் வெளியில் போட்டிருக்கும் கட்டிலில் படுத்துக் கொள்வான். ரத்னாவின் அம்மா அவனை விழுந்து விழுந்து கவனிப்பாள். எல்லாம் சுடச்சுட அவனுக்கு கிடைக்கும்.

எப்போது வந்தாலும் அவன் அவளுடைய அம்மாவுக்கு ஏதாவது வாங்கி வருவது வழக்கமாக இருந்தது. அவன் வந்து விட்டால் இவளுக்கும் ஏக குஷியாக இருக்கும்.

ஏதாவது திண்பதற்கு கிடைக்கும் என்பதால். இரவில் மட்டும் அவளுக்குப் பயமாக இருக்கும். அவளைத் தனியாக தூங்க வைத்துவிட்டு கதவை வெளிப்பக்கமாக தாளிட்டு விட்டு அவளுடைய அம்மா போயிருப்பாள். தம்பி, தங்கைகள் எல்லோரும் ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டு படுத்திருப்பார்கள். ஒருநாள் அப்படித்தான் இரண்டு வயதுகூட நிரம்பாத அவளுடைய தம்பி நடுராத்திரியில் விழித்து அழுது கொண்டிருந்தான்.

அம்மாவைத் தேடி. அவள்தான் மூத்தப் பெண். அவளுக்கு தூக்கம் வரவில்லை. அவனை எவ்வளவோ சமாதானப்படுத்திப் பார்த்தாள். அவள் சமாதானப் படுத்துவதைக் கண்ட கோபத்தில் அவனுடைய சத்தம் இன்னும் அதிகமானது. அவள் எழுந்துபோய்க் கதவைத் தட்டினாள். அந்தச் சாலையில் அவர்கள் வீடு மட்டும் தான். மற்ற குடியிருப்புகள் எல்லாம் மலையடிவாரத்தில் இருந்தன. அவள் தம்பியின் சத்தமும் அவள் கதவை இடித்தச் சத்தமும் சேர்ந்து காற்றைக் கிழித்துக் கொண்டு கதவின் இடுக்குகள் வழியாக பேரிரைச்சலுடன் அந்த நடு இரவை அலற வைத்தது.

கதவு திறக்கவே இல்லை. அழுது அழுது அந்தச் சத்தத்தில் தொண்டைக் கட்டிக் கொண்டது அந்தச் சின்னப் பையனுக்கு. அவள் மடியில் அவன் பெருவிரலைச் சூப்பிக் கொண்டு படுத்திருந்தான். அவள் விரித்தி ருந்த கிழிந்த போர்வை நனைந்தது.

அவள் அவனுடைய ட்டிராயரைக் கழட்டி விட்டு அவனைச் சற்றுத்தள்ளிப் படுக்க வைத்தாள். அவளுடைய பைஜாமாவும் நனைந்துபோனது. அதிகாலையில் எப்படியோ தூக்கம் வந்து தொலைத்தது, அவளுடைய அம்மா வந்து அவள் தலைமயிரைப் பிடித்து இழுக்கும்வரைத் தூக்கம் கலையவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

...நல்லா திங்கறியே ... சொரனை இல்லை உனக்கு... இந்த வயதில் இப்படி படுக்கையை நனைச்சிருக்கியே நாயே என்று கத்தினாள்.

அம்மாவின் முகத்தை ஏறிட்டுப் பார்க்க முடியில்லை.

படுக்கையை நான் ஈரமாக்கவில்லை... பெரிசா கத்த வந்திட்டியே... கதவை வெளிப் பக்கமா பூட்டிட்டு நீ எங்கே போய் தொலைஞ்சே என்று கத்த வேண்டும் போலிருந்தது. அம்மா வெறிப்பிடிச்சவள் போல் தம்பி தங்கைகள் எல்லோரையும் அடித்துக்கொண்டிருந்தாள். அவளிடம் இப்போது என்ன சொன்னாலும் பிரயோசன மில்லை.

வெளியில் வந்தவுடன் கடைக்கு வேண்டிய பாத்திரங்களை எடுத்து வேகமாக கழுவி வைத்தாள். தண்ணீரைப் பிடித்து நிரப்பினாள். அதுவரை அந்த லாரிக்காரன் வெளியில் கிடந்தக் கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் பக்கத்தில் அம்மாவின் துப்பட்டா காற்றில் அசைந்து கொண்டிருந்தது. அந்த துப்பட்டாவைப் பார்க்க பார்க்க அவளுக்கு லாரிக்காரன் மீது கோபம் வந்தது. அப்பா கொடுத்த சாய்க்கப்பை எடுத்துக் கொண்டு அவனுடன் போனாள். அவன் கண்விழித்திருந்தான். இவள் கைகளில் இருந்து சாய்க் கப்பை வாங்கியவன் இவள் கன்னத்தில் தட்டினான்.

பட்டென்று அவன் கைகளைத் தட்டி விட்டாள். தூரத்திலிருந்த அம்மா அவர்கள் இருவரையும் பார்த்தாள். இப்போது அம்மாவின் பார்வையை எதிர்த்து நின்று அவள் பார்த்த போது அம்மா அவள் பார்வையைத் தாங்காமல் வீட்டுக்குள் போய்விட்டாள்.

இப்படித்தான் இந்த லாரிக்காரனின் உறவு அவர்கள் குடும்பத்துடன் ஆரம்பித்தது.

அடுத்து 6 மாதம் கழித்து வந்தவன் ரூபாய் 2700 கொடுத்துவிட்டு இவளை அவனுடன் அழைத்து வந்து விட்டான். தம்பி தங்கைகளை விட்டுவிட்டு அவளுடைய அப்பாவை விட்டுவிட்டு அந்த மலையடி வாரத்து காற்றை விட்டுவிட்டு அவனுடன் தனியாகக் கிளம்பிவர முடியாது என்று அவள் அழுதபோது அவளுடைய அம்மாவும் சேர்ந்து அழுதுக் கொண்டிருந்தாள். லாரிக்காரன் அவளைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறான், அவனுக்கு சொந்தமாக நிலமிருக்கிறது, சாப்பாட்டுக்கு இந்த மலையடிவாரத்தில் லாரிக்காரனிடமும் காட்டு இலாக்காகாரர்களிடமும் மாறிமாறி படுக்க வேண்டிய அவஸ்தை இருக்காது என்று அவளுடைய அம்மா சொன்னபோது அவளால் மறுத்துப் பேச முடியவில்லை.

அம்மா சொன்னபடியே அவனுக்கு 3 ஏக்கர் நில மிருந்தது. வீட்டில் எல்லோரும் அந்த நிலத்தில் தான் உழைத்தார்கள். அவனுடன் பிறந்தவர்கள் மூன்றுபேர். இவன்தான் மூத்தவன். அவனுடைய அப்பா வயது 60 தாண் டிவிட்டது. இருந்தாலும் நல்ல வாட்டச் சாட்டமாக இருந்தார். இவளுக்கு சாப்பாட்டுக்கு எந்தக் குறையு மில்லை. வயிறு நிறைய மூன்று நேரமும் சாப்பிடும் போதெல் லாம் வீட்டு ஞாபகம் வரும்.

வீட்டு நினைவுகளைக் கொஞ்சம் கொஞ்சமாக அவள் குறைத்துக் கொண்டாள். வீட்டை நினைத்தவுடன் அம்மாவின் நினைவு வரும் அம்மாவை நினைத்தால் இப்போது தன் கணவனாக இருக்கும் இவன் பக்கத்தில் அம்மாவின் துப்பட்டா காற்றில் அசைவது தெரியும். சில சமயங்களில் அவனுடைய வார்த்தைகள் அவளை அப்படியே பொசுக்கும்.

உச்சக்கட்ட ஆலிங்கனத்தில் அவள் தன்னை மறக்கும் போது

உன்னோட அம்மாவும் இப்படித்தான் என்று உதிரும் அவன் உளறல்கள் ...

...ஒரு மலைப்பாம்பு தன்னை இறுக்கிப் பிடித்து மூச்சு முட்ட வைப்பது போலிருக்கும். பலம் கொண்ட மட்டும் அவனைப் பிடித்து கீழே தள்ளிவிட்டு எழுந்திருக்க முயலும் ஒவ்வொரு முறையும் அவன் பிடி இறுகும். கண்களை மூடி கால்களை விரித்து சருகளாய் அவள் இலை அவனுடைய வெப்ப மூச்சில் தீப்படித்து எரியும்.

அவள் கொஞ்சம் கொஞ்சமாக எரிந்து கொண்டிருந்தாள்

ஒருநாள் அவனுடைய தம்பி அவனுடன் சண்டை போட்டுக்கொண்டிருந்தான். அவர்களின் அப்பா வந்து சமாதானப்படுத்தினார். தம்பிகள் மூவரும் அப்பா சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பேசியது அவள் காதிலும் விழத்தான் செய்தது.

இந்த ஊரில் வீட்டுக்கு வீடு இந்தக் கதைதான் என்பது அவளுக்கும் தெரிந்தே இருந்தது.

ஆனால் ஏதாவது மாற்றம் நம் வீட்டிலாவது நடக்காதா என்ற நம்பாசை இருக்கத் தான் செய்தது. நீ இதற்கு ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். இருக்கிற 3 ஏக்கர் நிலத்தை நாங்கள் நாலுபேர் பங்கிட்டுக் கொண் டால் என்ன தேறும்? 3 ஏக்கர் நிலத்திற்கு குறைவா இருந்தா எந்தப் பெண் எங்களைத் திருமணம் செய்து கொள்வாள்? ... யோசிச்சுப் பார்.

எங்கள் அண்ணன் தம்பிக்கே இதிலே ஒன்னும் சங்கடமில்லைன்னா உனக்கென்ன வந்தது. நானா இருந்தா என்னா என் தம்பிமாரா இருந்தா என்ன சொல்லு.

திரௌபதி இருக்கலையா ஐந்து பேருக்கூட... அவன் சொல்லிக் கொண்டே இருந்தான். அவள் அழுதுக் கொண்டிருந்தாள்.



படிப்பகம்

www.padippakam.com

மறுநாள் அவன் லாரியை எடுத்துக் கொண்டு லோடு ஏற்றிக்கொண்டு பீகார் போய்விட்டான். அவள் வீட்டில் ஒரு வேலையும் செய்யாமல் அன்றிரவை எண்ணிப் பயந்து கொண்டிருந்தாள். அவனுடைய தம்பி இருட்டில் அவளை நெருங்கி அணைத்தப் போது உடம்பில் மின்சாரம் பாய்ந்தது போலிருந்தது. அதன் பிறகு என்ன நடந்தது என்பதொன்றும் அவளுக்கு நினைவில் இல்லை.

அவள் அருகில் அந்த ஊர்ப் பெண்களின் கூட்டம்.

என்ன ரத்னா பயந்திட்டியா... மூத்தவனை விட சின்னவந்தான் ரொம்ப நல்லவன். அதிர்ந்து பேச மாட்டான், இந்தப் பாரு, நீ கத்தி மயக்கம் போட்டு விழுந்ததிலிருந்து ஒன்னும் சாப்பிடாமா உன் பக்கத்திலேயே உட்காந்திருக்கான். மேவாட்டுக்கு வந்துட்டு இதுக்கு மாட்டேன்னா எப்படி வாழமுடியும் சொல்லு... பக்கத்து வீட்டு அஞ்சு சொல்லிக் கொண்டிருந்தாள். அவர்கள் வீட்டில் அவள் கணவனுடன் பிறந்தவர்கள் 5 பேர். அவள் தம்பிகள் எல்லோருக்கும் சேர்த்து எட்டு பிள்ளைகளைப் பெற்றிருந்தாள்.

மெதுமெதுவாக சின்னவனின் அமைதியும் அன்பான கவனிப்பும் அவளைச் சமாதானப்படுத்தியது. லாரிக்காரனிடமிருநத முரட்டுத்தனம் இவனிடமில்லை. எல்லாவற்றையும் விட இவளுக்கு மனநிம்மதி கொடுத் தது... இவன் எந்த நேரத்திலும்...உன்னோட அம்மாவும் இப்படித்தான் என்று சொல்வதில்லை. சின்னவனின் குழந்தை அவள் வயிற்றில் வளர்ந்தது. வீட்டில் எல்லோருக்கும் சந்தோஷமாகவே இருந்தது. லாரிக்காரன் வெளிப்படையாக சந்தோஷப்படுவது போல காட்டிக் கொண்டாலும் உள்ளுக்குள் அவன் குமைந்து கொண்டிருப்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. அதைப் பார்க்க பார்க்க அவளுக்கு சந்தோஷமாக இருந்தது. மலைப்பாம்பைப் பிடித்து அதன் தலையில் ஏறி நாட்டியம் ஆடுவது போல சந்தோஷம். அவன் வீட்டுப் பக்கம் வருவதையே தவிர்ப்பதும் அவளுக்குப் புரிந்துது. சின்னவனை அழைத்து அவனருகில் உட்கார்ந்து கொண்டாள்.

அந்தக் குழந்தை பிறந்தப்பின் அடுத்தவன் முறை வந்தது. அவள் எதிர்பார்த்தது தான் என்றாலும் வரும்போது அந்த வலியை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பக்கத்தில் குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது. இவனிடம் லாரிக்காரனின் முரட்டுத்தனமில்லை. சின்னவனின் மென்மையுமில்லை. ஓர் அவசரம்... அவசரம்... பத்துநாள் பட்டினிக் கிடந்தவன் கஞ்சியை ஒரே வாயில் ஊற்றி மேலும் கீழுமாகக் கொட்டிக்கொண்டு நிற்கும் அவசரம் இவனிடம். இவள் முகத்தை அவன் நேர்க்கொண்டு பார்த்ததே இல்லை. இவளும் அவன் முகத்தைப் பார்ப்பதில்லை. நான்காவது முறை வந்தப்போது இவள் உடல் கிழிந்து கிடந்தது. தைக்க முடியாதக் கிழிசலாய் எந்த உடம்பையும் போத்திக் கொள்ள லாயக்கு இல்லாமல் தொங்கியது. ஆத்திரத்தில் அவன் இவள் கிழிசல்களைப் பிடித்து இழுத்து சிதைத்தான்.

அந்த இருட்டில் அவள் கதறல் ...

அவளுடைய தலைமுடி கலைந்து முன்னால் விழுந்து ஆடியது. அவள் கண்களில் வெறித்தனம் ... டேய் ... நான் உன் அம்மாடா ... உங்க அப்பனை எங்கே கூப்பிடு...

உன் அண்ணன்மாரைக் கூப்பிடு... அவள் அமைதியாக கட்டிலில் படுத்திருந்தாள். பக்கத்தில் அவளுடைய மாமனார் விசிறியால் அவளுக்கு காற்று வீசிக் கொண்டிருந்தார். நல்ல வாட்டச்சாட்டான 60 வயதுக்கிழம். அந்த வீட்டிலேயே அதிகமான உடல் உழைப்பு செய்பவர். அந்தக் கிழத்தின் பார்வையைச் சந்திக்க விருப்பமில்லாமல் அவள் கண்களை மூடிக்கொண்டாள்.

லாரிக்காரன் வந்து அவள் உடலைத் தொட்டுப்பார்த்தான். குளிர்ந்திருந்தது அவள் உடல். அவன் கவலையுடன் அங்கிருந்து நகர்ந்தான். சின்னவனும் அடுத்தவனும் வந்து எட்டிப்பார்த்தார்கள். அவள் பக்கத்தில் அவர்களுடைய அப்பா இருப்பதைக் கண்டவுடன் பக்கத்தில் வராமல் வெளியில் போய்விட்டார்கள். கிழம் அவள் பக்கத்திலேயே இருந்தது. அவளை விட்டு அங்கிருந்து நகர்வது மாதிரியே தெரியவில்லை. அவளுக்கு வந்திருப்பது கிழவனின் மனைவியின் ஆவி அல்லவா?

மறுநாள் அவளைப் போலீஸ் கைது செய்தது.

மாமனாரை இரவில் அரிவாளில் வெட்டிக் கொலை செய்த மனநிலை சரியில்லாத மருமகள் என்று பத்திரிகைகள் மேவாட் மாவட்டத்தில் நடத்தக் கொலையைப் பற்றி எழுதின. முதல் முறையாக அந்த ஊருக்கு போலீஸ் வந்தது. பத்திரிகைகாரர்கள் வந்தார்கள். அண்ணன் தம்பிகளுடன் வாழ்க்கை நடத்தும் நவயுக திரௌபதிகள்... மாமனாரின் ஆசைக்கும் மறுப்பு சொல்லாமல் எரியும் குடும்ப விளக்குகள்... ஊடகங்களுக்கு பெருந்தீனியாகப் போனது மேவாட் மாவட்டத்தின் கதைகள்.

அன்று என்னைப் பார்க்க வந்திருந்த சேவா சங்கத்தின் காரியதரிசியுடன் பேசிக்கொண்டிருந்தேன். ரத்னாவின் கதை என்னை மிகவும் பாதித்தது.

என்ன மேடம்... எத்தனை வருடமா இந்தக் கதை நடக்கிறது இங்கே என்று சொல்லிக்கொண்டிருந்தார்.

போலீஸ், சட்டம், நீதி இதெல்லாம் இருந்துமா?



படிப்பகம்

www.padippakam.com

அந்தக் காரியதரிசி பெண் என்னைப் பார்த்து சிரித்தாள். எழுத்துமூலமாகவோ, சொல் மூலமாகவோ ஒரு புகாரும் இதுவரை கிடையாது. நானும் எவ்வளவோ முயற்சி செய்துவிட்டேன் மேடம். இந்த ரத்னா கூட மனநிலைச் சரியில்லாமல் கொலை செய்ததாகத்தான் ஒத்துக்கொண்டிருக்கிறாளே தவிர உண்மைக் காரணம் எதையும் சொல்வதில்லை. சரி... நாளை இவர்கள் ஊரில் நடக்க இருக்கும் எங்கள் திரௌபதி நாடகம் பார்க்க வாருங்கள் என்றழைத்தாள். ஊருக்கு ஏற்ற நாடகம் தான் என்று எண்ணிக் கொண்டே வருவதாக சம்மதம் தெரிவித்தேன்.

அந்த நாடகத்திற்கு பெண்கள் கூட்டம் அதிகமாகவே இருந்தது. ஊரின் முக்கியஸ்தர்களுக்கு மட்டும் நாற்காலிகள் மற்ற ஆண்களும் பெண்களும் தரையில் உட்கார்ந்திருந்தார்கள். குழந்தைகளில் ஒன்றிரண்டு பெண் குழந்தைகள் மட்டும்தான் இருந்தார்கள். அந்த தலைகீழ் விகிதத்தைப் பார்க்கும் போது அந்த ஊரின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை என்னால் கற்பனை செய்து கொள்ளவே பயமாக இருந்தது.

திரௌபதியின் துகிலை உரியும்போது அங்கே கூட்டத்தில் மயான அமைதி...

பக்கத்தில் இருந்த மரத்தின் கிளையிலிருந்து சேலைகளை ஒருவர் முடிச்சுப் போட்டுக்கட்டி துச்சாத னன் இழுக்க இழுக்க அனுப்பிக் கொண்டிருந்தார். அதைப் பார்க்க சிரிப்பாக இருந்தது. ஆனால் அங்கிருந்த மக்கள் யாரும் மரக்கிளையிலிருந்து வந்து கொண்டிருக் கும் சேலைகளைப் பார்க்காமல்... க்ருஷ்ணா... க்ருஷ்ணா என்று கன்னத்தில் போட்டுக் கொண்டார்கள். அடுத்தக் கட்டம்... திரௌபதி சபதம் செய்துகொண்டிருந் தாள்.

ஆண்தான் பெண் வேடமிட்டிருந்தார். சபதம் செய்யும்போது திரௌபதியின் குரலில் ஆணின் சத்தம் தொனித்தது. அதுவரைப் பெண் குரலில் பேசிக் கொண்டிருந்தவர் வீரவசனம் பேசும் போது தன்னை மறந்து ஆண்குரலில் வீரத்துடன் அங்குமிங்கும் நடந்து கொண்டு சபதம் செய்யும் காட்சி எனக்கு வேடிக்கையாக இருந்தது. பெண்களின் கூட்டத்திலிருந்து கேவி கேவி அவர்கள் அழும் குரல்கள் வந்தன. அந்தக் காட்சிக்கு அழாத ஒரே பெண் நான் மட்டும் தான் என்பது அதன் பின் நினைவுக்கு வந்தது.

மறுநாள் அந்தக் காரியதரிசி வந்திருந்தாள். நான் அவர்களின் நாடகத்தைப் பார்த்ததில் அவளுக்கு ரொம்பவே சந்தோஷம்.

நாடகம் எப்படி இருந்தது மேடம்

அவள் கேள்விக்கு நான் நேரடி பதில் சொல்லாமல் எத்தனை வருஷங்கள் இந்த நாடகம் நடத்துகிறீர்கள்? என்று கேட்டேன்.

. 35 வருஷமா மேடம்

ம்ம்ம் இந்த நாடகத்திலே இந்த ஊரு திரௌபதிகளுக்கு என்ன மெசஜ் கொடுக்கிறீங்க?

என்ன மேடம் இப்படி கேட்டுட்டீங்க... திரௌபதி வந்த ஒவ்வொரு காட்சியிலும் இந்த ஊரு பெண்கள் எப்படி அழுதார்கள்னு நீங்க நேரிலேயே பார்த்தீங்களே...

அப்போ 35 வருஷமா இந்த திரௌபதிகளை அழ வச்சதுதான் உங்க நாடகத்தின் வெற்றின்னு சொல்ல வர்றீங்களா

அழ வச்சது மூலமா இந்த நாடகம் அவங்களுக்கு ரொம்ப பெரிய உதவியைச் செய்திருக்கு மேடம்

வாட் டு யு மீன்

யெஸ் மேடம். அழறப்போ மனசிலிருக்கும் பாரம் குறையுமில்லியா.........

எனக்கு அவளுடைய பதிலைக் கேட்டு சிரிப்பு வந்தது.

அழறது மனப்பாரத்தைக் குறைக்கும்தான். ஒத்துக்கறேன். ஆனா அதுவே பிரச்சனைக்குத் தீர்வாகி விட முடியுமா

எங்களால் என்ன செய்ய முடியும் சொல்லுங்க மேடம்

அட என்ன இப்படி சொல்லிட்டீங்க ... நீங்கள் எல்லாம் நினைச்சா நிறைய விஷயங்களை இந்த மக்களுக்குச் சொல்ல முடியும் ... இதே திரௌபதி கதையை பழைய பாண்டவர் சபதத்திலிருந்து மாத்துங்க. பாண்டவர்களே துகிலுரியும் இந்த திரௌபதிகளுக்கு பாண்டவர்களின் சபதம் சரிப்படுமா யோசியுங்க. புதுசா... முடியும் உங்களால்... இவுங்களுக்கு ஏத்த மாதிரி... பாஞ்சாலி சபதத்தை மாத்துங்க...

அடுத்து ஆறுமாதங்கள் கழித்து பக்கத்து ஊரில் நவயுகத் திரௌபதி நாடகம் போட்டார்கள். சேவா சங்கத்திலிருந்து. நான் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைப்புக்கு மேல் அழைப்பு. நல்ல குளிர். சால்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு நானே காரை ஓட்டிக் கொண்டு போனேன். வழக்கம்போல பெண்களின் கூட்டம். வழக்கம் போல காட்சிகள். கடைசிக் காட்சி திரௌபதி சபதம்...

எங்கே அந்த வில் விஜயன்...? என்னைத் தன் மனைவியென வென்றெடுத்து வந்தவன் வென்று வந்தப் பரிசு பெண் என்று சொல்லாமல் பொருள் என்று சொன னானே!



படிப்பகம்

www.padippakam.com

ரத்தமும் சதையும் துடிப்பும் கொண்ட பெண் என்ன ஜடப்பொருளா? பொருள் என்பதால் அல்லவா அண்ணன் - தம்பிகள் அனைவருக்கும் உரியதென அன்னை குந்தி அறியாமல் சொல்லிவிட்டாள். அறியாமல் சொல்லியதையே அறமாக்கி அண்ணன் தம்பிகள் பெண்டாள அனுமதித்த அந்தப் பாவி அர்ச்சுனன் எங்கே... கொண்டு வாருங் கள் அவனை... காட்ட வேண்டும் அவனிடம் பெண்ணின் வீரம் என்ன என்பதை...

அண்ணன், தம்பிகள், பெரியப்பா, ஆசான் எல்லா உறவுகளையும் தருமத்தின் முன்னால் வென்றெடுக்க போர்க்களத்தில் கீதையை உபதேசித்த கண்ணன் எங்கே?

கொண்டு வாருங்கள் அவனை. எங்கே போனது அவன் கீதையின் உபதேசம்...

என்னை ஐவருடன் படுக்க ஆணையிட்ட போது எங்கே போனது கண்ணனிண் உபதேசம்...? கீதையை உபதேசித்த அவன் நாக்கைப் பிடித்து இழுத்து அறுக்கும்வரை என் குரல் அடங்காது... கொண்டு வாருங்கள் அவனை...?

நான் நிமிர்ந்து உட்கார்ந்தேன். பெண்கள் கூட்டத்தில் அமைதி... அவர்கள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தார்கள்.

கொஞ்ச நேரத்தில் அங்கே கல்லெறி,, நாடகத்தில் தொங்கிய திரைச்சிலைகளில் தீ பற்றிக் கொண்டது. கலவரம் வெடித்தது.

மறுநான் அங்கே 144 தடை யுத்தரவு அமுலுக்கு வந்தது.

சிலர் நாடகத்திற்கு ஆதாரவாகவும் பலர் எதிர்ப்பா கவும் மாறியதால் ஏற்பட்ட கலவரம்.

நாடகத்தைப் புதிதாகப் போடச் சொன்னது நான் தான் என்ற செய்தியை பெருமையுடன் அந்த சேவா சங்கத்தின் காரியதரிசி சொல்லப் போக அதுவே எனக்கு வினையாக வந்து வாய்த்தது.

மறுநாள் என் மேலதிகாரியிடமிருந்து எனக்கு அழைப்பு வந்தது.

உங்களுக்கு என்று புதிதாக ஒரு மாவட்டத்தைத் தான் இனிமேல் உருவாக்கனும்.

வாட் இஸ் திஸ்... எங்கே போனாலும் ஒரு கலவரம்... அதில் கட்டாயம் நீங்க சம்மந்தப்பட்டிருக் கிறீர்கள்! பஞ்சமி நில மீட்புனு போவீங்க... இருளர்களின் போராட்டம்னு கூட்டத்திற்கு தலைமதைத் தாங்க போவீங்க. ஆதிவாசிகளின் நில உரிமைப் போராட்டம்னு ஒரு சங்கத்தை ஆரம் பிச்சு விட்டுவிட்டு வந்திருவீங்க...! உங்களை எங்கே போஸ்டிங் பண்ணினாலும் அங்கே புதுசா நீங்க என்ன தலைவலியை எங்களுக்கு கொண்டு வரப்போறிங்களோனு பயமா இருக்கு... நீங்க அரசாங்க வேலை செய்யப் போறிங்களா இல்லை பொதுநலச்சேவை செய்யப் போறீங்களா...?

இரண்டையும் நான் ஒன்னாத்தான் சார் நினைக்கேன்

அவர் தலையைப் பிடித்து கொண்டு நாற்காலியில் உட்கார்ந்தார்.

சாரி... உங்களுக்குனு எந்த டிபாட் மெண்டையும் கொடுக்கற மாதிரி இல்லே.

எந்த மாவட்டத்திலும் போஸ்டிங் இல்லை... டிபார்ட்மெண்ட் இல்லாத மாவட ்டம் இல்லாத எந்த வேலையும் செய்யாத அரசாங்க அதிகாரியாக இருங்க...

நன்றி சார்... என்று நான் சொன் னவுடன் அவர் என்னை நிமிர்ந்துப் பார்த்தார்.

இப்போது நாங்கள் இருவரும் ஒரே நேரத்தில் சிரித்தோம். அவருக்கும் தெரியும் அவரால் முடியாதப் பல காரியங்களை நான் ஆரம்பித்து வைத்துவிட்டேன் என்பது. அதில் அவருக்கும் பெருமைதான். ஆனால் அவ ருடைய நாற்காலி அதை ஏற்றுக்கொள்ள இடம் கொடுக்கவில்லை. நாற்காலிக்கு அருகில் அவரும் நாற்காலியை விட்டு ரொம்ப விலகி நானும் நின்று கொண்டிருந்தோம்.

பி.கு

கதைக்கரு: இன்றும் வட இந்தியாவில் பஞ்சாப் மாநிலத்தில் மன்சாம் மால்வா பகுதிகளில், அரியனா மாநிலத்தில் மேவாட் மாவட்டத்தில் இந்த நவயுக திரௌபதிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பஞ்சாப் மொழியின் மிகச் சிறந்த எழுத்தாளரான ஞானபீட விருது பெற்ற போராசிரியர் குர்தி யல் சிங் (Gurdial Singh) தன்னுடைய புதினங்களில் நாடகங்களில் பெண்ணுக்கு இழைக்கப்படும் இக்கொடுமைகளைப் பற்றி நிறையவே எழுதியிருக்கிறார்.

அண்மையில் உத்திரபிரதேத்தில் நடந்த இம்ரானாவின் செய்திக்குப் பிறகு இந்தியாவின் பிற மாநிலங்களிலும் இந்த அவலங்கள் நடப்பது தெரிய வந்துள்ளது. திரௌபதி நாடகத்தைப் பார்த்து அந்தப் பெண்கள் கண்ணீர் விடும் செய்தியை ஓர் ஆய்வறிக்கை பதிவு செய்துள்ளது. இந்த உண்மைச் செய்திகளே இக்கதையின் கரு.

●



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் சினிமாவும், தலித்துகளும்



## ● கோபு

சினிமா, பத்திரிகைகள், தொலைக்காட்சி முதலியவை வெகுசன ஊடகங்கள் என்றே குறிப்பிடப்பட்டு வந்துள்ளன . ஆனால் பொருளாதர, தொழில் நுட்ப காரணிகளின் பின்னணியில் சாதாரணர்களால் கையாள முடியாத இவ்வுடகங்கள் நிச்சயமாக வெகுசன ஊடகங்கள் அல்ல. மேலும் வெகுசனங்கள் என்று அழைக்கப்படக் கூடிய ஒருபடித்தான மக்கள் குழு எதையும் (இந்திய) தமிழகச் சூழலில் நம்மால் காண முடியவில்லை. மாறுபட்ட விருப்பார்வங்களைக் கொண்ட சாதியமாய் பிளவுண்ட சமூகத்தையே காண முடிகிறது. இத்தகைய சமூகத்தின் உற்பத்தி பொருட்களில் ஒன்றான சினிமாவில் மட்டும் பெரிதாக வேறென்ன வாழ்ந்து விடப் போகிறது?.

1935-க்குப் பிறகு தமிழ் சினிமா பேச ஆரம்பித்த போது அதன் நோக்கங்களும், போக்குகளும் இரு விதமாகச் செயல்பட்டன. ஒன்று அது வரை நாடகங்களில் கோலோச்சி வந்த புராணக் குப்பைகள் திரைப்படங்களாகப் பரிணமித்தது. இரண்டு : சமகால அரசியல் நிலவரம் குறித்த பதிவுகள்.

புராணப் படங்களில் ஒன்றான பழைய நந்தன் படத்தில் நந்தனாக நடித்தவர் ஆறடி உயரமும், ஆஜானுபாகுவான உடலமைப்பும், பெருவயிறும் வாய்த்த தண்டபாணி தேசிகர். பட்டினி கிடந்து நொந்து போன நந்தனை பெருவயிறு தண்டபாணி தேசிகர் உடல்மொழிகளால் சித்தரித்தது ஒரு நகைச்சுவைப் படம் பார்த்த திருப்தியைக் கூடத் தரவில்லை. பிற்காலத்தில் மதுரை வீரன் படத்தில் எம்.ஜி.ஆரின் சித்தரிப்பு தலித்துகளின் ஒரு பிரிவினரை அவருக்கான ஓட்டு வங்கியாக மாற்றுவதற்கு மட்டுமே பயன்பட்டது.

அன்றைய தமிழக அரசியல் நிலவரத்தைப் பிரதிபலிக்க முயன்ற சினிமாவிலும் இரு வகையான போக்குகளைக் காண முடிகிறது. ஒன்று இந்திய தேசிய காங்கிரஸின் அரசியல் போக்கு. மற்றது சுயமரியாதைக்காரர்களின் சினிமா முயற்சி. பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான போராட்டத்தில் இந்திய ஆளும் வர்க்கத்துக்கு ஆதரவாக பல்வேறு பிரிவினரையும் ஒன்று திரட்டும் நோக்கில் இத்தகைய சினிமாக்கள் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. சாதி வெறியர் சத்திய மூர்த்தி கூட இத்தகைய சினிமா தயாரிப்பு முயற்சிகளில் பங்கு பெற்றிருக்கிறார். பத்மா சுப்ரமணியத்தின் தந்தை திரு. மு. சுப்ரமணியம் இருபதுக்கும் மேற்பட்ட படங் களை உருவாக்கினார். அன்றைய பார்ப்பன சமூகத்திற்குள் நிலவிய பால்ய விவாகம், வரதட்சிணைக் கொடுமை, உள்ளிட்ட பல பிரச்சினை களைக் களைந்து விட்டு, தங்களைத் தாங்களே சுத்திகரித்துக் கொண்டு அதிகாரத்தில் அமரத் தகுதிப்படுத்திக் கொள்ளும் முயற்சிகளின் ஒரு பகுதியாகவே இவற்றைக்காண வேண்டும். தலித்துகளை தம்பக்கம் ஈர்க்க முயன்ற காந்தியின் அரிசன சேவா சங்கத்தின் செயல்பாடுகளின் ஒரு பகுதியாக தலித்துகளைக் குறித்தும் சில பதிவுகளை இத்தகைய சினிமாக்களில் காண முடிகிறது. எது எப்படியாயினும் அந்த காலகட்டத்தில் மு. சுப்ரமணியத்தின் இந்த முயற்சிகளை இளையபெருமாள் அவர்களும் கூட சாதகமாகவே மதிப்பிட்டுள்ளார். இவை பற்றிய குறிப்புகள் தியோடர் பாஸ்கரனின் "Message beaners" என்ற நூலில் காணக் கிடைக்கின்றன.

அதே கால கட்டத்தில் சுயமரியாதை இயக்கம் என்ற பெயரில் மேலெழுந்த இடை நிலைச் சாதியினரான சூத்திரர்களின் இயக்கம் பார்ப்பனர்களைக் காட்டிலும் வலிமையாகச் சினிமாவில் செயல்பட்டது. C.N. அண்ணாதுரை, மு.கருணாநிதி, எம்.ஆர். ராதா, என்.எஸ் கிருஷ்ணன், எஸ்.எஸ். இராஜேந்திரன் உள்ளிட்டவர்களின் சினிமா முயற்சி பார்ப்பனர்களை விமர்சித்தபடியே இருந்தது. திராவிட இயக்கத்தின் வாயிலாக எட்டப்பட்ட சூத்திரத் திரட்சி திமுக-வாக சனரஞ்சகப்படுத்தப்பட்ட போது அவர்களின் நாத்திகக் கோட்பாடு சமரசத்திற் குள்ளாக்கப்பட்டு "கோயில்கள் கூடாதென்று கூறவில்லை, அவை கொடியவர்களின் கூடாரமாகி விடக்கூடாது" என்று சினிமா மூலம் நிலை நாட்டப்பட்டது. என்.எஸ்.கிருஷ்ணன், எம்.ஆர். இராதா மற்றும் உடுமலை நாராயணகவி ஆகியோரின் கூட்டிணைவு புத்திசாலித்தனமான நகைச்சுவை மூடநம்பிக்கைகளுக்கு எதிராகச்



படிப்பகம்

www.padippakam.com

செயல்பட்டிருப்பினும் இவை அதிகாரத்தில் பார்ப்ப னர்களை மாற்றீடு செய்யும் சூத்திர முயற்சிகளாகவே சுருங்கிப் போயின.

சினிமா என்ற சரக்கின் உற்பத்தி கேந்திர மான ஸ்டுடியோக்கள் AVM, வாகினி, மார்டன் தியேட்டர்ஸ், சென்ட்ரல் ஸ்டுடியோ முதலியவை தமிழகத்தின் ஆதிக்க வருணத்தவர்களுக்கு சொந்தமானவையாக இருந்தன. பெரும்பாலான திரைக் கலைஞர்கள் இச்சமூகங்களைச் சேர்ந்தவர்களே. இந்த அமைப்பு தலித்தை மட்டுமல்ல வேறெந்த சாதாரண மனிதனின் வாழ்வியலையும் சித்தரிக்க ஆர்வ மற்றவையாக இருந்தன. இத்தனைக்கும் சினிமா சரக்கின் சந்தையாக தலித்துகள் இருந்தும் கூட இந்நிலைதான் தொடர்ந்தது.

சாதியடையாளங்களைப் பெருமளவில் நேரடியாகச் சித்திரிக்கவியலாத சினிமா இலைமறைகாயாக அவற்றைக் குறிப்பிடுவது வழக்கமாக இருந்தது. பாரதிராஜா உள்ளிட்டவர்களால் ஸ்டுடியோவிலிருந்து வெளிப்புறம் நகர்த்தப்பட்ட சினிமா, சூத்திரசாதிகளுக்கும் அவற்றின் மேநிலைச் சாதிகளுக்குமிடையினான உரையாடலாகவே அமைந்திருந்தது. அலைகள் ஓய்வதில்லை படத்தில் மத அடையாளங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டாலும் சாதியடையாளங்கள் பின்னணியில் செயல்படுவது தவிர்க்கவியலாததாக அமைந்தது. முதல்மரியாதையில் நிலவுடைமைச் சாதி கதாநாயகனின் மானம் ஓடக் காரப் பெண்ணின் தியாகத்தால் காப்பாற்றப்படுகிறது. அதிக அந்தஸ்து பெற்ற மனிதர்களைக் காப்பாற்றும் பொருட்டு சாதாரணர்கள் தியாகம் செய்வது உலக சினிமாவின் பகுதியாகவும் உள்ளது. மேலும் சாதி ஒழிப்பு பேச முயன்ற இடை நிலைச் சாதியரின் முயற்சிகள் பெருமளவு சமரச நோக்கையே கொண்டிருந்தன. பார்ப்பனரான கமல் சூத்திரர்களின் சந்தையைக் கணக்கில் கொண்டு தேவர் மகன் போன்ற படங்களை எடுத்து இலாபமீட்ட முனைந்தது பாரதிராஜா உள்ளிட்டவர்களை உறுத்தியிருக்க வேண்டும். எனவே கிழக்குச் சீமையிலே போன்ற படங்க ளின் மூலம் தன் சாதி சந்தையை தானே பிடித்துக் கொள் ளும் முயற்சி நடந்தது.

நிலவுடைமைச் சாதியரான சூத்திரர்கள் திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் அனைத்தும் உள்ளடக்கிய ஆளும் வர்க்கமாக மாறிவிட்ட பின்பு திரைப்படங்களில் தங்களைக் கடவுளுக்கு நிகராகச் சித்திரித்துக் கொள்வதில் தலை பட்டுள்ளனர்.

வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டை, நீதி வழுவா பஞ்சாயத்து தலைவர், மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமான், கண்ணுக்கெட்டிய தூரம் வரை நிலம், பத்தினி மனைவி இவற்றைக் கொண்ட சூத்திரக் கதாநாயகர்கள் பல வகைகளிலும் தமிழ்ச் சினிமாவை ஆக்கிரமித்துள் ளனர். இப்படங்களில் இவர்களுக்கு நிகரான வில்லன்கள் கூட அதே சாதி அந்தஸ்துடன் விளங்குகிறார்கள். ஒடுக்கப்பட்ட மக்கள் இவர்களின் காலைப் பிடித்து, கதறி உதவி பெறுபவர்களாக சித்தரிக்கப்படுகிறார்கள். இறுதியில் தன் சாதி வில்லனைத் தானே கொன்று படத்தை முடித்து விடுகிறார்கள். அதாவது ஒரு கெட்ட சூத்திரனைக் கொல்வது கூட நல்ல சூத்திரனால்தான் முடிகிறது. ஒடுக்கப்பட்டவர்களுக்கு அது சாத்தியமில்லை. அதாவது வீரம் என்பது சாதி இந்துவின் இரத்தத்துடன் தொடர்பு டையது என்ற கோட்பாடுதான் இதன் பின்னனி. இந்த விதத்தில் சிறுபான்மையினர் எவ்வளவோ புண்ணியம் செய்தவர்கள். குறைந்த பட்சம் தமிழ் சினிமாவில் வில்லன் அந்தஸ்தாவது கிடைத்தது.

வெளிமாநிலக் கலைஞர்களான ரஜினி உள்ளிட்ட வர்கள் கூட தமிழக சூத்திரக் கலாச்சாரத்தின் நெளிவு, சுழிவுகளைத் தெரிந்து கொண்டு இலாபமீட்டுவதில் ஈடுபட்டுள்ளனர். இவ்வழியில் செயல்பட்ட எஜமான், முத்து போன்ற படங்களிலும் மனித நாகரிகத்தின் மீது காறித்துப்பும் போக்கையே காண முடிகிறது.

தமிழகத்தில் ஆரம்ப காலத்தில் பிற்படுத்தப் பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டுப் பட்டியலில் கைவினைச் சாதிகளே பங்கு பெற்றிருந்தார்கள். திராவிட இயக்கங்களின் முப்பதாண்டுகால ஆட்சியில் நிலவுடைமை ஆதிக்க சாதிகள் அனைத்துமே படிப்படியாக இட ஒதுக்கீட்டு வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. அத்தகைய சாதிகளின் அரசியலைத் தீர்மானிக்கும் ஓட்டு மற்றும் சாதி பலம் தான் இதற்குப் பின்னனி. ஆனால் அரசு பணிகளில் இத்தகைய சாதிகளுக்கு உரிய பிரதி நிதித்துவம் இல்லை என்று கூறி இட ஒதுக்கீட்டு வரம்பிற்குள் இவர்களை இழுத்து வந்த சமூகநீதி இதே சாதிகள் நிலவுடைமையில் பெற்றிருந்த மித மிஞ்சிய பிரதி நிதித்துவத்தை மூடி மறைத் தது. இத்தகையவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிற இட ஒதுக்கீடு ஒரு மிஞ்சிய சலுகை யாகக் காட்சியளிக்கிறது. இப்படியாகச் சலுகை பெற்று வரும் சூத்திரர்களில் ஒரு பெருங்குழுவும் பார்பனர்களும் ஒன்றிணைந்து இட ஒதுக்கீட்டிற்கெதிராக தொடர்ந்து பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறார்கள். வானமே எல்லை, ஹிந்து குழுவால் தயாரிக்கப்பட்ட ஒரே ஒரு கிராமத்திலே, ஜென்டில்மேன் உள்ளிட்ட எண்ணிறைந்த படங்கள் இப்பணியைச் செய்தன. பொதுவாக இது போன்ற படங்களில் சமூக அநீதிகளாகப் பட்டியலிடப் படும் லஞ்சம், ஊழல், அராஜகம், நேர்மையற்ற போக்கு இவற்றுடன் பள்ளியில் சேரும் போது சாதி கேட்கிறார்கள் என்பதையும் சேர்த்துக் கொள்வது பார்வையாளனின் நனவியலில் இட ஒதுக்கீடு ஒரு கேவலமான செயல் என்பதைப் போல பதியப்படுகிறது. சமூகத்தில் சாதியை விமர்சனத்திற்குள்ளாக்கிய ஜான் ஆபிரகாமின் "அக்ரகாரத்தில் கழுதை" க்கு எதிராக உச்சநீதிமன்றம் வரை சென்று பார்ப்பன சமூகம் தடையுத்தரவு பெற்றது வரலாறு.

இட ஒதுக்கீட்டிற்கு எதிரான படங்கள் அனைத்தும்



படிப்பகம்

www.padippakam.com

தகுதி, திறமை என்பவை பார்பனா'களுக்கே உரித்தான பண்புகளாகச் சித்தரித்தன. தகுதி, திறமை பற்றிப் பேசும் போது தமிழ்த் திரையுலகின் இசைத் துறை பற்றி ஆராய வேண்டும். தமிழகத்தில் கர்நாடக இசை யென்பது முழுமுற்றாக பார்பனர் மற்றும் இரண்டாம் நிலை சாதியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வந்தது. சினிமாப் பாடகர்களில் பெரும்பான்மையோர் இவர்கள்தான். ஆனால் இசையமைப்பாளர்கள் என்று வரும்போது தலித்துகள் உள்ளிட்ட பல்வேறு சாதி மதங்களைச் சார்ந்த வர்களும் முன்னனியில் உள்ளனர். இசையமைப்புத் துறையைப் பொறுத்தளவில் பார்ப்பனர்களின் எண்ணிக்கை குறைந்தே காணப்படுகிறது. இசையமைப்பதற்குத் தேவை படைப்புத்திறன், பாடுவதற்குத் தேவை பயிற்சி. மனித சமூகத்தின் வளர்ச்சி காரணியான படைப்புத் திறன் சாதி, மத வேறுபாடுகளைச் கடந்தது. ஆனால் பயிற்சி என்பது வாய்ப்புள்ளவர் களுக்கே வாய்க்கிறது. நாம் தகுதி, திறமை என்று கருதிவரும் கல்வி சார்ந்த விஷயங்கள் படைப்புத் திறன் மிகக் குறைவாகவும் பயிற்சி என்பதை மிக அதிகமாகவும் கோருகிற துறையாகும். சங்கர், மணி ரத்னம் போன்றவர்கள் தங்களுடைய படங்களுக்கு தேர்ந்து கொள்ளுகிற கலைஞர்கள் மற்றும் தொழில் நுட்ப வல்லுனர்கள் பலரும் பார்ப்பனரல்லாதவர்களே.

தமிழ் சினிமா கதாநாயகர்கள், நாயகிகள் அல்லது கதையும் கூட பல சமயங்களில் எதார்த்தத்தைச் சித்தரிப் பதில்லை. மாறாக மிகைப் படுத்தப்பட்ட புனைவுகளையே அளிக்கிறது. தமிழ் சினிமாவில் நகைச் சுவை கதா பாத்திரங்கள் தான் ஓரளவு எதார்த்தத்தைப் பிரதிப லிக்கின்றன.

கவுண்டமணி செந்தில் காமெடி மக்க ளைக் கவர்ந்த காரணம் சாதாரண வாழ்வில் இடம் பெற்றது தான். இதில் கூட மனிதனை மனிதன் இழிவுபடுத்திக் கொள்ளும் ஒருவித சாதிய போக்கு செயல் படுவதைக்காண முடிகிறது. விவேக் ஒருபகுத்தறிவுவாதியாக காட்சியளித்துக் கொண்டி ருந்தாலும் பார்ப்பனியத்துடனான அவருடைய உடன்பாடு இடைநிலைச் சாதிகளின் வழக்கமான குணாம்சம். அவ ருடைய ஒரு காட்சி நகர சுத்தி கரிப்புத் தொழிலாளிகள் சங்கம் வைத்திருப்பதை நக்கல் பண்ணுகிறது. சமூகத்தை அசுத்தப்படுத்திக் கொண்டிருக்கும் சினிமாக்காரர்களுக்கு சங்கம் இருக்கும் போது சுத்தப்படுத்துகிறர்வர்களின் சங்கம் பற்றிய இவருடைய கிண்டல் சூத்திர ரத்தம் சம்பந்தப்பட்ட ஒரு வியாதி என்பதை உணர முடிகிறது.

மணிவண்ணன் மிக யதார்த்தமான போக்கில் அதிகார வர்க்கத்தை நையாண்டி செய்வதும், அரிவாள் கலாச்சாரத்திற்கெதிரான வடிவேலுவின் பல்வேறு, நகைச் சுவைகளும் குறிப்பிடத்தக்கன.

தலித்துகளுடன் காதல் செய்து "ஓடிப்போய," திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளை இழுத்துவந்து வெட்டிக் கொன்று விடுவது, உயிருடன் எரித்து விடுவது முதலிய கொடூரங்களைப் பற்றிய ஒரு எதார்த்தமான சித்தரிப்பாக "காதல்" படம் காட்சியளிக்கிறது. எனினும் இறுதியில் ஒடுக்கப்பட்ட சமூக கதாநாயகன் அடித்து பைத்தியமாக்கப்படுவது சாதி இந்து ரசிகர்களை ஓரளவு திருப்திபடுத்தவே செய்தது.

ஒட்டு மொத்தமாக பார்க்கும் போது தமிழ் சினிமாவில் தலித்துகள் குறித்த சரியான பதிவுகள் இல்லவே இல்லையென்று மறுத்து விடுவது தான் சரியாக இருக்கும். தமிழ் சமூகத்தில் 20% மக்கள் தொகை கொண்ட ஒரு சமூகம் பற்றிய சரியான பங்கீடு எதுவும் இல்லாமலே சினிமா செயல்பட்டு வருகிறது. இத்தனைக்கும் சினிமா தன் சந்தையாகச் சுரண்டிக் கொழுப்பதும் தலித் சமூகத் தையே. இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் "தலித் சினிமா" கானல் நீராகவே காட்சியளிக்கிறது.

●

# துப்புரவுப் பணியாளர்கள் கோரிக்கை மாவட்ட மாநாடு

19.3.2006 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு ராமநாதபுரத்தில் துப்புரவுப் பணியாளர்களின் கோரிக்கை மாவட்ட மாநாடு நடைபெற்றது. இதில் நகராட்சி, சிறப்பு நிலை சிற்றூராட்சி, பேரூராட்சி, பஞ்சாயத்து அனைத்து துப்புரவு பணியாளர்களும் கலந்து கொண்டனர். திரு. வே. கண்ணதாசன் மற்றும் பாலு அவர்கள் இம்மாநாட்டை ஒருங்கிணைத்தார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்க்கவிதையில் சூழலியல் பதிவுகள்

● அன்பாதவன்

கடைசி டினோசர்
ஒற்றையாய்
நின்று கொண்டிருக்கிறது
அதன் ரோமங்கள் தொய்ந்து
களைத்துக் கிடந்தன
கடுங்கோடை இலைகள் உதிர்ந்து
இலைகளுக்கு உள்ளே
மறைவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறது
அதன் கழுத்தில் அமர்ந்து
ஊர்ந்து செல்லும் கரப்பான் பூச்சி
போகட்டும் என்று பொறுத்திருந்தது
இன்னும் சில வினாடிகளில்
கழுத்தை தாழக் குனிந்து
விஷக் கற்றாழையைக்
கடிப்பதற்காய் காத்திருக்கிறது
இதுவரை
பார்க்கப்படாதப் பறவைகள்
தொலைவிலிருந்து கத்துகின்றன
சீக்கிரம் செத்துப் போ
சீக்கிரம் செத்துப்போ

- தேவதச்சன் (1)

நம் கண்முன்னே கரைந்து காணாமல் போகும் இன்றைப் போலவே நாம் பிறந்து, வளர்ந்து, நம்முடன் விளையாடிய இயற்கையும், சுற்றுச் சூழலும் ஒவ்வொரு கணத்திலும் இறந்துகொண்டே இருப்பதை, சூழலியலில் ஆர்வம் கொண்டவர் அறிவர். சூழலியல் குறித்த கவலையும், அக்கறையும் இன்றைய சுழலில் தவிர்க்க இயலாத அம்சமாக வளர்ந்து வருகிறது.

சூழலியல் என்பது வேறொன்றுமில்லை! நாம் வாழும் பூமி.......... நாம் காற்று வாங்கும் கடல், தினமும் பார்க்கும் ஆகாயம், தினசரி நுகரும் நீர், சுடும் நெருப்பு நொடிகளொன்றிலும் சுவாசிக்கும் காற்று.

நம்மைச் சுற்றியிருந்து நமக்கு பயனளித்து வந்த இந்த அய்ம்பூதங்களுக்கு அந்த நண்பர்களுக்கு நாம் செய்த கைமாறு என்ன? எவ்வளவுக் கெவ்வளவு சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்த முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு மாசுபடுத்தினோம். கடலில் அணுக் கழிவுகளையும், வேதிக்கழிவுகளையும் கொட்டி அலைக்கடலைச் சீரழித்து கடல்வாழ் உயிரினங்களை கொலை செய்கிறோம். ஏரியாய்............. குளமாய்............. நதிப்படுகைகளாய் இருந்த இடங்களை ஏரியா ஏரியாவாய் மனைபோட்டு கூவிக்கூவி விற்கிறோம்.

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் அரசு கட்டடங்களை பேருந்து நிலையங்களை உருவாக்கிவிட்டு மழைநீர் சேமிக்கச் சொல்லி சட்டம் போடுகிறோம். தொழிற்சாலைகளின் கழிவுப் புகைகளினால் காற்று மண்டலத்தை கரியாக்குகிறோம். ஓசோன் படலத்தைக் கிழித்து விட்டு உஷ்ணம்... வெப்பம் எனக் கூச்சலிடுகிறோம்.

நாம் செய்கிற காரியங்கள் சூழல் பாதிப்பை உண்டாக்கி நமக்கே துன்பங்களைக் கொடுக்கும் என்று தெரிந்தும் தொடர்ந்து இது மாதிரியான சூழல் கேட்டினை செய்துகொண்டே இருக்கிறோம்.

வனங்களின் அழிவு, நதிகளின் அழிவாய்......... மறைவாய் போனதை நாமின்னும் உணர்ந்தவரில்லை. குட்டி பையனின் (Littel Boy) வெடிப்பும் செர்னோபில் விபத்தும் நமக்குள் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதையே கூடங்குளம் காட்டுகிறது. கடலில் கழிவுகளைக் கொட்டிவிட்டு அதனால் முதலில் பாதிக்கப்படுபவர்கள் ஒடுக்கப்பட்ட மக்கள் தாம். மலைவாழ் பழங்குடியினர், தலித்துக்கள், பெண்கள் என இயற்கைச் சூழலின் சிதைவு வெவ்வேறு பரிமாணங்களில் நீர், நிலம், காற்று மற்றும் உயிரின வளம் இவற்றின் சீரழிவாக வெளிப்படும் போது முதலடி வாங்குபவர்கள் இவர்களே (2) என சூழலியல் ஆய்வாளர் தியோடர் பாசுகரன் கூறுவதை நாம் கவனத்தில் கொண்டோமா?

இன்றையச் சூழலின் நெருக்கடிகளையும், நெருக்கடிகளிலே அமிழ்ந்துபோகாத திமிறல்களும் உணர்வுகளும், எதிர்வினை கொள்கிற ஒரு சமூகத் தேவையை நமக்கு தந்திருக்கின்றன. சீரழிந்துவரும் பண்பாட்டுச் சூழல்களை மறுபரிசீலனை செய்யவும், புத்துருக் கொடுத்து மனித வயப்படுத்தவும் நேரம் வந்திருக்கிறது. இதை உணர்ந்திடும் கவிஞர்கள், எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் இன்னும் புதிது புதிதாய்த் தோன்றியாக வேண்டிய ஒரு சூழ்நிலை - ஒரு கட்டாயம் ஏற்பட்டு வருகின்றது (3) என்கிற இலக்கியத் திறனாய்வாளர் பேரா.தி.சு.நடராசனின் கருத்துகளும் கவனத்தில் கொள்ளத்தக்கன.

கவிஞர்கள் என்பவர்களும் நம் சமூகத்தில் ஓரங்கம்தான். சமூகத்தின் நிகழ்வுகளில் கவலையும்



படிப்பகம்

www.padippakam.com

அக்கறையும் தீர்வுகளைத் தருகிறப் பார்வையோடும் விமர்சனத்தோடும் கவிதைகள் பிறப்பின் படைப்பாளிக்கும் மொழிக்கும் சிறப்பாக அமையும். தமிழில் மேற்சொன்னக் குணங்களோடு பரவலாக பல கவிதைகள் சூழலியல் குறித்து விவாதிக்கின்றன. விமர்சிக்கின்றன. வழிகாட்டுகின்றன...........

இவ்வுலகம் இனியது
இதிலுள்ள வான் இனிமையுடைத்து
காற்றும் இனிது
தீ இனிது நீர் இனிது நிலம் இனிது
ஞாயிறு நன்று திங்களும் நன்று
வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன
மழை இனிது மின்னல் இனிது இடி இனிது
கடல் இனிது, மலை இனிது காடு நன்று
ஆறுகள் இனியன உலோகமும் மரமும்
செடியும், கொடியும்
மலரும், காயும், கனியும் இனியன
பறவைகள் இனிய
ஊர்வனவும் நல்லன
விலங்குகளெல்லாம் இனியவை
மனிதர் மிகவும் இனியர்

ஆஹா............! மகாகவிக்குத்தான் எத்துணை நம்பிக்கைச் சிந்தனை. ஆனால் நடைமுறையில் பாரதி சிலாகிப்பதுபோல் உலகம் இனியதாகவா இருக்கிறது? நாம் ஒவ்வொருவரும் நம் மனசாட்சியின் இக்கேள்வியை எழுப்புவோமானால் பதில் என்னவாக இருக்கும்? கசப்பான மவுனம்தானே!

அறிவியல் தொழில்நுட்பம் என்ற பெயரில் வரைமுறையில்லா வளர்ச்சியில் வேகமாக நகரும் இன்றைய யதார்த்த உலகில் சூழலியல் பிரச்சனை மிகமிக முக்கியமாய் பரிசீலிக்கப்படவேண்டிய அம்சம். ஆனால் லாபத்தை, சுயநலத்தை, குறுகிய மனப்பான்மையை மட்டுமே இலட்சியமாய்க் கொண்ட சிலர், பலர் வாழவேண்டிய பூமிப்பந்தினை தன்னிஷ்டம்போல உதைத்து விளையாடுவதும், நீர் நிலைகளை, காற்று மண்டலத்தை மாசுபடுத்துவதும் எதிர்க்கவியலா அளவில் போவதை நம்மில் பலர் சாட்சிகளாய் நின்று பார்த்து கொண்டுதானே இருக்கிறோம்.

இயற்கை வளமும் சுற்றுச்சூழலும் மனிதகுல வளர்ச்சியின் முக்கியக் கூறுகளாக அமைந்துள்ளன. எந்த ஒரு வளர்ச்சிக்கான நடவடிக்கையும் அது செயல்படும் சுற்றுச்சூழலைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாவிடில் நீண்ட நாட்களுக்கு நீடிக்க முடியாத ஒரு நிலைக்கே இட்டுச்செல்லும்

நெருக்கடி மிகுந்த இந்த தருணத்தில் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற அய்ம்பூதங்கள் குறித்து தமிழ்க் கவிஞர்களின் சூழலியல் குறித்த பதிவுகளை விரிவாய்க் காண்போம்.

## நிலம்

**நமது நிலம் நமது ஆசிரியர் நமக்குச் சொல்கிறார் நிலத்தை**
**உழுவது எப்படி என்றும் விதைப்பு செய்யும் முறை என்னவென்றும்**
**பிரார்த்தனை மூலம் மழையை வரவழைப்பது பற்றியும் பயிர்களை**
**கவனிக்கும் முறைகளையும்**
**கண்திருஷ்டியிலிருந்து காப்பாற்றுவது பற்றியும்**
**எப்போது, எப்படி அறுவடை செய்வது**
**என்பது பற்றியும்**
**மகசூலைப் பகிர்ந்து கொள்வது பற்றியும்**
**நமது வயிற்றை நிரப்பிக் கொள்வது பற்றியும்**
**பசிய வயல்களும் நீண்டு செழுதுயர்ந்த மரங்களும், பூத்துக் குலுங்கும்**
**கொடி,செடி.......... தாவரங்களைத்தான் பூமி**
**உருண்டையின் பிம்பம்நமக்கு பிள்ளைப்பருவம் முதல் கற்றுக்**
**கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நிஜமென்ன? விளைநிலங்கள் யாவும்**
**வீட்டு மனைகளாக, நகரங்கள், மாநகரங்களின் நீர்வழியடைத்து**
**கட்டடங்கள் முளைத்த கான்கிரீட் காடுகளாய் மாறிப்போயின**
**பறவைகள் அமர மரக்கிளைகளுக்கு**
**பதிலாய் ஆந்தெனா டிஷ்**
**செல்லுலார் கோபுரங்கள்**
**இப்படியொரு சிமெண்ட் சிறைக்குள்**
**அகப்பட்டுத் தவிக்கும்**
**கவிஞன் ஒருவனின் குரலிது**
**கட்டங்களுக்கு நடுவே ஒற்றை மலர்.**
**எப்படி வரும்வண்ணத்துப்பூச்சி**

**– ஆசுரா**

ஒருமரம் சுமார் 17,50,000 மதிப்புள்ள பயனிப்பதாக குறிப்பிடுகிறார் சூழல் ஆர்வலர் திரு.வின்சென்ட்

மர(ண)ம்

குறிஞ்சியும் மருதமும் அழிய
விரிகிறது பாலை அனல் பரப்பி..........
சிநேகமான சுரபுன்னை வனங்களை விழுங்கி
அடுக்ககங்களின் நிழல் பெருக்கியவர்களை
சீற்றத்துடன் தண்டித்தது ஆழிப்பேரலை
முள்தோப்பின் குயிலிசையை விரட்டியது
வெட்டுக் கத்தியின் ஓசை
மரம் வெட்டிய ஒருத்தனைத் தேடி அழித்தது
சிறப்புடை வனத்தொகுப்பை
தங்க நாற்கரங்கள் சீவித்தள்ளுகின்றன
சாலையோரத் தருக்களை
வீழ்ந்த விருட்சங்களின் மீது கேலியாய்ப் படிகிறது
வேக வாகனங்களின் கருப்பு எச்சில்
அலட்சியத் தீப்பொறி தீயோவியம் தீட்டும்
காற்று சாம்பலாய் மலைவனம்
மரங்களை வெட்டிக் கொன்று
நீர்க்குழாய்ப் பதிப்பு எப்படி வரும் மழை
தோப்புகள்மறைந்து விசுவரூப அடுக்ககங்கள்
வீட்டுக்குள் தொட்டி மரங்கள்
கேபிள் வயர்களில் மலர் தேடும்
தேன்சிட்டு மரங்களில்லா ஊரில்
ஓசோன்கிழிந்த உக்ர வெப்பம் காறித்துப்பும்
தருக்களை அழித்த உலகை

- அன்பாதவன்

மண்ணை மாசுபடுத்தும் நவீன எதிரிகளில் நெகிழி (பிளாசுடிக்) முதன்மையானது. மழைநீரை மண் உறிஞ்சவிடாமல் தடுப்பதோடு, மண்ணோ செரிமானமும் ஆகாமல் நீண்டகாலத் தொந்திரவாய் நெகிழிகள், படிக்காதவர்கள், நாகரீகமில்லாதவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

என மெத்தப்படித்தவர்களால் முத்திரைக் குத்தப்பட்ட ஆதிவாசிகள் இயற்கையை மிக எளிதாய், இலாவகமாய் இயல்பாய் புரிந்து வைத்திருப்பதைப் பாருங்கள். எங்களது ஆடுகள் கானகங்களில் மேயப் போய் மான்களோடு கலக்கின்றன. புலிகள் சிலவற்றை எடுத்துக் கொண்டுப் போய்விட இதற்காக நாங்கள் புலிகளை வேட்டையாடுவதில்லை ஏனெனில் அவற்றிற்கு என்றும் உரிமைகள் உள்ளன(7)

இயற்கையின் சம உரிமையை நம்மில் பலரும் சரிவரப் புரிந்து கொள்ளாததாலேயே எதிர்விளைவுகளால் இன்னல் பட்டுக் கொண்டிருக்கிறோம். நெகிழிகளால், வேதியியல் கழிவுகளால், கான்கிரீட் சுமைகளால் நமது நிலங்கள் நாசமாகாமல் தடுக்க என்ன செய்திருக்கிறோம்? ஆடுகளுக்குத் தழை; மேய்ப்பவருக்குப் பழம் எனத் தரும் இயற்கையை அழித்துவிட்டோமானால் யாருக்குமே எதுவுமே கிடைக்காமல் போய்விடும் அபாயத்தை புரிந்திருக்கிறோமா? எழுகின்றன நூறு வினாக்கள். இந்த விளைவுகளுக்கு யார் காரணம்? விடைகளாய் வருகின்றன சிலரின் அனுவங்கள்.

வேண்டுவதோ மழைநீர் அறுவடை
மக்கள் நிகழ்த்துவதோ விதை
நீர்ப்படுகொலை (8)

திட்டவட்டமாய்ச் சொல்லும் க்ருஷாங்கனியின் கவிதை காரணங்களாய் விரிய, இரா. மீனாட்சியோ ஒரு மருத்துவ அறிவுரை வழங்குகிறார்

மண்தாய்க்கு அவசரம்
தோல்மாற்று அறுவை சிகிச்சை

## நீர்

நீருக்குத்தான் பூவுலகில் எத்தனை முகங்கள்!

மழை, பனி,அருவி, நதி, கடல், ஏரி, குளம், கிணறு இப்படி தண்ணீர் எடுக்கும் அவதாரங்கள் எத்தனை? இயற்கையோடு இனியதொரு தோழமை கொண்டு வாழ்க்கை நடத்தி வந்த நம் முன்னோர்கள் மிகவும் அருமையாக நீண்டக் காலத் திட்டமிட்டு ஊர்களை, நகரங்களை நிர்மாணம் செய்தார்கள். தாழ்வானப் பகுதிகளில் குளத்தையும், வாய்க் காலையும் வெட்டினர். நதி வெள்ளம் பொங்கி நாச நர்த்தனமாடினாலும் மனிதர்க்கு தொல்லையில்லாத வகையில் குடியிருப்புகள் அமைக்கப்பட்டன. கடலலைகளின் தாக்குதல்களிலிருந்து தப்பிக்கும் வகையில் கரைக்கு மிகத்தள்ளி வீடுகள் அமைக்கப் பட்டன. ஆனால் இன்றைய நிலையென்ன? குளத்தை, ஏரிகளை, நதிப்படுக்கைகளை தூர்த்துத்தான் பேருந்து நிலையங்கள், அரசு அலுவலகங்கள், குடியிருப்பு பகுதிகள் அமைக்கப்படுகின்றன.

இதனால் நிலத்தடி நீர் சுழற்சி முறை பாதிப்படைவதோடு பெருமழைக்காலங்களில் வெள்ளம் தன் அகன்ற அலை வாய்த்திறந்து மக்களை, உடைமைகளை, உயிர்களை அள்ளி விழுங்குகிறது.

வருஷந்தோறும் பொழிகிறது மழை
இடிந்து விழுகிற கட்டடங்கள்
சிதைந்த உடல்கள் பார்த்து.
உச் கொட்டி பெருமூச்சு விட்டு கடவுளை
சபித்து நகர்கிறது
வேகமாய் மாநகர வாழ்வு

என்கிற அன்பாதவனின் வரிகளில் தெரியும் குரூர யதார்த்தம்தான் இன்றைய சூழல். ஆனால் கருத்த மேகங்கள் கண் சிமிட்டி கலைந்து போய் விட்டால் இராம.பிரபு எழுதியதுதான் உண்மையாகிவிடும்

சரியாய்த்தான் எழுதினான்
மாணவன்
பாழாறு

மணல் லாரிக்காரர்கள் தினம் கொள்ளைக் கொண்டால் நதிகள் யாவுமே பாழாறுதானே!

திசம்பர் 2004ல் கோரத்தாண்டவம் ஆடிப் போன ஆழிபேரலை குறித்த பதிவொன்று

இன்னுமா அடங்கவில்லை
இயற்கை அன்னையே உன் பசி
பொறுமைக்கு உன்னைத்தான்
பெருமையாய்ச் சொல்லிவந்தோம்
சீறிப்பொங்கிவந்து-இன்று
பாரில் பழி சுமந்தாய்
கடலூர் கலங்குகின்றது;
நாகை நடுங்குகின்றது
கன்னியாகுமரியோ கண்ணீர் சிந்துகிறது
பாண்டி பதற, சென்னை சிதறுகிறது
இன்னுமா அடங்கவில்லை
இயற்கை அன்னையே
உந்தன் பசி (நடவு 12)

அசோகனின் வரிகளில் மனிதாபிமானம் மிளிர்ந்தாலும் இயற்கை சீற்றம் குறித்து முன்னெச்சரிக்கைகள் தந்தும் காப்பாற்றிக் கொள்ளாத அலட்சிய மனிதருக்கு கடல் தந்த பெருந்தண்டனையோ சுனாமி. கடல்நீர் மாசு படுவதைக் கூட அழகாய்ச் சொல்கிறது மித்ராவின் ஹைகூ

கடல் நெடுக
மயிற்பீலிகள்
தூரத்தில் எந்திரப்படகு

அதேநேரம் நதிநீர் இணைப்பு குறித்த சமூக உணர்வை பதிவு செய்கிறார் பெரணமல்லூர்சேகரன்

"வீணாகும் ஆற்றுநீர்
தேனாகும் இணைப்பால்
இணைப்போ
கானல் நீர்"



படிப்பகம்

www.padippakam.com

எல்லாம் சரிதான்! எதார்த்தமென்று ஒன்றிக் கிறதே..... ஆர்.எஸ். நாதனின் இந்தக் குரலைக் கேளுங்கள் உணர்வீர்கள்.

மழை அழகுதான்
வீடு
ஒழுகாத வரை'

## நெருப்பு

தீ குறித்த சூழலியல் சிந்தனையோடு தமிழ்க் கவிதைகள் பரவலாய்த் தென்படவில்லையென்பதோர் குறிப்பிடத்தக்கசெய்தி அதிகமாய் தீண்டினால் சுடுமென்பதாலா? அறிவியல் சிந்தனை சார்ந்த படைப்பாளி நெல்லை சு.முத்துவின் ஒரு மரபுக் கவிதைத்துண்டு 'வனத்தீ' குறித்து கவலைக் கொள்கிறது

"காட்டுக்கே தீவைத்துக் கரியெடுத்துக்
காற்றுக்கே கரியமில வாயும் கூட்டி
மோட்டுக்கு மேலாயாம் கதிரவன்தன்
மூச்சாகும் அனல்காற்றைப் புவிக்குள் தேக்கி
வீட்டுக்குள் நிம்மதியாய் உறைவதென்ற
விளையாட்டா? கண்ணாடி அறைவிளைவால்
நாட்டுக்கே அழிவுவரும்! ஞாலம் சாகும்
ஞாயிறொளித் தீவிரத்தில் ஊழி மாறும்"
(GREEN HOUSE EFFECT)

இயற்கையோடு இசையும் எரியும் சோகத்தை பிழிகிறது மித்ராவின் இந்தக்கவிதை

"காட்டுத்தீ மூங்கில்காடு
கண்ணில் நீர்
சங்கீதச் சாம்பல்"

"சுற்றுச்சூழல்கேடு காரணமாக உலகின் சூடு அதிகரித்து பல மோசமான விளைவுகளைச் சந்தித்து வருகிறோம். பல்வேறு பனிப்பிரதேசங்கள் காணாமல் போய்விடுகின்றன. பல பகுதிகள் கடலுக்குள் அமிழத் தொடங்கிவிட்டன. பனிப்பிரதேசங்கள் உருகி இயற்கை காப்புநிலை சிதைந்து வருகிறது. இந்த அபாயம் இமயமலையையும் தாண்டிவிட்டது" - என்கிற சுப்ரபாரதிமணியனின் (படைப்பு மனம்) எச்சரிக்கை வரிகள் தீயாய்ச் சுடுபவை.

## காற்று

நிலத்திலோ, நீரிலோ, வானிலோ, தீயிலோ........ எங்கு சூழலியல் கேடுகளை உருவாக்கிடினும் மாசுபடுவதென்னவோ காற்றுதான். உயிர்க்காற்றுகளின் தூய்மையை அழுக்காக்கும் சனாதனப் பண்டிகைகள்தான் எத்தனை! வளர்ச்சி என்ற பெயரில் எழுந்த தொழிற்சாலை புகை போக்கிகள் எத்தனை! இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். இலைகள் பெரிதாய் என்ன கனவு காணமுடியும். இனியும் இந்த சூழல்கேடு சோகங்கள் நிகழக்கூடாதென்றுதானே காற்றிடம் கெஞ்சுகிறார் கவிஞர் மித்ரா.

காற்றே எழுப்பாதே
உறங்கட்டும் கனவு காணும்
இலைகள்"

மிக இயல்பான மொழியில் உருவான செந்தமிழினியனின் ஹைகூ ஒன்று யதார்த்தத்தை பறைசாற்றும்.

"அச்சுறுத்துகின்றது
நகரத்தின் வாழ்க்கை
மாசுபடிந்த காற்று"

'சுற்றுச்சூழல் கேடுகளால்
பேருந்தில் விற்பனையாகும்
தூயக் காற்றுப் பை

இயற்பியல், வேதியியல் முறைகள் மூலம் மாற்றம் அடைவதையே காற்று மாசுறுதல் என்கிறோம். மனிதர்கள் உயிர்வாழத் தேவையானது தூய்மையான காற்று.

தென்றல் மந்தமாருதம், கூதல், புயல் என எந்தப் பெயரில் அழைத்தாலும் தூய்மையானதாய், மாசுபடாததாய் இருக்க வேண்டுமென்பதே முக்கியம். ஆலைகளின் அழுக்குப்புகை மண்டலம், மனிதர்கள் விடுகின்ற சிகரெட், பீடி போன்றவற்றின் அசுத்தம், வேகவாகனங்களின் புகைக்கழிவு எனப் பல்வகைகளிலும் காற்றுமண்டலம் மாசுபடிந்து மனிதருக்கு கெடுவிளைக்கும் துயரத்தைச் சொல்கிறது வைகைச் செல்வியின் கவிதைத் துண்டு.

"புகைப் போக்கிகள்
நான்குதிசைகளிலும்
நச்சுக்காற்று தெளித்து.... நெளிந்து,
ஊடுருவி மனிதக்காற்றுகளை
மவுனமாய்த் தலைசாய்க்க
கத்தியின்றி..... ரத்தமின்றி..........
யுத்த மொன்று ஆரம்பம்

- (அம்மி பக் 62)

யதார்த்த சூழல்கள் ஒருபுறம் இருக்கட்டும், இங்குதானே வாழவேண்டியிருக்கிறது நாமும். அந்த நம்பிக்கைக் குரலை பதிவாக்குகிறார் அன்பாதவன்

வீசும் புயற்காற்றிலும்
விடியலில் கூவும்
சேவல்"

## ஆகாயம்

வான் என்பது பரந்தவெளி. பளிச்சென்ற சூரியன், பால்நிலா, மின்னும் தாரகைகள், பாடும் பறவைகள், அசையும் மேகங்கள் என அனைத்துக்கும் இடம் கொடுக்கும் பெருவெளித்திரை. ஆனால்



படிப்பகம்

www.padippakam.com

சூழல் மாசுக் கேடுகள் சிதைப்பதோ வானமண்டலத்தை. பூமியின் பாதுகாப்பு வளையமான ஓசோன் படலத்தை. கவிஞர் அபியின் கவிதையில் வெளிப்படு கிறது ஆகாயம் மீதான பரிவும் அக்கறையும்

விஷப் புகை மேவிய வானம்
மூச்சுக்குத் தவிப்பது தெரிகிறது
அறிந்தவைகளின் மறுபுறங்கள் திரண்டு
மின்னி இடித்து வெறியோடு வருகின்றன
அடர்வனங்களின் குறுக்கும் நெடுக்குமாக
ஆவேசக் காட்டாறுகள் பதறி ஓடி
வாழ்வைப் பயிலும்
உண்டு-இல்லை என்பவற்றின்மீது
மோதிச் சிதறி அகண்டம்
ஒரு புதிய விரிவுக்கு தயாராவது புரிகிறது *(10)*

வானந்தரும் கவிதை உணர்வுகளோ அபாரம், அந்த வெளிப்பாடுகளோ தனி ரகம். கவிதைகள் தரும் ஆகாயத்தை காயப்படுத்துகிற நம் நவீன அறிவியலின் ஒருத்துளி

முறுக்கிய கயிறு,
தளர்கிறதே
ஜெட்புகை
*- மித்ரா*

பல்கிப் பெருகும் இச்சூழல்கேட்டுக்கு மாற்றுண்டா.......... மாசுக் கேட்டுக்கு மருந்துண்டா. விடிவுண்டா கவிஞர் நித்திலன் வழி சொல்கிறார்

"பசுமையை விரும்புவோர்
வயல்வெளிக்கு வருக
நதியை விரும்புவோர்
சிகரத்தில் நிற்க வேண்டா
முழக்கத்தை விரும்புவோர்
இசைப் பாடல் நிறுத்துங்கள்"

ஒவ்வொரு தனிமனிதனுக்கும் சூழல் பற்றிய அக்கறை வேண்டும். சூழல் காக்க ஒவ்வொருவரும் ஒரு மரமாவது நடவேண்டும்

ஓசோன் படலக் கிழிசல்
தைக்க ஊசிகள் புதிதாய்க்
கண்டுபிடி
ஓலம் எதற்கு?
உன் உள்ளங்கையில்
உலக உருண்டையை நீ தாங்கு"
*- என்கிற கவிஞர் தாரபாரதியின் வரிகளை*

தாரக மந்திரமாய் மனிதர் நெஞ்சில் பதித்தால் பூமி பிழைக்கும் செழிக்கும்.

## ஒலிமாசு

மனிதர்க்கு கேட்கும் சக்தி ஒரு குறிப்பிட்ட அளவே உண்டு. அந்த அளவில் கேட்பது மட்டுமே நன்மை பயப்பதாய் அமையும். ஆனால் மாறிவரும் நவீன வாழ்வுச் சூழலில் ஒலி, பேரொலியினால் ஏற்படக் கூடிய சப்த அலைகள் மானுடர்க்கு தீங்கு விளைவிப்பதாய் உள்ளது. நவீனஉலகில் தொழிற்சாலை, எந்திரங்கள், விமானங்கள், வேக வாகனங்கள், ஒலிபெருக்கிகள் தொலைக்காட்சி, பண்டிக்கைகால வெடிகள் மற்றும் வாணவேடிக்கைகள் போன்றவைகளால் செவிகள் சந்திக்கும் சிரமங்கள் ஏராளம்!

"கருக்கலுக்கு முன்னே எழுப்புகிறதென்னை
ஒரு பறவையின் இசை
நிச்சயமாய் பட்சியது கரைக்கிறது
தன்னை நாளொன்றிலும் சங்கீதப் பயிற்சியில்
தெரியுமதற்கு வானூர்தி, மின்ரயில், பேருந்து
இரைச்சலோடு வாழ்வை கடத்தும்
மாநகரமென விடிந்தபின் வெடித்துக்
கிளம்பும் பேரோசைகளில்
சாதகம் செய்வது இயலாதென்பது
*- (அன்பாதவன்)*

பறவைக்குத் தெரிந்த உண்மை மனிதர்க்கு தெரியாமல் போனதில் நட்டம் யாருக்கு? என்பதை உணராமலே மேலும் மேலும் மனிதர் ஒலிமாசுக் கேட்டினை உண்டாக்கி அமைதியை சிதைப்பது தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

## சில வித்தியாசமான பார்வைகள்

இயற்கைக்கு எதிராக நாம் விளையாடிய பரமபத விளையாட்டில் உயர்த்திவிடும் ஏணிகள் அல்ல; கொத்திக் கீழிறக்கும் பாம்புகளே நமக்கு வாய்த்திருக்கிறது.

பிராணிகள், பறவைகள், காட்டு உயிர்கள் நமக்கு சமச்சீரான இயற்கை வாழ்வைத் தருபவை என்ற கருத்தைப் புறந்தள்ளிவிட்டு, இயற்கை நமக்கு பாதுகாப்பு தருவதையும் புறக்கணித்தாகிவிட்டது. இதன் மறுபுறம் பேரழிவுகள், வியாதிகள் என நிச்சயமில்லாத வாழ்வைப் பெற்றுள்ளோம் என்கிற சூழலியல் ஆர்வலரும் எழுத்தாளருமான சுப்ரபாரதி மணியனின் கருத்துக்கள் நம் கவனத்துக்கானவை.

அய்ம்பூதங்களைப் பற்றிய அக்கறையோடு எழுதப்பட்ட பல கவிதைகள் தன்னளவில் சூழலியல் குறித்த வித்தியாசமான பார்வைகளைக் கொண்டு நேரடியாகச் செய்திகளை சொல்பவையாய் அமைந்திருப்பதை இங்கு காணலாம்.

அவசர உலகம்
அச்சம் முழுதும் உயிரோடு
அணு யுத்தம் *- ஆரிசன்*

●

பூச்சி மருந்துத் தெளிப்பு
உடன் மடிந்தது பூச்சி
தவணையில் மனிதன்
*- மா. தமிழ்ப்பரிதி*



படிப்பகம்

www.padippakam.com

கரிசல் காட்டில்
கலர்ப்பஞ்சு வெடிக்கிறது
சாயத்தண்ணிர் கலப்படம்

- சண்முகம்

விளைநிலமெங்கும்
கான்கிருட் காடுகள்
ஏக்கத்துடன் மாடுகள்

- இரா. நாகராஜன்

எரியும் புகை
மூச்சடைக்கும் துர்நாற்றம்
சூழல் பாதிப்பு

- மித்ரா

## இறுதியாக சில வார்த்தைகள்

சூழலியல் குறித்த தமிழ்க் கவிஞர்களின் அக்கறையும், சமூக உணர்வும் பிரமிக்க வைப்பவை. பெரிய கட்டுரைகள், பிரம்மாண்ட நூல்கள் செய்ய முடியாத பெரும் பணியை தங்களின் அற்புதமானக் கவிச்சிந்தனைகள் மூலமாக கவிஞர்கள் ஆற்றியிருப்பது பாராட்டுக்குரியது.

"இந்த இருபதாம் நூற்றாண்டு, ஜனநாயத்துக்கு உகந்ததாகஇல்லை. அழகியல், சற்றும் யாருக்கும் சொந்தமில்லாத இடத்தில் சென்று அமர்ந்து கொண்டுள்ளது. உள்ளீடற்ற நீர்க்குமிழி போலிருக்கும் ஒரு அபாயகரமான காலக்கட்டத்தில் நாம் வாழ்கிறோம். இந்த காலக்கட்டத்தில் அறிவுஜீவிகளுக்கும் ஒரு கடமை முன்னெழுந்து நிற்கிறது" என எச்சரிக்கும்.

கலைவிமர்சகர், இந்திரனின் எச்சரிக்கை வார்த்தைகள் எழுதுபவர்கள் அனைவருக்கும் ஏற்புடையன. அணுவைப்போல ஆற்றல்மிகுந்த மேற்கண்ட சூழலியல் குறித்த தமிழ்க் கவிதைகளை வெறும் வார்த்தை அடுக்குகளாய்க்கருதாமல், வாழ்க்கைப் பதிவுகளாய் எண்ணி, பொறுப்போடு எழுதுவது மட்டுமல்ல கவிஞனின் கடமை. கூடவே, இந்த சிந்தனைகள் வெகுமக்களிடம் பரவும் வகையில் கொண்டு செல்லப்பட வேண்டும்.

## துளிர்க்கட்டும் பசுமை

நாகரீகத் தொட்டில் ரசிக்க நேர்க்கோட்டில்
வந்தன கிரகங்கள் அய்ந்து,
பூமியின் பேரழிவு நாளதிகமில்லையென
அதிர்ந்து புரிந்து அவசரமாய் விலகின
தோல்கழிவுகளால் பாலாறு கோளாறாக..........
மணல் லாரி கற்பழிக்க தென்பெண்ணை கதறியழும்
சாயத்தொழிலின் சகதியழுக்கில் நொய்யல் அமராவதி
நொடிந்து அழகிழக்கும்
அழகரும் இறங்கவியலாமல்
நச்சுப் பொய்கையாய் வைகை
மணலோடும் தடம்பார்த்து மனங்குமையும் காவேரி
பாறைவெடிகளில் குறிஞ்சி சிதற
தேடுதல் வேட்டையில் முல்லை சுருங்கி
கழிவுகளின் சேர்க்கையில் நெய்தல்
நிறமிழக்கும் பயிர்காய உயிர்மாய
மழைவானம் பார்த்தேங்கும் மருதம்
அணுகுண்டு சோதனை அதிர்வில்
மணல்தூற்றி ஓலமிடும் பாலை
ஊற்றுநீரை உள்ளங்கை குளிர
அள்ளிச்சுவைத்த மனிதரின்று
பாட்டில் நீருக்குப் பணிந்த நாகரீக அவலம்
நெகிழிக் குப்பைகளால் திணறித் தவிக்கும் இயற்கை
ஓசோன் கிழிந்து பூமி பொசுங்க
அமிலமழை பொழிந்து நிமிடங்கள் நெருப்பாகும்
அய்ம்பூதநலமும் அய்ந்திணையின் வளமும்
மறந்த பூமியை நோக்கி
உக்கிரத்தோடு வருகிறதொரு
எரிகல்

மாசுக்கேட்டின் அபாயத்தை, சுற்றுச் சூழல் கெட்டுப் போகும் துயரத்தை எளிய மக்களிடம் எடுத்துச் சொல்லப்பட வேண்டும். பேருந்துகள், ரயில்களில் ஒட்டப்படும் ஸ்டிக்கர்களில் ஹைக்கூக்களைப் பதிக்கலாம். மாசுக்கட்டுப்பாடு வாரியம், தொலைக்காட்சிகள், வானொலி, பத்திரிக்கைகள் போன்ற ஊடகங்களும், நிறுவனங்களும் இது போன்ற கவிதைகளை பயன்படுத்தி பெரும்பான்மையான மக்களிடம் சூழல் மாசுக் குறித்த சிந்தனைகள் சென்று சேர வழிவகைகள் செய்யப்பட வேண்டும். அந்த வகையில் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் 2003ல் நடத்திய சூழலியல் கவிதைக் கண்காட்சியும் கவிஞர் வைகை செல்வி தொகுத்த

**நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே**

சூழலியல் கவிதைத் தொகுப்பும் குறிப்பிடத்தகுந்தது. சமீபத்தில் சுற்றுச்சூழல் பிரச்னைக்கென தொடங்கப்பட்ட **வானகமே....வையகமே....** என்ற சிற்றிதழின் தேவை தவிர்க்கவியலா ஒன்று.

கல்மரங்களும் பூக்கும் என்ற நம்பிக்கையில் காத்திருக்கும் பறவைகளைப் போல தொடரும் நம் பயணத்தில் தெரியக்கூடும் நன்னம்பிக்கைமுனை.

தோள் கொடுத்த துணை நூல்கள்

1. கடைசி டினோசர்-தேவதச்சன் 2, உயிர்மை - செப்டம்பர் 2003, 3. கவிதையெனும் மொழி-தி.சு.நடராசன், 4. பாரதியார் கவிதைகள் 5. இலக்கியச் சாளரம்- ஆய்வுக்கட்டுரைகள்-சி.பா.சு தமிழ்க் கல்லூரி, மயிலம், 6..7.கடவுளுக்கு முன் பிறந்தவர்கள் (ஆதிவாசிக் கவிதைகள்) மொ.பொ.கவிஞர் இந்திரன், 8. நிற்பதுவே.. நடப்பதுவே.. பறப்பதுவே.. (தொகுப்பு)கவிஞர் வைகை செல்வி, 9. பூதித் தொட்டில்-நெல்லை சு.முத்து, 10. அபி கவிதைகள் -அபி, 11. தற்காலத் தமிழ்க் கவிதைகள்-ஒரு பார்வை- அன்பாதவன் 12. கவிதையின் திசைகள் - அன்பாதவன் 13, நெருப்பில் காய்ச்சிய பறை-கவிதைகள்-அன்பாதவன் 14. பதிவுகள்.காம்-நவம்பர் 2005 15. நடவு(12)-சிற்றிதழ்



படிப்பகம்

www.padippakam.com



● அ. ராமசாமி

# கவனிக்கப்படுதலின் பின்னணிகள்

தகவல்களும் நிகழ்வுகளும் சேர்ந்துதான் வரலாற்றை உருவாக்குகின்றன. சொல்லப் படும் தகவல்களும் நடக்கின்ற நிகழ்வுகளும் நேர்மறை வரலாற்றை உருவாக்கவா? எதிர் மறை வரலாற்றை உருவாக்கவா? என்ற கேள்வியைக் கேட்டுக் கொள்ளவேண்டி யது அதில் பங்கேற்பவர்களின் தன்னுணர்வு சார்ந்த ஒன்று. இன்னும் சொல்வதானால் பங்கேற்கிறவர்களின் நோக்கம் சார்ந்தவை களும் கூட.

தலித் இயக்கங்களின் தீவிரத்தனம் தொடங்கி இருபது ஆண்டுகள் நெருங்கிக் கொண்டிருக்கின் றன. தலித் அரசியல் அல்லது இயக்கங்களின் தீவிர மும் அதனால் உண்டான முரண்பாடுகளும் இன்று ஒட்ட முடியாத அளவிற்கு விலகி விலகிச் சென்று கொண்டிருக்கின்றன. ஒரு மரம் கிளைகளாகப் பரவு தல் வளர்ச்சியின் அடையாளம்; ஒரு மரத்தில் கிளை கள் வெட்டப்பட்டு அதே மரத்தின் எண்ணிக்கை கூடு வது கூட வளர்ச்சியின் பெருக்கம்தான். ஆனால் கிளை கள் வெட்டப்பட்டு ஒட்டுமரங்களாக ஆக்கப் படுவ தில் இந்த மரம் தன் அடையாளத்தை இழந்துபோகும் வாய்ப்புகள் உண்டு. தக்கவைக்க வேண்டிய அடை யாளத்தையும் விலக்கப்பட வேண்டிய குணத்தையும் மரம் தீர்மானிக்க முடியாது. ஒட்டு மரங்களை உரு வாக்க நினைக்கும் நபர்கள்தான் தீர்மானிக்கிறார்கள்.

அரசியல் தளத்தில் நடக்கும் முயற்சிகள் எத் தகையன என்று அறுதியிட்டுச் சொல்ல முடியவில்லை. ஆனால் கலை இலக்கியத் தளங்களில் நடப்பவை குறித்துக் கவனத்தைச் செலுத்த முடிகிறது. அரசியல் தளம் வெளிப்படையாக இருப்பதும் பண்பாட்டுத் தளம் வெளிப்படைத்தன்மையை மறைத்துக்கொண்டு ரகசிய வழிகளைப் பின்பற்றுவதும்கூட காரணமாக இருக்கலாம். ஒன்றில் வெளிப்படைத்தன்மை அதிக ஆபத்தில்லாதது என்று கருதலாம். ஆனால் ரகசியத் தன்மை அப்படிப்பட்டது அல்ல. ஏனெனில் வெளிப் படைத்தன்மை வெற்றி அல்லது தோல்வி என்பதை உடனடிப் பலனாகக் கண்டறிந்து விடும். ஆனால் ரகசியங்களும் அதன் பின்னணியில் இருக்கும் வேலைத் திட்டங்கள் அல்லது சதித் திட்டங்கள் அவ்வளவு சுலப மாக எதையும் ஒத்துக்கொள்ளாது. தோல்வியைக் கூட வெற்றி என்பதுபோலக் காட்ட அந்த ரகசியத் தன்மை தொடர்ந்து பயன்பட்டுக் கொண்டே இருக் கும். இப்படிச் சொல்லும் இந்த முடிவு. தனிநபர் சார்ந்த முடிவு மட்டுமல்ல. பொதுத்தளத்தில் செயல் படும் இயக்கங்களுக்கும்கூடப் பொருந்தக் கூடியது தான். வரப்போகும் தேர்தல் தரப்போகும் பாடங்கள் அரசியல் தளச்செயல்பாட்டை வழிநடத்தக் கூடும்.

இங்கே சொல்லப்படும் தகவல்களும் விவரிக் கப்படும் அரசியல் தளம் சார்ந்தன அல்ல. கலை இலக்கியத் தளம் சார்ந்தன. அந்த வகையில் எல் லோருக்கும் பொதுவானவை என்று சொல்ல முடியா தவை. ஆனால் எல்லாரும் கவனிக்க வேண்டியதும் கருத்துச் சொல்ல வேண்டியதும் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. அதிலும் தலித் இலக்கியம், தலித் கருத் தியல் எனச் செயல்படும் தளத்தினர் கட்டாயம் கவ னிக்க வேண்டியது.

இலக்கியத் தளத்தில், அதிலும் குறிப்பாகச் சிறு பத்திரிக்கைத் தளத்தில் தலித் இலக்கியமும் தலித் விமரிசனமும் கவனிக்கப்பட்ட அளவையும் வீச்சை யும் குறைத்து மதிப்பிட்டு விடமுடியாது. அலையென எழுந்த அந்த வீச்சு தீவிரமாகக் கவனிக்கப்பட்டது. விவாதிக்கப்பட்டது. கலை இலக்கியத் தளத்தில் செயல் பட தலித்துகளாலும் இயலும் என்பது நிறுவப் பட்ட நிலையில் கவிதைகள், கதைகள், நாடகங்கள், தன்வரலாறுகள் என அனைத்தும் அச்சிடப்பட்டன. முழுமையாக கவனிக்கப்படுவதற்கும் அதற்குரிய பங் கைப் பெறுவதற்குமான வாய்ப்பு என கருதப்பட்டது. எழுதப்பட்ட அந்த எழுத்துக்கள் அச்சிடப்பட்ட தின் விளைவாக பரவலாகச் சென்று போராட்டத்தின் கருவியாக ஆக்கப்படும் என்பது நேர்மறை எதிர் பார்ப்பு. ஆனால் நடப்பது அப்படியான வளர்ச்சியாகத் தெரியவில்லை. தொகுக்கப்படுவதி லும், அச்சிடப்படுவதிலும் செயல்படும் அகக்காரணி களும், புறக்காரணிகளும் உண்டாக்கும் ரசசியம் அவற்றை கருவியாக மாற்றுவதற்குப் பதிலாகப் பண்ட மாக மாற்றும் பின்னணி கொண்டதோ என்று சந்தே கிக்க வேண்டியுள்ளது. பண்டம் பயன்படும் பண்ட மாக இருப்பதில் தவறொன்றுமில்லை. உருவாக்கிய வனிடமிருந்து வாங்கிப் பெட்டியில் அடைத்துத் தருபவனுக்கு லாபம் சேர்க்கும் என்றால் எதிர்மறை விளைவைத் தானே உண்டாக்கும்.

தலித் இலக்கியங்களும் தலித் விமரிசனங்களும் பல்வேறு பதிப்பகங்களின் விற்பனைக்குரிய சரக்காக மாறிவிட்டது. விற்பனைப் பண்டமாக ஆக்கப்படும்



படிப்பகம்

www.padippakam.com

**படைப்புக்குள் கிடைக்கும் சாதி அடையாளங்களைப் பார்ப்பது அப்படைப்பை இன்ன சாதிப் படைப்பு என அடையாளப்படுத்துவதற்கல்ல என்பது உணரப்பட வேண்டும். அதற்கு மாறாக கிடைக்கும் சாதி அடையாளங்களின் வழி படைப்பாளி சாதி ஆதரிப்பவனா? எதிர்ப்பவனா? என்பதைச் சுட்டிக்காட்டத்தான் என்பது நிலைநாட்டப்பட வேண்டும்.**

நிலையில் தனிநபர்கள் மட்டுமே கவனிப்பார்கள் என்பதிலை. அதிலும் நிலவும் தாராளமயப் பொருளாதாரச் சூழலில் சந்தையில் கிடைக்கும் பொருட்களைத் தேவையானவர்கள் மட்டுமே வாங்குவார்கள் என்பதில்லை. காணத்தக்கதாகவும், புதியதாகவும் இருந்தால் வாங்கி வைத்துக் கொள்வதும், பயன்படுமா என்று பரிசோதித்துப் பார்ப்பதும், பயன்படுத்தத் தொடங்குவதன் மூலம் புதிய அடையாளத்தைப் பெறுவதும்கூட நவீன சந்தையின் வினைகள். பழைய வாரச்சந்தையில் வாங்கப்படும் பொருட்கள் அந்த வாரப் பயன்பாட்டுக்குரியன. ஆனால் இன்றைய நவீனச் சந்தையோ அப்படிப்பட்டது அல்ல. பயன் படுத்திவிட்டுத் தூக்கிப்போடும் பொருட்களாலும் (use and throw), ஆவணத்தன்மை (antique) பொருட்களாலும் நிரம்பியுள்ளன. தலித் இலக்கியங்கள் இதில் எந்த வகையான பண்டமாக இருக்கப்போகிறது என்பது இப்பொழுது அதன் படைப்பாளிகள் கையில் இல்லை. சந்தையைக் கட்டுப்படுத்தும் வியாபாரிகள் கைக்கு இடம் மாறிவிட்டது என்பது தனியாகச் சொல்ல வேண்டிய ஒன்றல்ல.

கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் பட்டங்கள் பெறுவதற்குத் தலித் படைப்புகள் கவனிக்கப்படுவதும் அவை குறித்த கட்டுரைகள் எழுதப்படுவதும் அதிகரித்துள்ளன. ஒருவிதத்தில் வரவேற்கத்தக்க நிகழ்வு. ஒதுக்கப்பட்ட மனிதர்களின் பிரதிகள் என்று ஒதுக்காமல் ஆய்வுக்குரியனவாகவும் விவாதத்துக்குரியனவாகவும் ஏற்கப்படும் மனநிலை நேர்மறைக் கூறுகள் கொண்டவை. இன்று பல கல்லூரிகளின் தமிழ்த் துறைகள் தேசிய கருத்தரங்குகளை நடத்திக் கொண்டிருக்கின்றன. அப்படி நடத்தப்படும் கருத்தரங்க அமர்வுகளில் தலித் இலக்கியம் சார்ந்த தலைப்புகளில் கணிசமாகக் கட்டுரைகள் வாசிக்கப்படுகின்றன. கவனம் பெற்றுள்ளது என்ற வகையில், ஏற்கப்படுகின்றன என்ற வகையில் மகிழ்ச்சி அளிக்கக் கூடிய நிகழ்வுகள்தான் அவை எல்லாம். அதே நேரத்தில் நடக்கும் விவாதங்கள் ஒற்றை மையத்தை நோக்கியே நிகழ்கின்றன என்பதும் சொல்லப்பட வேண்டிய ஒன்று.

தலித் விமரிசனத்தின் பல்வேறு பரிமாணங்களைப் புரிந்து கொள்ளாத நிலையில் படைப்பாளிகளின் படைப்புகளுக்குள் கிடைக்கும் சாதி அடையாளத்தைத் தேடுவதே தலித் விமரிசனத்தின் தலையாய பணியெனக் கருதிக் கொள்வது நடக்கிறது. சாதி ஆதிக்கக் கருத்தியலை ஆதரிப்பவனும், தக்கவைக்க நினைப்பவனும் சாதி அடையாளத்தோடுதான் எழுதுவான். அதனால் படைப்பாளியின் நோக்கம் என்ன என்ற பார்வையைத் தவிர்த்துவிட்டு, கிடைக்கும் தகவல்களை மட்டும் வைத்துக்கொண்டு படைப்பாளிகளை சாதி அடையாளப்படுத்தி விடுவது சில நேரங்களில் தவறான வாசிப்பாகக்கூட முடிந்து விடும். இலக்கிய இதழ் அல்லது தலித் ஆதரவு இதழ்கள் எனக் கருதும் இதழ்களிலேயே இத்தகைய வாசிப்புகள் மேற்கொள்ளப்பட்டு விமரிசனங்கள் முன் வைக்கப்படுகின்றன. அதன் தொடர்ச்சியாக கல்வித் துறை ஆய்வுகளில் அது ஒன்றுதான் தலித் ஆய்வின் நோக்கம் என்பதாக உணரப்பட்டு விவாதிக்கப்படுவதைப் பார்க்க முடிகிறது.

படைப்புக்குள் கிடைக்கும் சாதி அடையாளங்களைப் பார்ப்பது அப்படைப்பை இன்ன சாதிப் படைப்பு என அடையாளப்படுத்துவதற்கல்ல என்பது உணரப்பட வேண்டும். அதற்கு மாறாக கிடைக்கும் சாதி அடையாளங்களின்வழி படைப்பாளி சாதி ஆதிக்கக் கருத்தியலை ஆதரிப்பவனா? எதிர்ப்பவனா? என்பதைச் சுட்டிக்காட்டத்தான் என்பது நிலைநாட்டப்பட வேண்டும். இல்லையென்றால் தலித் விமரிசனத்தின் பலதளப் பரிமாணம் பின்னுக்குத் தள்ளப்பட்டு ஒற்றையடையாளத்தை தந்து ஒதுக்கப்படும் நிலை திரும்பவும் வந்துவிடும் ஆபத்து உண்டு.

இத்தகைய காரணங்களால்தான் தலித் தொடர்பான அனைத்துத் தளங்களும் நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றன என்று சொல்லத் தோன்றுகிறது. மைய நீரோட்ட அரசியல் தலித் இயக்கத்தை வெறும் சாதிக்கட்சி என முத்திரை குத்துவதிலிருந்து, தலித் இலக்கியம் சாதி இலக்கியம், தலித் விமரிசனம் சாதியைத் துப்பறிந்து கண்டுபிடிக்கும் விமரிசனம் என நீள்வது வரை இதனைச் சொல்லலாம். ஆக, கவனிக்கப்படுகிறது என்பதற்காக ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்று கருதிவிட வேண்டியதில்லை. நிராகரிப்பதற்காகக்கூடக் கவனிக்கப்படலாம். தொடர்ந்து கொள்ள வேண்டியன ஐயங்களும், விசாரணைகளும் மட்டுமே என்பதனை மறந்துவிடக் கூடாது.

●



படிப்பகம்

www.padippakam.com

● முனிமா

# கேள்வி-பதில்

**1. குடியரசு தலைவர் அப்துல் கலாம் பள்ளி/கல்லூரி மாணவர்களிடம் கனவு காணச் சொல்கிறார். இது அவர்களை ஊக்கப்படுத்தும் முயற்சி தானே !**

**- விழியன், சிதம்பரம்**

ஆம். ஆனால் நமது கனவுகள் மிகப் பெரி தாக இருக்க வேண்டும். காற்றைப்போல் தடையின்றி இருக்க வேண்டும். முதல் மார்க்கு வாங்குவது, காசு புரளும் வேலைக்குப்போவது என் பதை விட, விஞ்ஞானியாக, மருத்துவ ராக, தான் விரும்பிய துறையில் நிபுணத்து வம் பெற வேண்டும் என்பதுதான் அவர்கள் கனவாக இருக்க வேண்டும்.

நிலமில்லாத விவசாய கூலி களின் கனவு மிஞ்சிப்போனால் ஒரு ஏக்கர் நிலம்! சின்னசிறிய இக்கனவு பலிதமாக இந்நாட்டின் சட்டத்தைத் திருத்தும் அதிகாரம் படைத்தவராக மாறவேண்டும். ஆகையால் அவர்கள் கனவு சாதி நிலபிரபுத்துவத்தை ஒழிக் கும் பெரிய கனவாக மாற வேண்டு மல்லவா?

**2. "தன்னை அறிதல்" என்றால் என்ன?**

**- சத்தியராஜ், புதுப்பட்டி**

உள்ளிழுக்கும் காற்று, காலூன்றி நிற்கும் மண், இவையில்லாமல் நாம் இல்லை. "தன்னை அறிதல்" என்பது இப்பெரிய அண்டத்தில் நாம் இயங்கும் விதம் பற்றியதுதான்.

**3. துன்பமின்றி வாழ வழி கூறுங்களேன்!**

**- பிரபு, வேலூர்**

இன்ப துன்பங்கள் உலகத்தி யற்கை. இவை இரண்டிலும் முழ்கி விடாமல் நிற்பதே நம் முயற்சி. நண்பர் ஒருவரிடம் துன்பம் விளை விக்கும் தொடர்புகளைத் தவிர்த்து விடுங்கள் என்று கூறினேன். அதிலிருந்து அவர் என்னைப் பார்ப்பதையே தவிர்த்து விட்டார்(!).

**4. ஏன் பெண்களுக்கான அரசியல் கட்சி இதுவரை உருவாகவில்லை?**

**- செல்வம், மானாமதுரை**

கல்வி, அரசியல் விழிப்புணர்வு, சார்பின்மை எப்போது அடித் தட்டுப் பெண்களுக்கும் சேர்கின்றதோ, அப் போது உருவாகும்.

**5. கூட்டணி ஆட்சி தமிழகத்தில் உருவாகுமா? கூட்டணி ஆட்சிதான் தமிழகத்தின் நுண் அரசியல் வெளிபாடு என்று நான் நம்புகிறேன்.**

**- பரிதி, ஆம்பூர்**

அந்தந்தப் பகுதி மக்கள் தங் கள் சாதி வெறியோடு, பதவிகளை குடும்ப வாரிசுகளுக்கு அளிக்கும் எண்ணத் தோடு, அதிகாரத்திலிருந்து கொண்டு வசதி வாய்ப்புகளை வேறு சிலருடன் பங்கிட்டுக் கொள்ளவே தற்போதைய கூட்டணி அரசியல் பாடுபடுகின்றது. சாதியின் பெயரால் பழைய கால குறு நில மன்னர்கள் தான் இதன் மூலம் உருவாகின்றார்கள். பெருவாரி யான மக்கள் கல்வியறிவு, அரசியல் விழிப்பு ணர்வு பெறும்போது தான் தமிழகத்தில் "நுண் அரசியல்"கால் கொள்ளும்.



படிப்பகம்

www.padippakam.com

# கேள்வி-பதில்

**6. நடக்கவிருக்கும் 2006 சட்ட மன்ற தேர்தல் குறித்து உங்கள் கணிப்பு என்ன?**

**- சீனிவாசன், சென்னை- 47**

கணிப்புகள் சிறந்த ஆய்வுகள் மூலமே உருவாகும். தொடர்ந்து ஆட்சி மாற்றத்தை மக்கள் விரும்புகிறார்கள் என்பது தான் என் கணிப்பு. ஏனென்றால் மக்கள் தொடர்ந்து அதிருப்தியுடன் இருக்கிறார்கள். அரசின்மீதுள்ள அதிருப்தி வைகோ, திருமா இவர்களின் சேர்க்கையால் குறைந்து விட்டதா என்ன?

**7. INFORMATION TECHNOLOGY யின் மூலம் சிறந்த அரசியலை உருவாக்க முடியுமா?**

**- பிரிட்டோ, ராஜபாளையம்**

கருவி மாற்றம் ஆட்சி மாற்றத்திற்கு வழி வகுக்கலாம் கூட, கருவிகள் முறையான பயன்பாட்டிற்கு வரும் போது. அதன் பயன்பாடு பரவலாகும் போது. தற்போது கள்ள ஓட்டுக்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இது சிறிதளவு ஆறுதலை அளிக்கின்றது.

**8. மகளிர் சுய உதவிக்குழுக்கள் திறம்பட செயல் படுகின்றனவா?**

**- ரம்யா, வத்திராயிருப்பு**

வேறு மாநிலங்களைக் காட்டிலும் இங்கு மகளிர் சுய உதவிக்குழுக்கள் மிக விரைவில் அதிக மாக அமைக்கப்பட்டுள்ளன. மிகச்சில குழுக்கள் சுழல் நிதியோடு ரூ. 5 லட்சம் வரையில் கடன் பெற்றுள்ளன. பல குழுக்கள் சுழல் நிதியோடு தேக்கம் அடைந்துள்ளன. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படும் வகையில் இக்குழுக்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது. அரசியல் விழிப் புணர்வு குறைந்த அளவிலேயே உள்ளது. எடுப்பார் கைப்பிள்ளைகளாக உள்ளனரோ என்ற அச்சமும் உண்டு.

**நிலமில்லாத விவசாய கூலிகளின் கனவு மிஞ்சிப்போனால் ஒரு ஏக்கர் நிலம்! சின்னசிறிய இக்கனவு பலிதமாக இந்நாட்டின் சட்டத்தைத் திருத்தும் அதிகாரம் படைத்தவராக மாறவேண்டும். ஆகையால் அவர்கள் கனவு சாதி நிலபிரபுத்துவத்தை ஒழிக்கும் பெரிய கனவாக மாற வேண்டுமல்லவா?**

**9. இடது சாரிகளை புதிய கோடாங்கி கடுமையாக விமரிசிப்பதாகத் தோன்றுகிறது.**

**- மணிபாரதி, திண்டுக்கல்**

இவ்விமரிசனங்களுக்கு முற்றிலும் தகுதியானவர்கள் அவர்கள். மாறுவேசங்களில் உலாவரும் திராவிடக் கழகத்தவர்களே அவர்கள்!

**10. தலித்துகளுக்கு ஆதரவு சக்திகள் யார் ?**

**- தமிழன், செங்கை**

தங்கள் எதிரிகள் யார் என இனங்கண்டு கொண்டாலே போதாதா?.



படிப்பகம்

www.padippakam.com

மார்ச்- 13, 2006

## தலித் நில உரிமை இயக்க கோரிக்கைப் பேரணி

| ஆர்ப்பாட்டம் நடைபெற்ற வட்டாட்சியர் அலுவலகம் | மாவட்டம் | ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை யேற்றோர் |
|---|---|---|
| 1. பொள்ளாச்சி<br>2. உடுமலை | கோயம்புத்தூர் | காந்தி ஆசிரமத்தைச் சேர்ந்த ரங்கநாதன் மற்றும் ஜெகதீசன்<br>சுகந்தி, பால்நிலா, நேசமணி. |
| 3. கடலூர்<br>4. பண்ருட்டி | கடலூர் | இருளர் பாதுகாப்பு சங்கம்<br>இருளர் பாதுகாப்பு சங்கம் |
| 5. தர்மபுரி<br>6. பாப்பிரெட்டி பட்டி | தர்மபுரி | புத்தமணி, சிவநாதன்.<br>சிவாஜி, ஆண்டியப்பன், கஸ்பார் ராஜேந்திரன் |
| 7. திண்டுக்கல்<br>8. நிலக்கோட்டை<br>9. ஒட்டன் சத்திரம்<br>10. வேடசந்தூர் | திண்டுக்கல் | (செடா) சாந்தி (பீஸ்) சாந்தி<br>எட்வின் செல்வம்<br>ஜெயராணி<br>பழனிச்சாமி<br>தலித் சிவா |
| 11. ஈரோடு<br>12. தாராபுரம் | ஈரோடு | சக்திவேல்<br>சென்னியப்பன்<br>சக்திவேல்<br>சென்னியப்பன் |
| 13. செய்யூர் | காஞ்சீபுரம் | ப. சின்னையன்<br>சுப்ரமணியன் |
| 14. அரவக்குறிச்சி | கரூர் | கிருஷ்ணவேணி<br>தங்க ராஜ்<br>டெல்பின் |



படிப்பகம்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| 15. கரூர்<br>16. கிருஷ்ணராயபுரம்<br>17. குளித்தலை | கரூர் | சங்கப்பன்<br>மகாமுனி<br>பாக்கியம்<br>பாரதி, கரிகாலன், செந்தில் குமார், வாசுதேவன், காமராஜ்<br>மணிவேல் மஞ்சுளா<br>ராஜசேகர் |
| 18. ஊத்தங்கரை | கிருஷ்ணகிரி | தீர்த்தகிரி<br>கண்ணதாசன் |
| 19. மதுரை (வடக்கு)<br>மேலூர்<br>வாடிப்பட்டி | மதுரை | ராதாகிருஷ்ணன்<br>மலைச்சாமி<br>அருள்மொழியன் |
| 20. பெரம்பலூர்<br>21. குன்னம்<br>22. வேப்பந்தட்டை | பெரம்பலூர் | கங்கா<br>பழனிச்சாமி,<br>ராமர்<br>அண்ணாதுரை<br>மோகன்ராஜ் |
| 23. ராமநாதபுரம்<br>24. திருவாடனை | ராமநாதபுரம் | ராஜமாணிக்கம் ,<br>கண்ணதாசன்<br>சந்தனமேரி<br>பாண்டி |
| 25. தேவ கோட்டை<br>26. காரைக்குடி<br>27. மானா மதுரை | சிவகங்கை | வெரோணிக்கா<br>ஜான்சி<br>நாகராஜ்,<br>திரவியம் |
| 28. ஆண்டிபட்டி<br>29. பெரிய குளம்<br>30. உத்தமப்பாளையம் | தேனி | முருகேசன்,<br>குருவத்தாய்<br>சின்னையா<br>ஜீவபானு, பிரேமா |



படிப்பகம்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| 31. கும்மிடிப்பூண்டி | திருவள்ளூர் | அருண்குமார் |
| 32. பள்ளிப்பட்டு | | இன்பக்குமார், தெக்கலூர் முனுசாமி |
| 33. பொன்னேரி | | வினோத், இளஞ் செழியன் |
| 34.திருத்தணி | | வழக்கறிஞர்லோகா பிராமான், தலித் எம். பழனி |
| 35. ஊத்துக்கோட்டை | | அருண்குமார் |
| 36. ஆரணி | திருவண்ணாமலை | வழக்கறிஞர் முருகேசன் |
| 37. செங்கம் | | காமராஜ் |
| 38. போளூர் | | சிவக்குமார் |
| 39. திருவண்ணாமலை | | முத்துசாமி |
| 40. வந்தவாசி | | ராமச்சந்திரன் |
| 41. அம்பா சமுத்திரம் | திருநெல்வேலி | செல்வக்குமார் |
| 42. நாங்குநேரி | | சுந்தர், பிரபாகரன் |
| 43. பாளையம் கோட்டை | | இலோசியஸ் |
| 44. ராதாபுரம் | | ஆனந்தராஜ் |
| 45.சங்கரன் கோவில் | | கென்னடி |
| 46. சிவகிரி | | சிவக்குமார் |
| 47. திருநெல்வேலி | | இலொசியஸ் துரைராஜ் |
| 48. ஒட்டப் பிடாரம் | தூத்துக்குடி | லூயிஸ் மேரி |
| 49. தூத்துக்குடி | | ஆறுமுக நயினார் |
| 50. திருச்செந்தூர் | | பேச்சிமுத்து |



படிப்பகம்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| 51. அரக்கோணம் | | வீரராகவன்,<br>மோகன்,<br>ராஜ்,<br>ரகு |
| 52. காட்பாடி | வேலூர் | கே. கே. ராஜா |
| 53. திருப்பத்தூர் | | ஜெயா,<br>அன்பு |
| 54. வாணியம்பாடி | | கஜேந்திரன் |
| 55. செஞ்சி | | வழக்கறிஞர் பூபால் |
| 56. திண்டிவனம் | விழுப்புரம் | பா. இளங்கோவன் |
| 57. விழுப்புரம் | | சிறுவாலை நாகராஜ் |
| 58. திருக்கோயிலூர் | | லட்சாதிபதி<br>வே. வேலு |
| 59. வானூர் | | முருகன் |
| 60. காரியாபட்டி | | முத்து கிருஷ்ணன் |
| 61. ராஜ பாளையம் | | சக்தி வேல் |
| 62. சாத்தூர் | விருதுநகர் | அண்ணாதுரை |
| 63. சிவகாசி | | ராஜ கோபால் |
| 64. விருதுநகர் | | பாக்கியராஜ் |
| 65. ஆவுடையார் கோயில் | | இருதய மேரி |
| 66. புதுக்கோட்டை | புதுக்கோட்டை | கருப்பையா |
| 67. குளத்தூர் | | ஆரோக்கிய சாமி |
| 68. மணமேல் குடி | | முருகன் |



படிப்பகம்

www.padippakam.com

# தலித் நிலவுரிமை இயக்கம் கோரிக்கைப் பேரணி

## மார்ச் 13-2006









திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி வட்டம் மார்ச் 13 அன்று மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர் திரு. முரு கேஷ் அவர்கள் தலைமையில் ஆர்ப்பட் டம் மற்றும் பேரணி நடை பெற்றது. காவல்துறையினரின் மிகுந்த பாதுகாப் பிற்கு இடையே நடைபெற்ற இந்த பேரணியை இயக்கத்தைச் சேர்ந்த அனை வரும் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டது மிகுந்த பாராட்டு தலுக்கும் வியப்பிற்கும் உரியது.



படிப்பகம்

www.padippakam.com

# தலித் நிலவுரிமை இயக்கம் கோரிக்கைப் பேரணி

## மார்ச் 13-2006





திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, ஊத்துக்கோட்டை, தாலுகா அலுவலகங்கள் முன்பு மார்ச் 13 அன்று மாவட்டப் பொறுப்பாளர் திரு. அ. வினோத் அவர்கள் தலைமையில் ஆர்ப்பட்டம் மற்றும் பேரணி நடைபெற்றது. திரு. இளஞ்செழியன் அவர்கள் பேரணியை ஒருங்கிணைத்து நடத்தினார்.

# தலித் நிலவுரிமை இயக்கம் கோரிக்கைப் பேரணி

## மார்ச் 13-2006





பெரம்பலூர் மாவட்டம் பெரம்பலூர் தாலுகா அலுவலகத்தின் முன்பு மார்ச் 13 அன்று மாவட்டப் பொறுப்பாளர் திருமிகு கங்கா, பழனிச்சாமி, ராமர் ஆகியோர் தலைமையில் ஆர்ப்பட்டம் மற்றும் பேரணி நடைபெற்றது.



படிப்பகம்

www.padippakam.com

● வை. சரண்யா

# அம்பேத்கர்

பார்ப்பனியத்தின்
வேறறுக்க
பௌத்தன் வழி பிறப்பெடுத்த
அறிவாயுதம்
அம்பேத்கர்

மூடத்தனத்தின் உச்சமாய்
செத்தமாட்டைத் தோலுரித்ததற்காய்
உயிரோடு தோலுரிக்கப்பட்ட தலித்துக்கள்.........

தொடரும்
மிருக நேயர்களின்
பண்பாட்டுச் செயல்...............

பூணூலணியாத
ஆதிக்க சாதிவெறியர்களின்
ச(ா)தியாட்டம்
வெண்மணி தொட்டு
தாமிரபரணி
மேலவளவு வரை
குருதி குடித்தும்
அடங்கிய பாடில்லை

ஒடுக்கப்பட்டும்
அழுத்தப்பட்டுக் கிடக்குமென்
தலித்துகளின்
பெண்களின்
மௌனம் உடைபடவேண்டும்
அம்பேத்கரியம் என்னும்
உயிராயுதத்தை
கையிலெடுக்க,
அனைவருக்கும் விடுதலைகிட்டும்



அண்ணலே!
உனது நூற்றாண்டு
தொட்டுத்தான்
உறங்கிக் கிடந்த
தலித் கூட்டம்
உனது விடுதலைக் குரலின்
அதிர்வில்,
விழித்தெழுந்தது..........

தேர்தல்களத்தில்
தொகுதிகளுக்காக
அணிகள் மாறும்
அரசியல் சூட்சுமத்துக்கிடையே
சிதைந்துகிடக்குமென்

தலித் போர்குரல்கள்
ஒத்திசைகையில்
அதிகாரப் பகிர்வென்பது
அரசியலில்
அடுத்த வெற்றியாய்
இருக்கும்.........

பஞ்சமி நில மீட்பும்
நிலஉரிமைப் போரும்
விடுதலைப் பயணத்தின்
அடுத்த வீச்சுகளாய்
தோழமைகளோடு
தொடரட்டும்.

அண்ணலே!
உனது நாளில்
வீறுகொண்டெழும் நாங்கள்
வென்றெடுப்போம்
தலித் விடுதலையை............

அதன்
விடியலைநோக்கிய
பயணிப்பில்
உனது சுவாசக் காற்றின்
வெப்பச் சூட்டை
சுமந்துகொண்டே.........

●

www.padippakam.com




ostal Regn No. TN/CC(S) Dn/250/06-08 Registrar of Newspapers for India Regn. No. TNTAM/2001/4926

படிப்பகம்